வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959    Reg. No. : P . 1632    விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu

Email : news@eelanadu.lk    மலர் : 03    17.04.2022 ஞாயிற்றுக்கிழமை    இதழ் : 132    பக்கங்கள் : 20





07 நாட்டை மீட்க ஒரு மாபெரும் சக்தி இலங்கையில் உருவாகிறதா?


08 யுக்ரேன் போர்: ரயில் நிலையத்தில் 50 பேரை கொன்ற ஆயுதம் எது?


09 ஈஸ்டர் தாக்குதல்: மூன்று ஆண்டுகள்! நீதியற்ற தேசத்தில் நாதியற்றவர்கள்!!


10 கடன் சூழ்ந்த இலங்கை!

# ஆட்சியை ஒரு வருடத்துக்கு தமிழர்களிடம் வழங்குங்கள்

## சிங்கள மக்களை கோருகிறார் செல்வம் எம்.பி.



கொழும்பு, ஏப்ரல் 17

நாட்டின் ஆட்சியை ஒரு வருடத்துக்கு தமிழ்த்தரப்பிடம் வழங்குங்கள். ஒரு வருடத்தில் இந்த நாட்டை நிமிர்த்திக் காட்டுகின்றோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கோரியுள்ளார். 19

# எரிபொருள் விநியோகம் திங்கள்கிழமை சீராகும்

கொழும்பு, ஏப். 17

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து எரிபொருள் பவுசர்களையும் உரிய ரேர்மினல்கள் மற்றும் களஞ்சியசாலைகளுக்கு விரைவாக அறிவிக்குமாறு 19

# நாணய நிதியத்துடன் பேச்சு; இன்று பயணமாகிறது குழு

கொழும்பு, ஏப். 17

நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் தலைமையிலான சர்வதேச நாணய நிதி 19

# ராஜபக்ஷ குடும்பம் ஒழிந்திருக்கின்றது!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, ஏப். 17

காலிமுகத் திடலில் இளைஞர்களின் போராட்டத்தை தடுத்து நிறுத்த அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் இளைஞர்களின் இந்த போராட்டம் காரணமாக ஜனாதிபதி உட்பட ராஜபக்ஷவினர் ஓடி ஒழிந்துக் கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி எங்கு போனர் 19

# நாட்டை விட்டு பஸில் வெளியேறவேயில்லை

## மறுக்கிறது விமான சேவை நிறுவனம்



கொழும்பு, ஏப். 17

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ நேற்று இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து தனியார் ஜெட் விமானத்தில் நாட்டை விட்டு வெளியேறினார் என வெளியான செய்தி களை இலங்கை வரையறுக்கப்பட்ட 19

# அமைச்சர் பதவி எனக்கு வேண்டாம்



கொழும்பு, ஏப். 17

எதிர்வரும் சில நாட்களில் நியமிக்கப்படவுள்ள அமைச்சரவைப் பதவியை ஏற்கப் போவதில்லை என முன்னாள் வர்த்தக 19

# இலங்கைத் தமிழர்களுக்கு உணவு விரைவில் அனுப்ப வசதி வேண்டும்

## ஜெய்சங்கரிடம் ஸ்டாலின் கோரிக்கை

சென்னை, ஏப்.17

இலங்கைத் தமிழர்களுக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்ப விரைவில் உரிய வசதி செய்து தரவேண்டும் என மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு எழுதிய கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து மத்திய அமைச்சர் ஜெய்சங்கருக்கு அவர் எழுதியுள்ள கடிதத்தில் -

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள தீவிர பொருளாதார நெருக்கடியினால் அத்தியாவசியப் பொருட்களின் கடும் விலை உயர்வு மற்றும் தட்டுப்பாடு காரணமாக இலங்கைத் தமிழர்கள் இயல்பு வாழ்க்கை



பாதிக்கப்பட்டு தமிழ்நாட்டை நோக்கி வரத் தொடங்கி உள்ளனர். இந்நிலையில் தமிழ்நாடு 19

# காலிமுகத்திடல் போராட்டத்தில் தமிழர்களும் பங்கேற்கவேண்டும்

## சிங்களக் கலைஞர்கள் அழைப்பு

கொழும்பு, ஏப். 17

எதிர்காலச் சந்ததியினருக்கான தாய்நாட்டைப் பாதுகாக்கும் வகையில் காலிமுகத்திடலில் இடம்பெற்றுவரும் அரச எதிர்ப்புப் போராட்டத்தில் இலங்கைவாழ் அனைத்துத் தமிழர்களும் கலந்து கொள்ளவேண்டும் என சிங்களக் கலைஞர்கள் உருக்க 19

# வடமராட்சி பகுதியில் மாணவி திடீர் மரணம்

## மருத்துவ பரிசோதனையில் கர்ப்பம் என்று கண்டறிவு

யாழ்ப்பாணம், ஏப். 17

வடமராட்ச்சியில் திடீர் உடல்நல பாதிப்பால் உயிரிழந்த மாணவி தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் அவர் கர்ப்பம் தரித்திருந்தமை கண்டறியப்பட்டுள்ளதாக 19

# பதவிக்காலம் முடியும்வரை ஜனாதிபதியாக தொடர்வேன்

## கோட்டாபய ராஜபக்ஷ திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 17

ஜனாதிபதி பதவிக் காலம் முடியும்வரை பதவியில் இருப்பேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தலைமையில் கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற முன்னாள் அமைச்சர்களுடனான சந்திப்பின் போதே அவர் இவ் 19

# சகல தமிழ்க் கட்சிகளையும் உள்ளடக்கி பொதுவான குழு

## நேற்றைய கூட்டத்தில் முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 17

நாட்டின் பொருளாதார நெருக்கடி தொடர்பில் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுவான குழு ஒன்றை அமைத்து அதனூடாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக தமிழ்த் 19

# யாழ்.நகரில் இன்று தீப்பந்த போராட்டம்

## காலிமுகத்திடலில் நடக்கும் போராட்டத்திற்கு ஆதரவாக

யாழ்ப்பாணம், ஏப். 17

ஜனநாயகத்திற்காக ஒன்றிணைந்த இளையோர்களின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை யாழ் .நகரில் மாபெரும் தீப்பந்தப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக ஜனநாயக ஒன்றிணைந்த இளைஞர்கள் அமைப்பு அறிவித்துள்ளது. 19

# இப்படியும் நடக்கிறது...!

அவர் ஒரு மூத்த ஊடகர். கொழும்பில் நீண்டகாலம் பணியாற்றிய அவர் தற்போது ஓய்வுநிலையில் இருப்பவர். அவருடன் பேசியபோது, தனது வீட்டில் மண்ணெண்ணெய்க்காக படும் அவலத்தை கூறி வருத்தப்பட்டார்.

எரிவாயு கிடைப்பதில் சிக்கல் ஏற்பட்டதைத் தொடர்ந்து நாட்டில் மண்ணெண்ணெய் அடுப்புக்களைத்தான் இப்போது மக்கள் பாவிக்கத் தொடங்கியிருக்கின்றனர். அதனால் மண்ணெண்ணெய்க்காக காத்திருக்கும் மக்கள் கூட்டத்தை ஒவ்வொரு எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் காணலாம்.

எரிபொருட்களை இறக்குமதி செய்ய டொலர்கள் இல்லாததால் நாடு எதிர்கொண்ட நெருக்கடியால், மின் தடையும், எரிவாயு (காஸ்) தட்டுப்பாடுமே மிக முக்கியமான நெருக்கடியை முதலில் மக்களுக்கு ஏற்படுத்தின.

பொருட்களின் விலை அதிகரிப்பு, சாமானியர்களை வெகுவாகப் பாதித்த அதேவேளை, நடுத்தர வர்க்கத்தினரை அதிகம் பாதித்தது இந்த இரண்டு விடயங்களும்தான்.

கொழும்பில் காலிமுகத்திடலில் தொடர்ந்து நடந்துவரும் போராட்டத்தில் இந்த நடுத்தர வர்க்கத்தினரின் பிரதிநிதிகளையே அதிகம் காணமுடிகின்றது.

நாடு இத்தகைய நெருக்கடியை எதிர்கொண்ட ஆரம்ப காலத்தில், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நிதி அமைச்சராகவும் பதவியிலிருந்தார். பின்னர், அவரது சகோதரர் பஸில் ராஜபக்ஷவை நிதி அமைச்சராக நியமித்தபோது, அவர் பதவியேற்றதும் எல்லாமே சரியாகிவிடும் என்று அவரது விசுவாசிகள் தம்பட்டமடித்தனர்.

ஏதோ அவர் வந்ததும் மஜிக் காட்டுவார் என்றார்கள். ஆனால், நடந்ததோ மறுபக்கம்.

பிரதமர் மஹிந்த, நிதியமைச்சராக பதவி வகித்த காலத்திலும் பஸில் ராஜபக்ஷ, தனது தனிப்பட்ட அலுவலகத்தை நிதி அமைச்சிலேயே வைத்திருந்ததும், அவரே அந்த அமைச்சின் அலுவல்களை கவனித்ததும் உள்வீட்டு விடயங்கள். ஆனால், கட்சியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்த பஸில், நிதி அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னரே அரசில் முக்கிய நிகழ்வுகள் ஒவ்வொன்றாக நடக்கத் தொடங்கியிருந்தன.

இராணுவத்தில் கேணல் தரத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தபோது இராணுவத்தில் இருந்து வெளியேறி, அமெரிக்காவில் தனது இராணுவ அனுபவத்துக்கு கொஞ்சமும் தொடர்பில்லாத பணியில் இருந்த கோட்டாபய ராஜபக்ஷ, தனது சகோதரர் மஹிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதியாக பதவியேற்றதும் நாடு திரும்பி, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் பதவியை பொறுப்பேற்றிருந்தார்.

ஒரு கேணல் தர இராணுவ அதிகாரியிடம் பாதுகாப்பு அமைச்சின் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டபோது பலரும் புருவத்தை உயர்த்தியிருந்தனர். ஆனால் அவரோ யுத்தத்தை வழிநடத்தி, வெற்றியும் பெற்றார். அதனால் அவர் மீதான கவனம் அதிகமாகியது.

அரசியலுக்கு அவர் வந்தபோதும், அப்படியொரு நம்பிக்கையான பார்வையை அவர் பெற்றிருந்தார்.

ஆனால், அவர் அரசியலில் தடுமாறியபோது, அவருக்கு பின்னால் இருந்து யாரோ தவறாக வழிநடத்துகிறார்கள் என்று அவரை நன்கு அறிந்தவர்கள் கூறத்தொடங்கியிருந்தனர்.

அந்த 'கறுப்பாடு' யார் என்பது குறித்தும் பரவலாக விமர்சனங்கள், ஆரூடங்கள் முன்வைக்கப்பட்டு வந்தன.

எரிவாயு பற்றாக்குறை நெருக்கடி, நாட்டின் இன்றைய மக்கள் அவலத்தின் முதுகெலும்பு என்று மேலே குறிப்பிட்டிருந்தேன்.

இந்த எரிவாயுவை நாட்டுக்கு விநியோகிக்கும் பிரதான நிறுவனங்களில் ஒன்று, லிட்ரோ காஸ் நிறுவனம். அதுவே நாட்டின் எரிவாயுத் தேவையின் பெரும்பகுதியை ஈடுசெய்கின்றது.

அந்த லிட்ரோ காஸ் நிறுவனத்தின் தலைவர் தனது இராஜினாமா கடிதத்தை ஜனாதிபதியிடம் கையளித்துள்ளார்.

அந்த லிட்ரோ நிறுவனத்தில் நடந்ததாகக் கூறப்படும் நிதி முறைகேடுகள் குறித்து அவர் தனது இராஜினாமாக் கடித்ததில் விளக்கிக் கூறியிருந்ததாகவும் தெற்கின் ஊடகங்கள் தெரிவித்திருந்தன. அதுமாத்திரமன்றி, அவர் மற்றுமோர் உண்மையையும் தனது கடித்தின் மூலம் வெளிச்சத்திற்கு கொண்டுவந்திருக்கின்றார்.

முன்னாள் நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷ மற்றும் அரசாங்க அதிகாரிகள் குழுவொன்று எரிவாயு நெருக்கடியை வேண்டுமென்றே அதிகப்படுத்தியுள்ளது என்பதே அவர் முன்வைத்திருக்கும் முக்கிய குற்றச்சாட்டு.

நாட்டில் ஏற்பட்ட நெருக்கடியை தீர்த்துவைக்கக்கூடிய வல்லமை உள்ளவர் என்று ஆளும் தரப்பால் நம்பப்பட்ட ஒருவர், வேண்டுமென்றே நெருக்கடியை அதிகப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகியிருக்கின்றார்.

இதுபோன்ற குற்றச்சாட்டுக்கள் காலம் கடந்தவை என்றாலும், இனிவரும் காலங்களிலும் இதுபோன்று நடக்காமல் இருப்பதை உறுதிப்படுத்த இவை உதவலாம்!

**- ஊர்க்குருவி.**

# அறிவாற்றலும் அர்ப்பணிப்பும் மிக்க கல்வியலாளன் அமரர் பேராசிரியர் சந்திரசேகரம்பிள்ளை பாலகுமார்



பேராசிரியர் ச. பாலகுமார் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வரலாற்றில் பல்வகைகளில் ஒரு தனித்துவமான மனிதர் ஆவார். முற்றுமுழுதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் உருவாக்கப்பட்ட ஒரு தனித்துவமான கல்வியியலாளன் எனும் பெருமைபுக்குரியவர். நவிண்டில் நெல்லியடியைப் பூர்வீகமாகக் கொண்ட அவர் **1969.07.29** அன்று அமரர்களான திரு. சந்திரசேகரம்பிள்ளை திருமதி. ராஜேஸ்வரி சந்திரசேகரம்பிள்ளை தம்பதிகளின் மூத்த புதல்வனாக மண்ணில் அவதரித்தார். இயல்பாகவே ஆன்மீகநாட்டமும் இறை நம்பிக்கையும் கொண்ட குடும்பப் பின்னணி பேராசிரியர் அவர்களையும் அவ்வாறே வாழ்வித்தது. ஈற்றில் அவரது வாழ்வும் இறைசந்நிதான நிழலிலேயே நிறைவுற்றமையையும் நினைவில் நிறையும் இயற்கையின் நியதியாகும்.

தனது ஆரம்பக்கல்வியை கரணவாய் தாமோதர வித்தியாசாலையிலும் இடைநிலைக் கல்வியை உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூயிலும் உயர்தரக் கல்வியை நெல்லியடி மத்திய கல்லூரியிலும் கற்று உயிரியல் விஞ்ஞானப் பட்டக் கற்கைக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு தெரிவு செய்யப்பட்டார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஒரு பட்டதாரி மாணவனாக இணைந்த அவரது தொடர்பு பின்னர் விஞ்ஞான முதுமாணி மாணவன், கலாநிதிப்பட்ட ஆய்வாளன் எனப் பரிமாணம் பெற்றதுடன் உதவி விரிவுரையாளர், சிரேஸ்ட விரிவுரையாளர், பேராசிரியர், துறைத்தலைவர், பீடாதிபதி, பதில் துணைவேந்தர் என தொழில்சார்ந்தும் விரிந்து சென்றது.

பேராசிரியர் ச. பாலகுமார் அவர்கள் விலங்கியலில் விஞ்ஞானமாணிப் பட்டத்தை நிறைவுசெய்த பின்னர் உயிர் இரசாயனவியல் துறையில் முதுமானிப்பட்டத்தையும் அதே துறையில் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். அவர் தனது கலாநிதிப் பட்ட ஆய்வை மறைந்த உயிர் இரசாயனவியல்துறை வாழ்நாள் பேராசிரியர் க. பாலசுப்பிரமணியம் மற்றும் பேராசிரியர் வசந்தி அரசரத்தினம் ஆகியோரின் மேற்பார்வையின் கீழ் மேற்கொண்டமை சிறப்புக்குரிய விடயமாகும்.

**01.11.2001** இருந்து **30.03.2003** வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட உயிர் இரசாயனவியல் துறையில் ஒப்பந்த அடிப்படையில் சிரேஷ்ட விரிவுரையாளராக இணைந்து கொண்ட அவர் **03.03.2003** ஆம் ஆண்டு நிரந்தர சிரேஷ்ட விரிவுரையாளராக நியமிக்கப்பட்டார். தொழில் வாழ்வில் படிப்படியாக முன்னேறிய அவர் **2019** ஆம் ஆண்டு திறமை அடிப்படையில் உயிர் இரசாயனவியல் துறையின் பேராசிரியராக உயர்வு பெற்றார்.

தனது தொழில்வாழ்க்கைக் காலத்தின் போது ஒரு பல்கலைக்கழக ஆசிரியனுக்கு விதிக்கப்பட்ட முப்பெரும் பணிகளான கற்பித்தல், ஆய்வு, கல்வி நிர்வாகம் எனும் தளங்களில் தனது தனித்துவ ஆற்றலினாலும் விசேடித்த குணாம்சங்களினாலும் காலக்கனதிமிக்க பல வரலாற்றுக் கடமைகளை ஆற்றியவர் பேராசிரியர் பாலகுமார் அவர்கள்.

## பேராசிரியர் பாலகுமார் நினைவுக் குறிப்பு

உயிர் இரசாயனவியல் துறையின் தலைவராக நியமிக்கப்பட்ட அவர் தனது இறுதிக்கணம் வரை அந்தப் பதவியைத் தொடர்ந்த வண்ணமிருந்தார். **2012** ஆம் ஆண்டு யாழ்ப்பா ணப் பல்கலைக்கழக மருத்துவ



பீடத்தின் ஒன்பதாவது பீடாதிபதியாக போட்டியின்றி ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

மருத்துவபீடத்தின் பீடாதிபதியாகக் கடமையாற்றிய காலத்தில் பீடத்தின் வளர்ச்சிக்குப் பல்வேறு வழிகளிலும் தன் பங்களிப்பை நல்கினார். குறிப்பாக இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நிறைவுறாது இருந்த மருத்துவபீட கூவர் கலையரங்கத்தின் நிர்மாணிப்பு வேலைகளை நிறைவுறுத்தியது மட்டுமன்றி நவீன வசதிகளுடன் மாணவர் பாவனைக்காக கையளித்தார். அத்துடன் பரீட்சை மண்டபம், இணை சுகாதாரக் கற்கைகளுக்கான புதிய கட்டடத் தொகுதி நிர்மாணம், உயிர் இரசாயனவியல்துறை ஆய்வுகூட புனரமைப்பு, மருத்துவபீட பேராசிரியியல் துறைகளுக்கான எட்டு மாடிகளைக் கொண்டதாக அமைக்கப்படும் கட்டிடத்துக்காக காணியை அரச நன்கொடையாக பெற்று கட்டிட பணிகளை ஆரம்பித்தமை (கடந்த **40**வருடங்களுக்கு மேலாக இடவசதியற்ற), மருத்துவபீடத்துக்கு அருகாமையில் பீடத்துக்காக காணி கொள்வனவு, பழைய மாணவர்களின் அனுசரணையில் மருத்துவபீட மாணவர் விடுதி விஸ்தரிப்புக்காக காணி கொள்வனவு, நன்கொடை அடிப்படையில் கொக்குவிலில் மருத்துவபீடப் பாவனைக்கென காணி பெற்றமை, பீடத்தின் உள்ளகச் சூழலை மீளவும் புதுப் பொலிவுடன் அழகுபடுத்தி யமை என தனது அர்ப்பணிப்பு மிக்க சேவையில் பல பெறுமதி யான அடையாளங்களைப் பொறித்தார். அது மட்டுமன்றி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சர்வதேச ஆராய்ச்சி மாநாட்டின் (JUICE) மருத்துவ பீட இணைப்பாளராக **2018** ஆம் ஆண்டு பொறுப்பேற்று மிகச் சிறப்பாக நடத்தினார். அது மட்டுமன்றி இணை மருத்துவ விஞ்ஞான அலகினை பீடமாக்குவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார்.

இயல்பாகவே தமிழ்த் தேசிய உணர்வுமிக்க அவர் அதனைப் பகிரங்க வெளிகளில் வெளிக்காட்டாவிட்டாலும் தன்னால் இயன்ற பங்களிப்பை தமிழ்த் தேசியத்துக்காக நல்கிவந்தார். அமரர் அவர்கள் பீடாதிபதியாகவிருந்த காலப் பகுதியில் **2012**ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் நடைபெற்ற சம்பவம் ஒன்றில் மருத்துவபீட மாணவர் ஒன்றியத் தலைவர் கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டபோது அவரை மீட்பதற்காக பல தரப்புக்களையும் சந்தித்து அதில் துரித வெற்றியும் கண்டார்.

அமரரது வாழ்வு மற்றவர்களுக்கு பல வழிகளிலும் முன்னுதாரணமான வாழ்வு. அவரது தடங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எப்போதுமிருக்கும். மருத்துவ பீடத்தில் அவரது பிரசன்னம் ஆத்ம நிலையிலும் நிலைத்திருக்கும். உயிர் இரசாயனவியல் துறையில் அவர் உணர்வுகள் என்றும் செறிந்திருக்கும். அமரத்துவ வாழ்வு பெற்ற பேராசிரியர் பெருமை என்றும் நிலைக்கப் பிரார்த்திப்போம்.

ஈழநாடு
Eelanadu
17.04.2022 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 04

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

## ஈஸ்டர்தின பயங்கரம் - மூன்று ஆண்டுகள்?

ஈஸ்டர் தின தற்கொலை தாக்குதல் இடம்பெற்று மூன்றாண்டுகளா கின்றன. உலகின் பல பாகங்களில் இடம்பெற்ற தாக்குதலை கேட்டும், படித்தும் அறிந்திருந்த இலங்கையர்கள் - இஸ்லாமிய பங்கரவாத தாக்குதல் எப்படியிருக்கும் என்பதை முதல் முதலாக அறிந்துகொண் டனர். விடுதலை புலிகளின் பல தற்கொலை தாக்குதல்களை சிங்கள மக்கள் அறிந்திருக்கின்றனர்.

ஆனால் விடுதலைப் புலிகளின் தாக்குதல்கள் தேவாலயங்களை இலக்காகக் கொண்டோ, அப்பாவி சிங்கள மக்களை இலக்காகக் கொண்டதாகவோ இருந்ததில்லை. ஈஸ்டர் தின தாக்குதல்கள் இடம்பெற்றபோது, தென்னிலங்கையை சேர்ந்த பலர் இவ்வாறான கருத்துக்களை பதிவு செய்திருந்தனர்.

ஈஸ்டர் தாக்குதல் - இப்போதும் பல கேள்விகளுக்கும், சந்தேகங் களுக்குமான ஒரு விடயமாகவே, கத்தோலிக்கர்களால் நோக்கப்படு கின்றது. குறிப்பாக, இலங்கையின் கர்தினால் மல்கம் ரஞ்சித், இந்த தாக்குதல் தொடர்பில் தொடர்ந்தும் சந்தேகங்களை முன்வைத்து வரு கின்றார். குற்றவாளிகள் தண்டிக்கப்படவேண்டுமென்று குரலெழுப்பி வருகின்றார். ஆனாலும் அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

அப்பாவி மக்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல் களுக்கு - எத்தகைய புனித விளக்கங்களை கூறினாலும் - அது ஒரு மோசமான செயலாகும். அவ்வாறான தாக்குதல்களை மேற்கொள்ப வர்கள் எவராக இருந்தாலும், அவர்கள் மனித குலத்தால் வெறுக்கப்பட வேண்டியவர்கள்தான். அந்த வகையில் ஈஸ்டர் தாக்குதலோடு சம்பந் தப்பட்டவர்கள் மக்கள் மத்தியில் அம்பலப்படுத்தப்பட்டு, தண்டிக்கப்பட வேண்டுமென்னும் கோரிக்கை நியாயமானது.

2009 இற்கு பின்னர் வெடிகுண்டு சத்தத்தை அறிந்திராக சிங்கள மக்கள் மத்தியில், ஈஸ்டர் தாக்குதல் பெரும் அச்சத்தையும் பதட்டத் தையும் ஏற்படுத்தியிருந்தது. சிங்கள மக்கள் மத்தியில் அவர்களது பாதுகாப்பு தொடர்பில் கேள்விகள் எழுந்தன. இந்த நிலைமையே மறுபுறமாக, ராஜபக்ஷக்களின் மீள் - எழுச்சிக்கு வழிவகுத்தது. ஈஸ் டர்தின தாக்குதல், ரணில் - மைத்திரி அரசாங்கத்தின் இயலாமை யாகவே நோக்கப்பட்டது.

ராஜபக்ஷக்களை மீளவும் கொண்டுவருவதன் மூலம்தான் நிலைமைகளை சரிசெய்ய முடியுமென்னும் புரிதல் பெரும்பாலான சிங்களவர்கள் மத்தியில் ஏற்பட்டது. இந்த இடம்தான், ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சியை சாத்தியப்படுத்தியது. இந்த பின்புலத்தில் நோக்கினால், ராஜபக்ஷக்களின் மீள் எழுச்சியில் ஈஸ்டர் தின தாக்குதலுக்கு பெரிய பங்குண்டு. அவ்வாறானதொரு தாக்குதல் இடம்பெறாதிருந்திருந்தால், சிங்கள மக்கள் சாதாரணமாகவே வாக்களித்திருப்பர். எழுச்சியுற்றி ருக்கமாட்டார்கள். ஆனால் இன்று நடந்திருப்பதோ வேறு.

சரியாக மூன்றாண்டுகளில் ராஜபக்ஷக்களுக்கு எதிராக சிங்கள எதிர்ப்பலையொன்று உருவாகியிருக்கின்றது. தாங்கள் எதிர்பார்த்தது போன்று, ராஜபக்ஷக்கள் மீட்பர்கள் அல்லர் - என்பதை சிங்கள மக்கள் புரிந்துகொள்ள முயற்சிக்கின்றனர். அதன் விளைவாகவே ஜனாதி பதியை வீட்டுக்கு செல்லுமாறு கோரி சிங்கள மக்கள் வீதிக்கு வந்திருக் கின்றனர். சிங்கள பெருந் - தேசியவாதத்தின் இயலாமை தொடர்பில் படித்த சிங்கள தலைமுறையொன்று சிந்திக்க முற்படுவதாக தெரி கின்றது. ஏனெனில் அவர்கள் மீட்பர்களாக கருதியவர்கள் எவராலும், நாட்டின் நெருக்கடியை எதிர்கொள்ள முடியவில்லை. அதிலும் குறிப்பாக நான்தான் - நீங்கள் தேடிய தலைவன் என்று பிரகடனம் செய்த ஜனாதிபதி கோட்டாபயவின் அரசாங்கம், நாடு, வங்குரோத்து அடைந்துவிட்டதாக பகிரங்கமாக அறிவித்திருக்கின்றது.

**வாரசாரம்** - *அரசியல் நிருபர்*

# காலிமுகத் திடலில் தமிழர்கள்



*அரசுக்கு எதிரான காலிமுகத் திடல் ஆர்ப்பாட்ட நடவடிக்கை தொடர்கிறது. பலதரப்பட்ட தரப்புகளினதும் ஆதரவு இதில் பரவலாக வெளிப்படுத்தப்படுவதும் தெரிகிறது.*

*ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என்பது இந்த ஆர்ப்பாட்டத் தில் பிரதான குரலாக ஒலிக்கிறது. நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியில் இந்த பதவி விலகலுக்கான கோஷம், கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக தெரி வான இரண்டு ஆண்டு காலப்பகுதியில் எழுந்திருக்கிறது.*

*லெப்டினன்ட் கேணல் நந்தசேன கோட்டாபய ராஜபக்ஷ, இலங்கையின் 8ஆவது ஜனாதிபதியாக 2019 நவம்பரில் தெரி வானவர். விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்த வெற்றியையே தன்னுடைய அரசியல் முதலீடாக்கி, அந்த முதலீட்டில் சிங்கள மக்களிடமிருந்து பெற்ற லாபமாகவே அவ ரின் வெற்றியில் அவர் பெருமிதம் கொள்ப வர். அந்த நன்றிப்பெருக்கே தன்னுடைய பணி என்றும் நம்பியவர்.*

*ஆக இந்த நிலையில், இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் தமிழர்களின் பங்களிப்பு எவ்வாறிருக்கிறது - எவ்வாறிருக்கவேண்டும்?*

*ஒரு தீர்க்கமான நிலைப்பாடு இது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகளாலோ அல்லது பொதுவிலோ எட்டப்படாத நிலை யும், பொதுமக்கள் தம்மை இதில் ஈடுபடுத்திக் கொள்ளும் நாட்டம் பெரிதுமற்ற ஒரு நிலை யுமே இதுவரை காணப்படுகிறது. இது தொடர்பில், சில கண்டனக் குரல்களும் அவ்வப்போது கேட்கின்றன.*

*நாடு முழுவதற்குமான ஒரு நெருக்கடியில் தமிழர்களின் பங்குபற்றுதல் அவசியம் என்ற ஒரு 'தேசியமும்' இவ்வேளையில் பேசப்படு கிறது. ஆனால், இதில்தான் தமிழர்களின் பங்குபற்றுதல் என்ற தீர்மானமும் அமைய வேண்டும்.*

*தற்போதைய பொருளாதார நெருக்கடி யைத் தீர்ப்பதற்குத்தான் இந்த ஆட்சி மாற்றம் என்றால், இத்தகைய ஒரு நெருக்கடியை இலங் கையில் தமிழினம் இதற்கு முன்னர் தனித்து எதிர்கொண்டிருக்கிறது. அது ஏன் ஏற்பட்டது? அப்படி எதிர்கொண்ட பின்னரும் ஆட்சி மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. அந்த ஆட்சி மாற்றங்கள் தமிழர் நிலையை மாற்றி னவா?*

*யுத்தத்தை வெற்றிகொண்ட பின்னர் அமைந்த ராஜபக்ஷக்களின் அரசுகள் மாத்திர மன்றி, தமிழர்களின் ஆதரவுடனும் நம்பிக்கை யுடனும் அமைந்த 'நல்லாட்சி' அரசிலாவது தமிழர் பிரச்னைக்கு ஓரளவிலேனும் தீர்வு கிடைத்ததா?*

*எனின், ஆட்சி மாற்றம் என்பதில் தமிழர் கள் கொள்ளவேண்டிய அக்கறையின் பொருள் என்ன?*

*தற்போது நாடு எதிர்கொள்ளும் பொரு ளாதார பிரச்னைக்கு என்னென்ன காரணங்களைக் கூறினாலும், இலங்கையில் ஆட்சியில் அமரும் அரசுகள் பேணும் இனவாத கொள்கையும், பேணும் இனவாத நடவடிக்கைகளும், புரிந்தோ புரியாமலோ சிங்கள மக்கள் அதற்கு அளிக்கும் ஆதரவும் மூல காரணம் என்பது வெளிப்படையாக பேசப்படாதவரை - உணரப்படாதவரை இலங்கையில் பொருளாதார சுபீட்சம் மலர்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றனவா?*

*விடுதலைப் புலிகளுடனான யுத்தம் முடிந்து ஒரு தசாப்தத்துக்கு மேலாகிவிட்டது. பின்னர் நடைபெற்ற ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் நிகழ்ந்து மூன்று ஆண்டுகள் ஆகிவிட்டபோது, அவை எப்படி நிகழ்ந்தன என்பது இன்னமும் வெளிவரவில்லை. ஈஸ்டர் தாக்குதல்களுக்காக ஐ. நா. வரை சென்ற பேராயர், பல்லாயிரக்கணக்கில் உயிரிழந்த தமிழ் மக்களைத் தன் மனிதாபிமான பார்வையில்கூட காணவில்லை.*

*இப்போது காலிமுகத் திடலிலும்கூட, இந்த பொருளாதார நெருக்கடியின் தீர்வில் இலங்கையில் தமிழர்களுக்கான அரசியல் பிரச்னையின் தீர்வு ஒரு பொருட்டாக தெரியவில்லை.*

*இலங்கை அரசியலில் ஆறு தசாப்தங்க ளுக்கு முன்னர் காலிமுகத் திடலை தமிழர்கள் வரலாற்றில் பதிவிட்டார்கள். 'சிங்களம் மட் டும்' சட்டத்தை எதிர்த்து 1956 ஜூன் 5ஆம் திகதி சாத்வீக போராட்டத்தில் ஈடுபட்டு அவர்கள் அன்று இரத்திம் சிந்தினார்கள்.*

*இன்று, காலிமுக திடலில் நடைபெறும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் இலங்கையின் 'தேசியம்' தமிழர்களையும் அழைப்பதான ஒன்று தெரிகிறதா?*

*காலிமுக திடல் ஆர்ப்பாட்ட போராட் டம் என்ன மாற்றத்தை - தீர்வை கொண ருமோ ஆனால், காலிமுகத் திடலில் தொடங் கிய நீண்ட பயணத்தில் பெற்றதொன்றாக, ஆட்சியில் அமரும் எந்த ஓர் அரசும் நடை முறைப்படுத்தவல்ல இலங்கை அரசியலமைப் பில் உள்ள 13ஆவது திருத்தத்தின் முழுமை யான அமுலாக்கத்தையாவது இவ்வேளையில் இலங்கையில் 'தேசிய உணர்வு' நெருடுமோ என்னவோ, தமிழ் அரசியல் தரப்பின் பங்கு பற்றுதல் இதனை வற்புறுத்தி அமையவேண்டும்.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'





# இந்தவார ராசிபலன்

## 17.04.2022 – 23.04.2022

ஏப்ரல் 17 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - சித்திரை - 04

| | | |
|---|---|---|
| நல்ல நேரம் | : | 7.30 - 9.00 |
| ராகு காலம் | : | 4.30 - 6.00 |
| திதி | : | பிரதமை |

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

நேர்மையற்ற செயல் எதுவும் செய்ய வேண்டாம். குடும்பத்தினருக்குத் தெரியாமல் ரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம். வேண்டுதல்கள் நிறைவேறும்.சக பணியாளருடன் வாக்குவாதத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்க வேண்டும். விருந்து, கேளிக்கை நிகழ்ச்சியில் கலந்து கொள்வீர்கள். தான் உண்டு, தன் வேலை உண்டு என்றிருபபோருக்கு அருமையான வாரம்.பேச்சினாலும் செயலினாலும் பிரச்னையில் மாட்டாமல் கவனமாக இருங்கள். என்றைக்கோ செய்த தவறுகள் இன்று பிரச்னை தரக்கூடும்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

கட்டடங்கள் மூலம் வருமானம் இருக்கும். தொழில், வியாபாரத்தில் முழு கவனத்தையும் செலுத்துங்கள். பணியில் தாமதமும் தடையும் உண்டானால் எரிச்சல் பட வேண்டாம். திட்டமிட்ட விஷயங்கள் சற்று தாமதப்படலாம். பணியில் முழுமுனைப்புடன் செயல்படுங்கள்.யாரையும் நம்பி ரகசியங்களை வெளியிட வேண்டாம். வெற்றிகரமான செயல்கள் செய்தாலும் எதிர்பார்த்த பாராட்டுக்கிடைக்காது.கடைசி நிமிடம் வரை எதையும் தள்ளிப்போட வேண்டாம். கலைத்துறையில் உள்ளவர்கள் உரிய கவனம் பெறுவர்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

சந்தோஷ செலவுகள் ஏற்படும். கவன சிதறல் ஏற்பட அனுமதிக்காதீர்கள். உழைப்பால் ஆதாயம் உண்டு. பண வரவு ஓரளவு திருப்தி தரும். பிரச்னை வரும்போது விட்டுகொடுத்துப் போவது நல்லது. குடும்பத்தில் கூடுதல் செலவுகள் இருக்கும். கணவரின்ஃ மனைவியின் நிதி நிலை தேறும். நட்புக்காக விட்டுக் கொடுப்பீர்கள். மனதில் திருப்தி உண்டாகும். உத்யோகம், உறவினர்கள் செயல்கள் மகிழ்ச்சி தரும். அலட்சியம் காட்டாமல் உரிய மருத்துவ சிகிச்சை எடுத்துக்கொள்ளுங்கள்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

சக பணியாளர்களிடம் கடுமை காட்டாமல் விட்டுக்கொடுத்து சென்று நன்மை காண்பீர்கள். மனதில் மகிழ்ச்சி நிலவும். பணியாளர்கள் அலட்சிய மின்றிச் செயல்படுங்கள். முயற்சி காரணமாகப் பொருளாதார நிலை உயரும். தடைப் பட்ட விஷயங்கள் நடைபெறும்.அலுவலகத்தில் பெருமிதமைடைவீர்கள். குடும்பத்தில் இணக்கம் ஏற்பட உங்கள் ஈகோ தடையாக இருக்கும். அலுவலக நண்பர்களுடனான சண்டைகளும் சச்சரவுகளும் உங்கள் முயற்சியால் முடிவுக்கு வரும்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

ஆன்மீகப் பெரியவர்களிடம் ஆசீர்வாதம் பெறுவீர்கள். பொறுப்பான எண்ணங்கள் மனதை ஆட்கொள்ளும். பணியில் முன்னேற்றமான சூழ்நிலை உண்டாகும்.ஆடம்பர பொருட்களை வாங்குவதில் ஈடுபாடு அதிகரிக்கும். மகளின்ஃமகனின் திருமணம் உறுதியாகும். வெளிநாட்டுத் தொடர்பால் பயன் உண்டு. உங்களுக்குக் கீழே வேலை பார்ப்பவர்களைச் சற்றுக் கண்காணிக்க வேண்டியிருக்கும். அரசாங்கம் உதவும். வேலையில் எதிர்பார்த்த மாற்றங்கள் தாமதமாகும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

எடுக்கும் முயற்சிகள் இருந்து வந்த காலதாமதம் நீங்கும். அலுவலகத்தில் பேச்சிலும் செயலிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்கவும். கணவன் மனைவியிடையே முன்பைவிட ஒற்றுமை கூடும் சிறு சறுக்கலுக்குப் பின் முன்னேற்றம் இருக்கும். வியாபாரிகள் தொழிலில் நேரம் செலவு செய்ய முடியாமல் தவிப்பீர்கள்.அனுசரித்துச் சென்று அமைதி காண்பீர்கள். பணியிடத்தில் வேலைப்பளு சற்று அதிகமாக இருக்கும். அதற்குப் பாராட்டு உண்டு. வீடு மாறும் முயற்சி சற்று காலதாமதமாக வாய்ப்பு உண்டு.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உங்களால் குடும்பத்தினருக்கு நன்மைகள் விளையும். பணியில் மிகச் சிறிதளவு முனனேற்றமான சூழ்நிலையைக் காண்பீர்கள். பதவி உயர்வை எதிர்நோக்கி இருப்பவர்களுக்கு வெற்றி அருகில் வரும்.பணியிடத்தில் கவனச்சிதறலைத் தவிர்க்கவும். பேச்சில் எச்சரிக்கை தேவை. உடல்நிலையில் சிறு பிரச்னைகள் வந்தால் அலட்சியம் வேண்டாம்.அலுவலகச் செயல்பாடுகளில் நிதானம் தேவை. எதிர்பாராத அதிர்ஷ்டங்களை எதிர்பார்க்கலாம். கைமாற்று கொடுக்கல், வாங்கலைத் தவிர்க்க வேண்டும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

அலுவலக வேலைகளில் தைரியமும் தன்னம்பிக்கையும் ஏற்படும். வீட்டுப் பராமரிப்பு செலவு கூடும். வீட்டில் நல்ல விஷயம் பற்றிய பேச்சுகளில் தடை ஏற்படலாம். நண்பர்களுக்கு அதிகம் இரக்கப்பட வேண்டாம். யாரிடமும் அனுசரித்துச் செல்வது நல்லது. பெண்களுக்கு வேலை சற்று அதிகமாக இருக்கும்.வெற்றி தேடி வரும். வாய்ப்புகளைப் பயன்படுத்திப் பெருமிதம் அடைவீர்கள். வெளிநாடுகளில் உள்ள குழந்தைகளிடமிருந்து சந்தோஷ செய்தி உண்டு. விருந்து, விசேஷங்கள் போன்ற மகிழ்வுகளில் பங்கேற்பீர்கள்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

தொழில் செய்பவர்கள் முன்னேற்றமடைவீர்கள். சிலருக்குப் புதிய வேலை கிடைக்க வாய்ப்பு உள்ளது. வெளிநாடு செல்லும் வாய்ப்பு பற்றிய நற்செய்தி வரும். வேலை வாய்ப்பு சற்று தாமதமாக வாய்ப்பு உள்ளது. வழிகாட்டுவோர் ஆதரவு அதிகரிக்கும். மனதுக்கு உகந்தவர்களுக்கு நன்மை செய்து பாராட்டுப் பெறுவீர்கள். பேச்சில் நிதானத்தை கடைப்பிடிக்கவும். மனதுக்குப் பிடித்த சிந்தனைகளோடு செல்லும் அருமையான வாரமாக அமையும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

பணியில் வெற்றி காண்பீர்கள். அலுவலக விஷயத்தில் கோபம் அதிகமாக வராமல் கவனமாக இருங்கள். முயற்சிக்கான பலன் எதிர்பார்த்ததையும்விட நன்றாக இருக்கும். திடீர்ப்பணவரவு உண்டு. முயற்சிகளில் தாமதங்கள் ஏற்படும். உடல்நலம் நன்றாக இருக்கும். சிறிய அளவில் பணவரவு கிடைக்கும். பணியாளர்கள் நன்கு உழைத்து நல்ல பெயர் வாங்குவீர்கள்.கணவருக்கு நற்செய்தி வரும். கூடுதல் கவனத்துடன் செய்யும் விஷயங்கள் சாதகமான பலன் தரும். நிம்மதி மீளும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

பணியாளர்கள் தங்களது பணிகளை முனைந்து நிறைவேற்றுவீர்கள். சவாலில் இறங்கியிருப்பவர்கள் வெல்வர். அனுபவசாலிகளின் ஆலோசனையை ஏற்று நடப்பது நல்லது.விரைந்து முடிய வேண்டிய விஷயங்கள் தாமதப்படும். சில வகைச் செலவுகள் கூடும். முக்கியமான விஷயங்களை முடிவெடுப்பதில் கூடுதலாக கவனம் செலுத்துவீர்கள். உயரதிகாரியின் ஆலோசனையும் உதவியும் பெறலாம். நன்மை கூடும். தேவையற்ற அலைச்சலை குறைத்துக் கொள்வது நல்லது. முயற்சியில் சிறிதளவு நன்மை உண்டாகும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

நிர்வாகத்தின் வழிகாட்டுதலை எளிதாக புரிந்து செயல்படுவீர்கள். தொழில் செய்வோர் அதிக முதலீட்டைத் தவிர்க்கலாம். பங்குச் சந்தையில் சிறிதளவு லாபம் வரும். பழி வராமல் கவனம் தேவை.முனைந்த பணியில் கவனம் சிதறக்கூடும். கணவர் நற்செய்தி கொண்டுவருவார். மனதில் தைரியம் அதிகரிக்கும். சாதனை புரிவீர்கள். வெளியூர், வெளிநாட்டில் உள்ள உறவினருடன் உரையாடும்போது கவனமாய்ப் பேசுங்கள். புனிதப்பயணங்கள் தள்ளிப் போகக்கூடும். பணி சம்பந்தப்பட்ட பெரிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

# ஒரு சினிமாப் பகிர்வு

பகிர்வு -24

கணபதி சர்வானந்தா

சினிமா, தொலைக்காட்சி மற்றும் சமூக ஊடகங்கள் சமூகத்தைச் சீரழித்துவிடும், இளைஞரை நாசமாக்கிவிடும் என்ற பொதுவான கருத்து எம்மிடம் உண்டு. இரும்பைக் கொண்டு வெடி குண்டுகளைத் தயாரிக்கிறார்கள். அதனால் இரும்பைச் சமூகத்துக்கு உதவாத தொன்று என ஒதுக்கி வைக்க முடிகிறதா? அது போலத்தான் இந்த விடயமும். மேற்குறிப்பிட்ட ஊடகங்களை நாம் எப்படிப் பார்க்கிறோம்? எதற்காகப் பயன்படுத்துகிறோம்? என்றதிலேயே தான் அதன் பயன்பாடும், நன்மை தீமைகளும் அடங்கியிருக்கின்றன என்கிறார் ஒரு சமூக ஆர்வலர்.

பொதுவாகத் திரைப்படங்கள் சமூக வாழ்வின் ஓர் முக்கிய அம்சமாக இருப்பதைக் காண்கிறோம். எனவே மானுட வளர்ச்சிக்கும் சமூக மாற்றத்துக்கும் வித்திடும் நல்ல படங்களை உருவாக்க வேண்டிய பொறுப்பு அது சார்ந்தவர்களுக்கு உண்டு என்பதை மறுப்பதற்கில்லை. மக்கள் மேம்பாடு, அரசியல் மற்றும் சமூக மாற்றத்துக்கான கருவியாகத் திரைப்படங்கள் இருக்கின்றன. குறிப்பாகச் சராசரி மக்கள் வாழ்க்கையில் சினிமா பலத்த செல்வாக்கைச் செலுத்துவதாகவும் உள்ளது. அதனால்தான் சினிமாவில் நடித்தவர்கள் நாட்டை ஆள்பவர்களாக அரசியல் செல்வாக்கைப் பெற்றனர். இது தமிழ் நாட்டில் மட்டுமல்ல வேறு பல நாடுகளிலும் நடைபெற்றிருப்பதைக் காணலாம்.

இதில் ஒரு விடயத்தை நாம் அவதானிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அதாவது சினிமாவுக்கும் இயல்பு வாழ்க்கைக்கும் இடையேயுள்ள வித்தியாசத்தைப் புரிந்து கொண்டு சினிமாவைப் பார்ப்பது அல்லது உள்வாங்குவது. இது மிகவும் முக்கியமானது. அதற்கு அது பற்றிய விமர்சனத்தோடு அதனை ஏற்றுக் கொள்ளுவது என்ற வகையில் சினிமா பற்றிய விமர்சனங்கள் சமூக மேம்பாட்டை அதிகரிக்கவல்லன. பொதுவாக ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்த வலுவானதொரு ஊடகமாகச் சினிமாவைக் கருதலாம்.

அந்த வகையில் சமீபத்தில் வெளிவந்த ஜெய்பீம் என்ற திரைப்படம் ஏற்படுத்திய சமூக மாற்றம் குறிப்பிடத்தக்கது. அது பற்றிய ஒரு முகநூல் பதிவொன்றைப் பின்வருமாறு கண்டேன்.

ஜெய்பீம் பார்வையாளர்களை ஈர்த்த ஒரு படம் மட்டுமல்ல வணிகரீதியில் வெற்றிப்படமாகவும் அமைந்திருக்கிறது. அத்துடன் அதிலே குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பாக அரசைச் செயல்படவும் வைத்திருக்கிறது. சமூகத்துக்குச் சாதகமான விளைவுகளை உண்டாக்கிச் சரித்திரம் படைத்திருக்கிறது.

லயோலா கல்லூரியின் காட்சி ஊடகத்துறைத் தலைவராக இருக்கும் பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் எழுதிய 'ஜெய்பீம்' திரைப்படம் குறித்த நூல் வெளியீடும் அறிமுகக் கூட்டமும் அண்மையில் லென்ஸ் அரங்கில் நடைபெற்றது. ஒரு குறிப்பிட்ட தமிழ்த் திரைப்படத்திற்குத் தனியாக ஒரு நூல் இதுவரை வெளிவந்ததாக இல்லை. அந்த நூல் ஒரு திரைப்படம் பற்றிய விரிவான விமர்சனம் மட்டுமல்லாமல் அது ஊடகங்களில் உருவாக்கிய சர்ச்சைகள் பெரியது. அத்துடன் இயக்குநர் உள்ளிட்ட படக்குழுவினரோடு இடம்பெற்ற கலந்துரையாடல் மற்றும் அரசியல் தலைவர்கள், முதல்வர் போன்றவர்களின் எதிரும் புதிருமான கடிதங்கள் என அதனை அவர் ஒரு தொகுப்பாக வெளியிட்டுள்ளார். தமிழ்த் திரைப்பட வரலாற்றில் அடுத்த கட்ட நகர்வாகக் கருதப்படும் பராசக்தி, 16 வயதினிலே போன்ற திரைப்படங்களுக்குக் கூட இது போன்ற நூல்கள் எழுதப்பட்டதில்லை. ஒரு திரைப்படம் ஏற்படுத்திய தாக்கத்தினால் அரசானது அது தொடர்பான உத்தரவுகளைப் பிறப்பித்தது.அதனால் அந்த மக்களுக்கு நிவாரணங்கள் கிடைத்தன என்பது முக்கியமான அம்சம் எனலாம். தொடர்ந்து ஊடகங்களின் போக்குகளையும் விளைவுகளையும் பேராசிரியர் இருதயராஜ் எழுதிவருகிறார். மிகவும் குறிப்பிடத்தக்கதொரு முக்கியமான முயற்சி அது.

சில வருடங்களுக்கு முன் மதுரை CECSI மையத்தில் 'Film for Change' (பிலிம் போர் சேன்ஜ்)என்ற தலைப்பில் ஒரு நாள் பயிலரங்கம் ஒன்று நடந்தது. அதை நடத்தியவர் இங்கிலாந்திலிருந்து வந்திருந்த ஒருவர். பெயர் நினைவிலில்லை. அது ஆவணப் படங்கள் எப்படி சக்திவாய்ந்த, மாற்றத்திற்கான ஊடகங்களாக இருக்கமுடியும் என்பதைப் பற்றியது. அந்த பயிலரங்கில் Blood on the Mobile (பிளட் ஒன் தி மொபைல்) எனும் ஒரு ஆவணப்படத்தைத் திரையிட்டார். ஆப்பிரிக்காவின் காங்கோ நாட்டில் நாம் பயன்படுத்தும் செல்பேசிகளுக்குத் தேவையான தாதுப்பொருட்கள் கிடைக்கும் சுரங்கங்கள் உள்ளன. இந்த சுரங்கங்களில் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் மிகக் குறைந்த கூலிக்கு வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். இந்த சுரங்கங்களை அங்குள்ள கிளர்ச்சிப் படைகள் கட்டுப்படுத்துகின்றன. அங்கு நடந்த உள்நாட்டுப் போருக்குரிய முக்கிய காரணங்களில் ஒன்றாக அந்தச் சுரங்கங்கள் இருந்திருக்கின்றன. இந்த உண்மைகளைக் கேள்விப்பட்ட டென்மார்க் நாட்டின் ஆவணப்பட இயக்குநர் Frank Poulsen (பிராங் பௌல்சன்) உயிரைப் பணயம் வைத்து அந்தப் படத்தை உருவாக்கினார். இந்தப்படம் வெளியாகி காங்கோ சுரங்கங்களின் மூலப் பொருளைப் பெருமளவு வாங்கிப் பயன்படுத்திய நோக்கியா (Nokia) செல்பேசியைப் புறக்கணிப்போம் என்ற பிரச்சாரம் முன்னெடுக்கப்பட்டது.

அதன் எதிரொலியாக நோக்கியா நிறுவனம் இனி காங்கோவிலிருந்து அந்தக் கனிமத்தை வாங்கமாட் டோம் என அறிவித்தது. உலக நாடுகளின் நிர்பந்தங்களின் காரணமாக அந்தச் சுரங்கங்கள் மூடப்பட்டன. அந்தப் படம் எனக்கு மிகுந்த நம்பிக்கையளிப்பதாக இருந்தது. காட்சி ஊடகங்களைச் சக்திவாய்ந்த ஆயுதமாகப் பயன்படுத்த முடியும் என்ற கருத்தைப் பரவலாக்க வேண்டும் என்று தோன்றியது. அதன் முதல் படியாக என்னுடைய துறையில் 'காட்சி ஊடகங்களும் சமூக மாற்றமும்' (Visual Media and Social Change) எனும் பாடத்தை அறிமுகப்படுத்தினேன். அந்தப் படத்தோடு மாற்றங்களை நோக்கிய / சாத்தியமாக்கிய சிறுபடங்கள், Ted Talk (ரெட் ரோல்க்) காணொளிகளையும் அந்தப் பாடத்தில் இணைத்துள்ளேன். புலம்பிக் கொண்டே இருந்து என்ன பயன்? (இந்தப்படம் Youtube யூ ரியூப்பில் இலவசமாகப் பார்க்கக் கிடைக்கிறது) – என அவ் முகநூல் பதிவு காணப்பட்டது.

மேற்சொன்ன பதிவு காணப்பட்ட முகநூல் கணக்காளர் பற்றிய விபரத்தைத் தருவது தர்மம். தவற விட்டுவிட்டேன். அதனைத் தரமுடியவில்லை. மன்னிக்கவும். இருந்தும் அவர் பதிவு மக்களைச் சென்றடைய வேண்டும் என்பதற்காக– அதனை உங்களுக்கு!

## கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு நாம் சாட்சி



நாம் ஓர் அறிவியல் உலகில் பரிணமித்துக் கொண்டிருக்கிறோம் இவ்வுலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் மனிதன் அறிவியல் ஆய்வுகளை தேடிக்கொண்டும் வாழ்வியல் உண்மைகளைக் கண்டடையவும் துடிக்கின்றான்.

ஆனாலும் உலகிலே சில தத்துவங்கள் இதனையும் தாண்டி படைத்தவனே எல்லாவற்றிற்கும் பரம்பொருள் என்றும் இந்த உலகத்தின் தோற்றம் வளர்ச்சி அழிவு என்பவைகளின் முழுக் காரணமும் பரம்பொருளாகிய இறைவன் என்கின்றார்கள்.

இறைவனின் உண்மை பிரசன்னத்திற்கு நம்பிக்கையே காரணம் என்று எல்லா மதங்களும் கூறினாலும் இந்த நம்பிக்கை ஒரு மனிதனுடைய உள்ளத்தில் இருக்கின்ற அளவற்ற அருளால்தான் உருவாகின்றது.

இன்று நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் உயிர்ப்பின் பெருவிழாவை எல்லாக் கிறிஸ்தவர்களும் உலகம் முழுவதும் கொண்டாடுகின்றனர். “கிறிஸ்து உயிருடன் எழுபப்படவில்லை என்றால் நாங்கள் பறைசாற்றிய நற்செய்தியும் நீங்கள் கொண்டிருந்த விசுவாசமும் பொருளற்றதாகிவிடும்” (1 கொரி 15:15) இவை பரிசுத்த விவிலியத்தில் கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு சான்று பகர்ந்த சீடர்களின் உறுதிமொழிகள்.

கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு பரிசுத்த விவிலியத்தில் பல சான்றுகள் இருந்தாலும் நமது வாழ்வில் கிறிஸ்துவின் உயிர்ப்பிற்கு எவ்வாறு சான்று பகிர்கின்றோம்?

உயிர்த்த ஆண்டவர் நம் ஒவ்வொருவரின் வாழ்விலும் உயிர்ப்பு உண்டென விளங்கச் செய்கின்றார். இந்த உயிர்ப்பின் உண்மையை நாம் வாழும் சமுதாயத்திலுள்ள ஏழை எளியவர்கள் துன்பப்படுவோர் இன்றும் கைவிடப்பட்டவர்கள் உடல் நலம் குன்றியவர்கள் மட்டில் நாம் காட்டும் இக்கறையிலும் அன்பிலும் வெளிப்படுத்துவோம்

உயிர்த்த ஆண்டவன் சீடர்களுக்கக் கூறிய முதல் வார்த்தை “உங்களுக்கு அமைதி உரித்தாகுக” (யோவான் 20 : 21) அதே வார்த்தையை இன்று நம் உவ்வொருவரக்கும் உயிர்த்த ஆண்டவர் கூறுகின்றாரர. மகனே மகளே இவ்வுலக வாழ்வில் நீ படுகின்ற உவ்வொரு துன்பங்கள் பிரச்சினைகள் வேதனைகளில் சிக்குண்டு தவித்தாலும் எனது உயிர்ப்பின் செய்தி உங்கள் உள்ளத்திற்கும் இல்லத்திற்கும் நிறை அமைதியைத் தரும் எனவே உயிர்த்த ஆண்டவரின் அன்பையும் அமைதியையும் தாம் வாழும் சமுதாயத்தில் உள்ளவர்களோடு பகிர்ந்து வாழ முற்படுவோம் இயேசுவின் உயிர்ப்பு உண்மையின் உயிர்ப்பு இயேசுவின் உயிர்ப்பு அமைதியின் உயிர்ப்பு

**க அருள்நேசன், குருநகர்**

# ராஜபக்ஷக்கள் அங்கம் வகிக்கும் அமைச்சரவை நாட்டுக்குக் கேடு!

## லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 17

ராஜபக்ஷக்கள் அங்கம் வகிக்கும் அமைச்சரவை நாட்டுக்குச் சாபக்கேடாகும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினரும் எதிரணியின் பிரதம கொறடாவுமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

அமைச்சர்கள் அனைவரும் பதவி விலகியவேளை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் பதவியை இராஜினாமா செய்திருக்கவேண்டும். அப்போது தான் முழு அமைச்சரவையும் கலைந்திருக் கும். ஆனால், அவர் இன்னமும் பதவியில் இருக்கின்றார். அதே வேளை, வெளிவிவகாரம், நிதி, கல்வி, போக்குவரத்து என நான்கு அமைச்சர்களையும் ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இந்நிலையில், அடுத்த வாரம் புதிய அமைச்சரவை நியமனம் இடம்பெறும் என்று ஆளும் தரப்பு கருத்துக்களை வெளியிடுகின்றது. அது புதிய அமைச்சரவை அல்ல் அமைச்சரவை மறுசீரமைப்பே ஆகும். சுருங்கக்கூறினால் மக்களை ஏமாற்றும் செயலாகும்.

இவ்வாறான நிலைமையில் தான் இந்த அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை பாராளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சக்தி முன்வைக்கவுள்ளது - என்றார். (அ)

# 4 இலட்சம் ரூபா பெறுமதி கொண்ட முதிரை குற்றிகள் கைதடியில் மீட்பு!

யாழ்ப்பாணம், ஏப். 17

சட்டவிரோமான முறையில் எடுத்துச் செல்லப்பட்ட முதிரைக் குற்றிகள் கைதடிப் பகுதியில் வைத்து மீட்கப்பட்டுள்ளன.

பட்டா ரக வாகனம் ஒன்றில் தேங்காய்களினால் மறைத்து முதிரைக் குற்றிகள் எடுத்துச் செல்லப்பட்டபோதே கைதடிப் பகுதியில் வைத்து அவை பொலி ஸாரினால் மீட்கப்பட்டன.

யாழ்ப்பாணம் உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கு கீழ் இயங்கும் விசேட பொலிஸ் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின்போது இவை கைப்பற்றப்பட்டன.



இவ்வாறு மீட்கப்பட்ட 8 முதிரைக் குற்றிகளின் பெறுமதி சுமார் 4 இலட்சம் ரூபா என தெரிவிக்கப்பட்டது.

இதன்போது மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டார். (அ)

# நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக முன்னணி ஒப்பமிட்டமை சந்தர்ப்பவாதமே!

யாழ்ப்பாணம், ஏப். 17

தற்போதைய அரசுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் கொண்டுவரப்பட உள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் கையொப்பமிட்டமை சந்தர்ப்பவாதத்தனமான நடவடிக்கை என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸை பொறுத்தவரை சிங்களத் தரப்பில் நடக்கின்ற விடயங்களுடன் தமிழர் தேசத்துக்கு சம்பந்தம் இல்லை என்று கடந்த காலங்களில் கூறினர். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையகத்தில் எமது பிரச்னைகள் பேசப்படும்போது ஆட்சி மாற்றத்திற்கான நடவடிக்கையைத்தான் இவர்கள் செய்கின்றார்களே தவிர இதன் ஊடாக தமிழ் மக்களின் பிரச்னைகளில் மாற்றம் ஏற்படாது என்றனர்.

அதை நான் தவறு என்று கூறவில்லை. ஆனால் தற்போது நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவளித்து கையெழுத்து வைப்பதென்பது அவர்கள் ஆட்சி மாற்றத்தைத் தான் வேண்டி நிற்கின்றார்களோ என்ற கேள்வியை எழுப்புகிறது.

நம்பிக்கையில்லாத் தீர்மானம் வெற்றி பெற்றாலும் கூட அடுத்த கட்டம் என்ன என்பது தொடர்பாக சஜித் பிரேமதாஸவுடன் பேசினார்களா? எவ்வாறு அடுத்த கட்டத்தை கொண்டு போகப் போகிறார்கள்? நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு அடுத்ததாக என்ன செய்யப்போகின்றார்கள்? போன்ற கேள்விகளுக்கு இதுவரை எந்தவிதமான பதிலும் இல்லை. இதனை தெளிவுபடுத்தவேண்டியது அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் கடமை. இது ஒரு சந்தர்ப்பவாததனமான நடவடிக்கை.

ஆட்சி மாற்றம் தேவையில்லை. ஆட்சி மாற்றத்தால் தமிழ் மக்களுக்கு எதுவும் ஆகப்போவதில்லை என்று கூறியவர்கள் இன்று ஆட்சி மாற்றம்தான் வேண்டும் என்று கூறுகிறார்கள் - என்றார். (அ)

# அமைச்சுப் பதவிகளை துறந்தவர்கள் ஏன் அரசிலிருந்து வெளியேறவில்லை?

## ராஜித சேனாரத்ன கேள்வி



கொழும்பு, ஏப். 16

“நாட்டின் நலன் கருதி அனை வரும் அமைச்சுப் பதவிகளைத் துறந்துவிட்டோம் என்று கூறிவரும் முன்னாள் அமைச்சர்கள், ஏன் அரசிலிருந்து வெளி யேறாமல் ராஜபக்ஷக்களுடன் ஒட்டிக்கொண்டு இருக்கின்றார்கள்? ராஜபக்ஷக்களை இன் னமும் நம்புகின்றீர்களா என்று அவர்களிடம் கேள்வி கேட்க விரும்புகின்றேன்.”

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

நாட்டின் இன்றைய நெருக் கடி நிலைமைக்கு ராஜபக்ஷக் கள் மட்டுமன்றி முன்னாள் அமைச்சர்களும் பொறுப்பு கூறவேண்டும். ஏனெனில் தீர் மானங்களை எடுக்கும் அமைச் சரவையில் அவர்களும் அங்கம் வகித்தவர்கள். பதவி ஆசைக் காக ராஜபக்ஷக்களின் கால்களில் அவர்கள் விழுந்தவர்கள். எனவே, கூட்டுப் பொறுப்பை அவர்கள் ஏற்கவேண்டும் - என்றார். (அ)

# எழுச்சிப் போராட்டத்துக்கு ஆதிவாசிகளும் முழு ஆதரவு

கொழும்பு, ஏப். 17

கொழும்பு காலி முகத்திடலில் முன்னெடுக்கப்படும் போராட்டம் 8ஆவது நாளாகவும் நேற்று தொடர்ந்தது.

நாடளாவிய ரீதியில் இளைஞர்களின் பங்குபற்றுதலுடன் கடந்த 9ஆம் திகதி ஆரம்பமான இந்தப் போராட்டம் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாகவும், காலிமுகத்திடல் பகுதியிலும் இரவு பகலாக நடைபெற்று வருகின்றது.

இதில் தற்போது சிறியவர்கள், பெரியவர்கள் என அனைத்து வயதினரும் கலந்து கொண்டுள்ளனர். இந்தப் போராட்டத்துக்கு நேற்று முன்தினம் இரவு ஆதி வாசிகள் குழுவொன்றும் வந்துள்ளது. போராட்டத்துக்கு இவர்கள் தமது முழு ஆதரவை தெரிவித்துள்ளனர். (அ)

# வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்ட 230 எரிவாயு கொள்கலன்கள் மீட்பு

கொழும்பு, ஏப். 17

அதிக விலைக்கு விற்பனை செய்வதற்காக, கினிகத்தேனை - அம்பகமுவ பகுதியில் உள்ள வீடொன்றில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 230 வீட்டு சமையல் எரிவாயு கொள்கலன்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய, பொலிஸாரும், நுவரெலியா மாவட்ட நுகர்வோர் விவகார அதிகார சபை அதிகாரிகளும் இணைந்து முன்னெடுத்த சுற்றிவளைப்பில் இந்த எரிவாயு கொள்கலன்கள் மீட்கப்பட்டன.

12.5 கிலோகிராம் எடை கொண்ட 177 கொள்கலன்களும், 5 கிலோகிராம் எடைட் கொண்ட 28 கொள்கலன்களும், 2.5 கிலோகிராம் எடை கொண்ட 25 கொள்கலன்களும் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த எரிவாயு கொள்கலன்கள் பதுக்கி வைக்கப்பட்டிருந்த வீட்டின் உரிமையாளர் கைது செய்யப்பட்டார். (அ)

# பொலிஸாரைத் தாக்கிய இரண்டு பேர் கைதாகினர்

முல்லைத்தீவு, ஏப். 17

புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் பொலிஸாரை தாக்கி விட்டு விபத்தை ஏற்படுத்திய இருவரை புதுக்குடியிருப்புப் பொலிஸார் கைது செய்துள்ளதாக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹேரத் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் மாலை புதுக்குடியிருப்பு-பரந்தன் வீதியில் கைவேலிப் பகுதியில் மோட்டார் சைக்கிளில் இருவர் சாகசம் காட்ட முற்பட்ட வேளை, வீதியால் பயணித்த ஒருவருக்கு விபத்தை ஏற்படுத்தி விட்டு அவர் மீது தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

இச் சம்பவத்தை கடமையில் இருந்த பொலிஸார் சென்று பார்த்தபோது பொலிஸார் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்திவிட்டு தப்பிச் சென்ற நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், விபத்தினை ஏற்படுத்தியவர்களில் ஒருவரும் காயமடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சம்பவம் தொடர்பிலான சட்ட நடவடிக்கையை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# நாட்டை கட்டியெழுப்ப தலைமையேற்க தயார்

## சம்பிக்க ரணவக்க அறிவிப்பு



**கொழும்பு, ஏப். 17**

**நாடு எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை கட்டியெழுப்பும் வேலைத்திட்டத்திற்கு தலைமையேற்கத் தான் தயாராக இருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித் தார்.**

இதற்கு நாட்டை நேசிக்கும் நேர்மையான நிபுணர்கள் மற்றும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் உதவி அவசியம் எனவும் அவர் கூறினார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடியில் தேர்தல் ஒன்றை நடத்துவது எந்த வகையிலும் பொருத்தமற்றது.புதிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அனைத்து கட்சிகளின் ஆதரவையும் பெற்றுக் கொள்வதற்காக தற்போது பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளேன்.

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமரை பதவி நீக்கம் செய்து, குடும்ப ஆட்சி இல்லாத பின்னணியை உருவாக்க வேண்டும். நாட்டை கட்டியெழுப்புவதற்காக பாராளு மன்றத்துக்கு இருக்கும் அரசியலமைப்பு ரீதி யான நடவடிக்கைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன-என்றார். (அ)

# எரிபொருள் விநியோகக் கட்டுப்பாடு அத்தியாவசிய சேவையை பாதிக்காது

## பெற்றோலியக்கூட்டுத்தாபனம் விளக்கம்

கொழும்பு ஏப்.17

எரிபொருள் விநியோகத்தில் வரையறைகள் விதிக்கப்பட்டாலும் அத்தியாவசிய சேவைகளுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாது என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் தெரிவித்தது.

அத்தியாவசிய சேவைகளுக்கான எரிபொருளை எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றுக்கொள்ள முடியும் எனக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் சுமித் விஜேசிங்க குறிப்பிட்டார்.

அத்தியாவசிய சேவைகளுக்கு தேவையான எரிபொருள் எரிபொருள் நிலையங்களில் உள்ளதாகவும் அவர் கூறினார்.

இதனால் குழப்பமடையாது குறித்த வரையறைக்குள் எரிபொருளை பெற்றுக் கொள்ளுமாறும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மக்களை கேட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் 1 மணி முதல் அனைத்து வாகனங்களுக்கும் விநியோகிக்கக் கூடிய எரிபொருளின் அளவை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் வரையறுத்துள்ளது.


இந்த வரையறைக்கு அமைய இரண்டு வாரங்களுக்கு எரிபொருளை விநியோகிக்குமாறு அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (அ)

# மகாநாயக்கர்களின் கருத்துக்களையும் கணக்கிலெடுக்காத கோட்டாபய அரசு!

கொழும்பு, ஏப். 17

தற்போதைய ஆட்சியாளர்கள் மகா நாயக்கர்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்க வில்லை என ஓமல்பே சோபித தேரர் தெரி வித்துள்ளார்.

இதன் காரணமாக அடுத்த கட்ட நடவடிக்கையை மகாநாயக்க தேரர்கள் மேற்கொள்ளவேண்டும் எனவும் அவர் கூறினார்.



நாட்டில் அரசாங்கமே இல்லை எனவும், பலவந்தமாக ஆட்சியைக் கைப்பற்றிய ஆட்சியாளர்கள் போராட்டக்காரர்களிடம் பயத்தைப் பரப்ப முயற்சிக்கின்றனர் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# 500 போதை மாத்திரைகளுடன் கோப்பாயில் ஒருவர் கைது!

யாழ்ப்பாணம், ஏப். 17

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஊரெழுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன. அவ்விடத்தைச் சேர்ந்த ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவை மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (அ)

# அரசிலிருந்து வெளியே வந்ததாக சொல்லும் சகலருமே நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்கவேண்டும்

## மனோ கணேசன் கோரிக்கை

கொழும்பு, ஏப். 17

“அரசிலிருந்து வெளியே வந்ததாக சொல்லும் அனைவரும் நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிக்க வேண்டும். எனவே, முட்டாள் தனமாக எவரும் மக்களை முட்டாளாக்க நினைக்கக்கூடாது.” - என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பான அவரின் முகநூல் பதிவு வருமாறு:

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லா தீர்மானத்தில் தமிழ் முற்போக்கு கூட்டணி கையெழுத்திட்டுள்ளது. ஐக்கிய மக்கள் கூட்டணியாக நாமே இதை கொண்டு வருகிறோம்.

இந்நிலையில், இந்த நம்பிககையில்லாப் பிரேரணை என்பது ஜனாதிபதி, பிரதமர் ஆகிய தனிநபர்களுக்கு எதிரானது என காட்டி தப்ப எவரும் முயலக்கூடாது.

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு எதிராகவும் நாம் பிரேணைகளை கொண்டு வருகிறோம். இவர்கள் இருவரையும் காட்டு காட்டென நாம் காட்டுவோம். ஆனால் இது முதலில் ஜனாதிபதி கோட்டாபயவின் முழு அரசுக்கும் எதிரானதாகும்.

அரசிலிருந்து வெளியே வந்ததாக சொல்லும் அனைவரும் இதை



ஆதரிக்க வேண்டும்.ஆகவே முட்டாள்தனமாக எவரும் மக்களை முட்டாளாக்க நினைக்க கூடாது-என்றுள்ளது. (அ)

# காலி முகத்திடலில் குவிக்கப்பட்ட பொலிஸ் வாகனங்கள் அகற்றல்!

கொழும்பு, ஏப். 17

காலி முகத்திடலில் நேற்றுக் காலை திடீரென குவிக்கப்பட்ட பொலிஸ் கனரக வாகனங்கள் பின்னர் முழுமையாக அகற்றப்பட்டன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி காலி முகத்திடலில் இன்று 8 ஆவது நாளாகவும் போராட்டம் தொடர்ந்தது.


இந்நிலையில் காலி முகத்திடல் பகுதியில் நேற்றுக் காலை திடீரென பொலிஸ் வாகனங்கள் குவிக்கப்பட்டிருந்தன. பின்னர் சிறிது நேரத்தில் அவை அகற்றப்பட்டன.

போராட்டக்காரர்களை இந்தப் பகுதியில் இருந்து பலவந்தமாக வெளியேற்றும் முயற்சியாக பொலிஸார் இங்கு களமிறக்கப்படுகின்றனரா என இது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறு தரப்பினரும் சந்தேகம் வெளியிட்டமை குறிப்பிடத்தது. (அ)






# நாட்டை மீட்க ஒரு மாபெரும் சக்தி இலங்கையில் உருவாகிறதா?



- பகவான் சிங் -
தமிழகத்தின்
சிரேஷ்ட பத்திரிகையாளர்

எதிர்பார்த்தது நடந்துவிட்டது. இலங்கை அரசாங்கம் 51 பில்லியன் அமெரிக்க டொலர் கடனை தன்னால் இப்போது அடைக்க முடியாது என்று ஒப்புக் கொண்டுவிட்டது. வெவ்வேறு முனைகளிலி ருந்தும் புதிய பொருளாதார உதவிகளை நாடிவரும் இலங்கை அரசாங்கம், புதிய கடன்களைக் கேட்கும் அதேநேரம் பழைய சுமைகளை இறக்குவதற்கு காலக் கெடுவையும் நீட்டிக்குமாறு கோரிக்கை வைக்கிறது. இந்த அறிவிப்பை வெளியிட்ட நிதி அமைச்சு, நாட்டின் பொருளாதார சூழல் இன்னும் மோசமாக சீரழியாமல் இருப்பதற்கு இது ஓர் 'இறுதி முயற்சி' என்று கூறியது.

வெளிநாட்டுக் கடன்களில் ஏற்கனவே மூழ்கிப்போய் கடனை திரும்ப செலுத்த எந்த வழியும் தென்படாத ஒரு நாட்டிற்கு மேலும் கடன் தருவது விவேகம்தானா என்று பிற நாடுகள் யோசிக்கக்கூடும். மேலும், சரியாக சிந்தித்து செயல்படக்கூடிய எந்த வெளிநாட்டு முதலீட்டாளரையும் இலங்கையின அரசியல் குழப்பம் பயமுறுத்திவிடும். முக்கிய வணிக நகரங்களான ஷங்காய் மற்றும் சென்சென் ஆகிய ஊர்களில் கோவிட் காரணமாக முழு ஊரடங்கு போடப்பட்டதால், சீனாவும் பொருளாதார நெருக்கடியில் இருந்து வருகிறது. ஆகவே, கடன் கொடுக்கத் தயங்கும் நாடுகளின் பட்டியலில் சீனா முதல் இடத்தில் இருக்கும். வெளிநாட்டுக் கடன்களைப் பொறுத்தவரை இனி எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்று கடந்த சில மாதங்களாகவே சீனத் தலைமை நினைப்பதாக சமீபத்திய செய்திகள் கூறுகின்றன. சென்ற நவம்பரில் நடந்த 'பெல்ட் மற்றும் சாலைகள்' மாநாட்டில், வெளிநாட்டில் சீன திட்டங்களை அமல்படுத்தும்போது, "ஆபத்தான, குழப்பமான இடங்களைத் தவிர்க்க வேண்டும்" என்று ஜீ ஜின்பிங் தன்னுடைய அதிகாரிகளிடம் கூறியதாகத் தெரிகிறது.

தெற்கு ஆசியாவில் தன்னுடைய பரவலை அதிகப் படுத்தவேண்டும் என்று சீன முதலீட்டாளர்கள் நினைத்தாலுமே, பாகிஸ்தானும் இலங்கையும் குழப்பமிக்க, தவிர்க்கவேண்டிய இடங்கள்தான் என்பது முதலீட்டாளர்களுக்கு மட்டுமல்ல, சின்ன குழந்தைக்குக்கூடத் தெரிந்துவிடும். சீனாவிடம் வாங்கிய 4 பில்லியன் டொலர் கடனை மார்ச் மாதம் பாகிஸ்தான் திருப்பி செலுத்திவிட்டாலும் மீண்டும் கடன் தருவதாகக் கூறிய உறுதிமொழியிலிருந்து சீனா பின்வாங்கிவிட்டது. இதற்கு ஒரு காரணமும் இருக்கலாம். முன்னாள் கிரிக்கெட் வீரரான பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் சகோதரருமான செபாஸ் ஷெரீபால் இப்போது ஆட்டமிழந்திருக்கிறார். செபாஸ் ஷெரீப் சீனாவின் நண்பர் என்பது குறிப்பிடத்தக்கது.

2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை கடனாகக் எதிர்ப்பார்க்கக்கூடும்.

இரண்டாவதாக, ஒடுக்குமுறை, அரசுசார் வன்முறை, நில ஒதுக்கீடு பிரச்சனை போன்ற நீண்டகாலத் தமிழர் பிரச்சனைகள் தீரவேண்டும், அரசியலில் போதிய அளவுக்கு அதிகாரம், மாகாண சபைக்கு போதிய அதிகாரம் ஆகியவை தமிழர்களுக்கு வழங்கப்படவேண்டும். ஏப்ரல் 3ஆம் திகதி உங்களுடன் 'ஈழநாடு' வாயிலாக உரையாடியபோதே இதைக் கூறினேன்.

முன்பே டெல்லி உறுதியளித்திருந்தபடி, ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் டுநைெ ழுக ஊசநனவை (டுழஊ) மூலம் உணவு, மருந்து, எரிபொருள் ஆகியவை தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. அடுத்த சில வாரங்களுக்குள் இவை எல்லா மக்களையும்



ஒவ்வாமையும் கொண்டுள்ள பெரும்பான்மை சிங்களர்களின் நம்பிக்கையைப் பெறுவது, இரண்டாவது, இனப்படுகொலையில் டெல்லியும் பங்கேற்றதாகக் குற்றம்சாட்டி, போரின் முடிவில் இந்தியாமீது கசப்பை வளர்த்துக்கொண்ட தமிழர் களின் ஆதரவை மீண்டும் பெறுவது. எல்லா துறை களிலும் எல்லோருக்குமான வாய்ப்புகள் கிடைக்க, இலங்கையில் விரைவாக அரசியலமைப்பு சட்ட சீர்திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டும்.

இரண்டாவது முக்கியமான சவால், இலங்கையில் சரிந்துகிடக்கும் ஜனநாயகத்தைத் தூக்கி நிறுத்துவது, இந்தியாவின் அரசியல் நோக்கங்களுக்கு இணக்கமாகவும் சீன டிராகனிடமிருந்து விலகியும் இருக்கக்கூடிய ஓர் அரசைக் கொண்டுவருவது. நேரடியாக சிங்களவர்கள் வீதிக்கே வந்து போராடும் சூழலை பதவிக்கு வந்தபிறகு முதல் முறையாக ராஜபக்ஷக்கள் எதிர்கொள்கிறார்கள். அதோடு முக்கியமான விஷயம் - ராஜபக்ஷ குடும்பம் கடும் நெருக்கடியில் நாட்டைத் தள்ளி விட்டதில், எல்லா இன மக்களையும் இந்த போராட்டத்தின்மூலம் ஒருங்கிணைத்துவிட்டார்கள் காலிமுக களத்திலே சிங்களவர்களோடு, தமிழ் இளைஞர்களும், முஸ்லிம் மக்களும், புத்த பிக்குகளும் கோஷங்களை சேர்ந்தே எழுப்புகிறார்கள்: "புழவய புழ உழஅந".

வெள்ளிக்கிழமை மாலை இந்தக் கட்டுரையை எழுதுவதற்காக நான் அமர்ந்தபோது, கொழும்பைச் சேர்ந்த ஒரு தமிழ் நண்பர் வாட்சப்பில் ஒரு வீடியோவை அனுப்பியிருந்தார். கோட்டாபய

## விரைவான அரசியலமைப்பு சீர்திருத்தம் வேண்டும்

வந்தடையும் என்று எதிர்ப்பார்க்கலாம்.

இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்ஷங்கரின் சமீபத்திய அறிக்கைகள் மற்றும் வெளிநாட்டுப் பயணங்களுக்குப் பிறகு வெளியுறவுத்துறை அமைச்சகத்தின் செயல்பாடுகளில் ஓர் உற்சாகம் தெரிகிறது. குறிப்பாக, சென்ற மாதம் சீன வெளியுறவுத்துறை அமைச்சர் வாங் யீ-உடனான சந்திப்பு, இந்த மாதம் கொழும்பு மற்றும் அமெரிக்காவுக்கு அவர் மேற்கொண்ட பயணங்கள் ஆகியவை ஓர் உற்சாகத்தை ஏற்படுத்தின. உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு விவகாரத்தில் இந்தியா ரஷ்யாவுக்கு ஆதரவு தரக்கூடாது என்று அமெரிக்கா வலியுறுத்தியபோது, தன்னுடைய தேவைகளுக்காகவும் உலக நன்மையைக் கருத்தில் கொண்டும்

## இலங்கையில் ஜெய்ஷங்கர் எதிர்கொள்ளும் இரு சவால்கள்!

கேட்கும் இலங்கையின் கோரிக்கைக்கும் சீனாவிடமிருந்து மௌனமே பதிலாகக் கிடைத்திருக்கிறது. சர்வதேச நிதியம் (IMF) மட்டுமே இப்போது மீதமிருக்கும் ஒரே நம்பிக்கை. ஆனால் ஒருவேளை நிதி தரும் பட்சத்தில், வரிகளை உயர்த்துவது, நல்வாழ்வுத் திட்டங்களை குறைப்பது, லாபம் தராத அரசுத்துறைகளைத் தனியார் மயமாக்குவது போன்ற ஐஆகு விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டியிருக்கும்.

அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவின் வீட்டுக்கு முன் இருபத்தி நான்கு மணிநேரமும் பதவி விலக போராட்டம் செய்யும் மக்களின் எண்ணிக்கை வளர்ந்துகொண்டே போகிறது. இந்த குழப்பமான அரசியல் சூழலில் சர்வதேச நிதியம் மட்டுமல்லாமல், எந்த ஒரு சர்வதேச நிதி வழங்கும் அமைப்பும் நிதி உதவி வழங்க முன்வருமா என்பது பெரிய கேள்வி.

இந்த மோசமான பின்னணியில் இந்தியா மட்டுமே ஒரே உதவிக்கரமாகத் தெரிகிறது. ஆனால், அந்த உதவியிலும் இரண்டு நிபந்தனைகள் இருக்கக்கூடும். முதலில் ராஜபக்ஷவின் சர்வாதிகார அரசமைப்புக்கு பதிலாக முழு பாராளுமன்ற ஜனநாயக அமைப்பை நிறுவவேண்டும், வெளிநாட்டிலிருந்து வரும் எல்லா கடன்களும் முழுக்கவே மக்களின் நன்மைக்காகப் பயன்படுத்தப்படவேண்டும் என்று இந்தியா

ஒவ்வொரு நாடும் சில தனித்த முடிவுகளை எடுக்க நேரிடும் என்று ஜெய்ஷங்கர் பதிலளித்தார். ரஷ்யாவிலிருந்து இந்தியா ஒரு மாதம் முழுவதும் வாங்கும் எரிபொருள் அளவு, ஒரு மதிய நேரத்தில் ஐரோப்பா வாங்கும் அளவுதான் இருக்கும் என்று அவர் தெளிவு படுத்தினார். மனித உரிமை மீறல் பற்றிப் பேச்சு வந்தபோது, "அமெரிக்காவின் மனித உரிமை பிரச்னைகள் பற்றி எங்களுக்கும் கருத்துக்கள் உண்டு" என்று பதிலளித்தார். சமீபத்தில் அமெரிக்க வாழ் இந்தியர்கள்மீது நடத்தப்பட்ட தாக்குதல்களையே ஜெய்ஷங்கர் இவ்வாறு மறைமுகமாகக் குறிப்பிட்டார்.

ஜெய்ஷங்கருக்கும் இந்தியாவுக்கும் சமூக ஊடகங்களில் பாராட்டுகள் குவிந்தன. வெளியுறவுத் துறையின் புதிய உற்சாகம் வெகுவாகப் பாராட்டப் பட்டது. "இந்தியா, மனிதநேய ரீதியில் உக்ரைனுக்கு மருந்துகளும் உணவும் வழங்குகிறது, ஆனால், நட்பு நாடென்று கூறிக்கொண்டு அமெரிக்கா ஆயுதங்களையும் இராணுவ தளவாடங்களையும் உக்ரைனுக்கு வழங்குகிறது" என்று ஒரு ட்விட்டர் பதிவு கூறியது.

**ஒரு கனவு**

இலங்கையைப் பொறுத்தவரை ஜெய்ஷங்கருக்கு இரண்டு சவால்கள் இருக்கின்றன. முதலாவது, நீண்டகாலமாகவே இந்தியா குறித்த சந்தேகமும்

வீட்டின் முன்பாக போராட்டம் செய்யும் மக்களின் எழுச்சியைப் பற்றி ஒரு சிங்கள இளைஞர் உற்சாகத்துடன் பேசும் அந்த வீடியோவில், புது வருடத்துக்கான விளக்குகளைக்கூட அங்கேயே ஏற்றி, குடும்பத்துடன் பிரார்த்தனை செய்யும் காட்சிகள் தெரிகின்றன. "இங்கு ஆயிரக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள், எங்களோடு தமிழர்கள், பிக்குகள் எல்லோரும் இருக்கிறார்கள். மக்கள் உண்மையாகவே ஒன்றுபட முடியும் என்பதையே இந்த தன்னெழுச்சி காட்டுகிறது. மதம், மொழி, இனம் என்று நம்மை இதுவரை அரசியல்வாதிகள்தான் பிரித்து வைத்திருக்கிறார்கள்" என்று அவர் ஆங்கிலத்தில் முழக்கமிட்டார்.

இதோடு, சிறப்பான ஒரு பிபிசி தமிழ் செய்தி வீடியோ காலிமுக களத்திலிருந்து வந்தது. தயவு செய்து அதைப் பாருங்கள். "இந்தப் பக்கம் பாருங்கள், தங்குவ தற்குக் கூடாரங்களையும் எடுத்து வந்திருக்கிறார்கள். தற்காலிக கழிவறைகளையும் கொண்டுவந்திருக்கி றார்கள். இங்கேயே இருக்கப்போகிறார்கள். மதம் மற்றும் இன ரீதியாக தங்களைப் பிளவுபடுத்தியிருக்கி றார்கள் என்பதை இலங்கை இளைஞர்கள் உணர்ந்து விட்டனர் என்பதை இது காட்டுகிறது. இங்கு இருந்தபடியே இஸ்லாமியர்கள் நோன்பு கடைப்பிடிக் கிறார்கள், இங்கு பல புத்த பிக்குகள், மாணவர்கள், முக்கிய பணிகளில் இருப்பவர்கள் இருக்கிறார்கள். இது மேலோட்டமான எதிர்வினை அல்ல, ஆழமானது. இது இலங்கையின் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக இருக்கவேண்டும் என்று நாங்கள் நம்புகிறோம். சூழல் மோசமாக மாறுவதால் இலங்கையை விட்டுத்தர மாட்டோம் என்று ஒரு தலைமுறையே இன்று உறுதியாக நிற்கிறது. இங்கு வந்து போராடுவோம். எங்கள் வீட்டிற்குள் வந்து கொள்ளையடிக்கிறார்கள் என்பதால் வீட்டைவிட்டு வெளியேற மாட்டோம், எதிர்த்துப் போராடுவோம், இது எங்கள் வீடு, இது எங்கள் நாடு, இது என்னுடைய ஒரே வீடு என்ற எண்ணத்தில் மக்கள் போராடுகிறார்கள்" என்று அந்த வீடியோவீல் ஒரு தமிழ் இளைஞர் உத்வேகத்துடன் பேசுகிறார்.

இவரது யாழ் உறவினர்கள், இந்த வீடியோவைத் தங்களுடைய பெரும்தலைவர்களிடமும் காட்டவேண்டாமா? அப்போதுதானே வெறுப்பையும் வறுமையையும் சமூகத்தின் சாபக்கேடாக்கிய கூட்டத்திலிருந்து நாட்டை மீட்க ஒரு மாபெரும் மக்கள் சக்தியை இலங்கையில் உருவாக்க முடியும்? இது எனக்கும், நமக்கும் ஒரு கனவாகவே நின்றுவிட இனி முடியாது.

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

# யுக்ரேன் போர்: ரயில் நிலையத்தில் 50 பேரை கொன்ற ஆயுதம் எது?

- மனிஷா கங்குலி & ஜோ இன்வூட்

யுக்ரேனின் கிரமடோர்ஸ்க் ரயில் நிலையத்தில் கடந்த 9-ம் திகதி நடைபெற்ற தாக்குதலில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்த நிலையில், அத்தாக்குதலுக்காக சர்வதேச சட்டங்களின்படி பெரும்பாலான நாடுகளில் தடை செய்யப்பட்ட கிளஸ்டர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதற்கான தெளிவான ஆதாரங்கள், பிபிசி புலனாய்வில் கண்டறியப்பட்டுள்ளன.

பல குண்டுகளை உள்ளடக்கிய இத்தகைய கிளஸ்டர் குண்டுகள், பெரும் நிலப்பரப்பில் பரவி வெடிக்கும் தன்மை கொண்டதாகும்.

கடந்த 9ம் திகதி யுக்ரேனின் கிழக்குப் பகுதியிலிருந்து வெளியேற ரயில் நிலையத்தில் மக்கள் குழுமியிருந்த நிலையில், இந்த கிளஸ்டர் குண்டுகள் பொருத்தப்பட்ட ஏவுகணை ரயில் நிலையத்தை தாக்கியதில் 50க்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.

இந்த ஆயுதங்களை தடை செய்யும் உடன்படிக்கை ஒன்றில், 120க்கும் அதிகமான நாடுகள் கையெழுத்திட்டுள்ளன. ஆனால், ரஷ்யாவோ அல்லது யுக்ரேனோ அதில் கையெழுத்திடவில்லை.



## கிளஸ்டர் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதற்கான ஆதாரங்கள் என்ன?

ரயில் நிலையத்தில் இந்த தாக்குதல் நடைபெற்றதற்கு பிறகு களத்திற்கு சென்ற பிபிசி செய்தியாளர்கள், கிளஸ்டர் குண்டுகள் இந்த தாக்குதலில் பயன்படுத்தப்பட்டதற்கான உறுதியான, தெளிவான சுவடுகளை களத்தில் கண்டனர்.

பலமுறை குண்டுகள் அங்கு வெடித்ததன் விளைவாக தாக்குதல் நிகழ்ந்த இடம் முழுதும் சேதமடைந்த துண்டுகள் சிதறிக்கிடந்தன, இது இத்தாக்குதலின் முக்கியமான தாக்கமாக உள்ளது. ஒவ்வொரு குண்டுவெடிப்பும் தாக்கத்தை ஏற்படுத்தியதற்கான சுவடுகள் அங்கு பதிந்துள்ளன.

ரயில் நிலையத்திற்கு அருகாமையில் உள்ள கட்டடம் ஒன்றிலும் இத்தகைய சிதறல்கள், தாக்குதலால் அக்கட்டடத்தின் சுவற்றில் ஏற்பட்டுள்ள பெரிய துளையின் ஓரத்தில் சிதறியுள்ளன.

இத்தாக்குதல் நடந்த உடனேயே நிகழ்விடத்திற்கு சென்ற வாஷிங்டன் போஸ்ட் செய்தியாளர்களிடம், இத்தாக்குதலை நேரில் கண்டவர்கள், "முதலில் ஒரு குண்டு வெடிக்கும் சத்தம் கேட்டது, அதனைத்தொடர்ந்து 4 - 5



குண்டுவெடிப்புகளின் சத்தம் கேட்டது" என தெரிவித்துள்ளனர். இந்த சத்தம் கிளஸ்டர் குண்டு தாக்குதலால் ஏற்படும் சத்தத்துடன் ஒத்ததாக உள்ளது.

தாக்குதல் நிகழ்ந்த இடத்தில் சோவியத் கால டோச்கா-யு ஏவுகணையின் பாகங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த ஏவுகணை கிளஸ்டர் குண்டுகள் பொருத்தப்பட்டுள்ள ஒற்றை போர்முனையைக் கொண்டிருக்கும் குறுகிய தூர பாலிஸ்டிக் ஏவுகணையாகும். இந்த ஏவுகணைகள் 50 குண்டுகள் வரை ஏந்திச் சென்று வெடிக்கும் திறன் கொண்டவை.

## உக்ரெய்னில் ரஷ்யா கிளஸ்டர் குண்டுகளை பயன்படுத்துகிறது?

யுக்ரேனில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியில், ரஷ்யா இத்தகைய ஏவுகணைகளை இதற்கு முன்பாகவே பயன்படுத்தியதற்கான ஆதாரம் உள்ளது. மேலும், தன்னுடைய ஆயுதக்கிடங்கில் யுக்ரேனும் இந்த ஆயுதத்தை வைத்துள்ளது.

யுக்ரேனின் டொனியட்ஸ்க் மற்றும் லூஹான்ஸ்க் பிரதேசங்களில் இந்த ஏவுகணைகளை பயன்படுத்தியதாக கூறப்பட்டதை ரஷ்யா முன்பு மறுத்திருந்தது. ஆனால், ரஷ்யாவின் மறுப்பு குறித்து விவாதம் எழுந்தது.

## ராணுவ நிபுணர்கள் என்ன சொல்கின்றனர்?

ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிட்யூட் மையத்தைச் சேர்ந்த ஏவுகணை நிபுணர் சித்தார்த் கௌஷல் கூறுகையில், "இந்த தாக்குதலால் ஏற்பட்டுள்ள பாதிப்பின் சுவடுகள், 9Ǝ24 போன்ற துணை ஆயுதங்களுடன் மிகவும் ஒத்துப் போகி றது, இது டோச்கா ஏவுகணையால் சுமந்து செல்லக்கூடிய சோவி யத் கால கிளஸ்டர் வெடிமருந்து ஆகும்" என தெரிவித்தார்.

இந்த தாக்குதலில் ஏற்பட்ட மிகவும் ஆழமற்ற பள்ளம் மற்றும் ஒரு திசையில் தோன்றும் துண்டு துண்டான கதிர்வீச்சு அடையாளங்களை சுட்டிக்காட்டினார், இது துணை ஆயுதங்களுடன் ஒத்துப் போகிறது.

இந்த ஆதாரங்களை ஏற்றுக் கொண்டுள்ள மேலும் இரண்டு நிபுணர்களுடன் பேசினோம்.

சமூக வலைதள காணொளிகள் மற்றும் புகைப்படங்களைக் கொண்டு இந்த ஏவுகணை ஏவப்பட்டதற்கான தளத்தை அடையாளம் காண பிபிசி முயற்சித்தது. ஆனால், இதுவரை அதனை அடையாளம் காண முடியவில்லை.

## கிளஸ்டர் குண்டுகள் தடை செய்யப்பட்டது ஏன்?

இந்த குண்டுகள் ஏற்படுத்தும் அழிவுகள் காரணமாகவும், சண்டை நடைபெறும் பகுதிகளில் இவை ஏற்படுத்தும் குறிப்பிட்ட ஆபத்துகள் காரணமாகவும், இந்த ஆயுதங்கள் மனித உரிமை அமைப்புகளிடமிருந்து பரவலான விமர்சனங்களை பெற்றது.


இந்த ஆயுதங்கள் 400 மீற்றர் தொலைவில் 50க்கும் மேற்பட்ட குண்டுகளை வெளியேற்றி வெடிக்கச் செய்து, மக்கள் தொகை நெருக்கடியான பகுதிகளில் பெரும் மனித இழப்புகளை ஏற்படுத்தவல்லது.

இவற்றின் துணை வெடிமருந்துகள் வெடிக்காத நிலையிலும் அவை ஆபத்துகளை ஏற்படுத்துவதாக உள்ளன. இந்த ஆபத்து, பழமையான, பல தசாப்தங்களாக காலாவதியான சோவியத் ஏவுகணைகளிலும் உள்ளது.

2008-ம் ஆண்டில் நடைபெற்ற கிளஸ்டர் குண்டுகள் குறித்த மாநாட்டில், அவற்றின் பயன்பாடு தடை செய்யப்பட்டது. ஆனால், இந்த உடன்படிக்கையில் ரஷ்யாவும் யுக்ரேனும் கையெழுத்திடவில்லை.

முன்னதாக, கார்கீயவில் ரஷ்யப்படைகள் கிளஸ்டர் குண்டுகளை பயன்படுத்தியதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த குற்றச்சாட்டையடுத்து, இதுகுறித்து விசாரணையை தொடங்குவதாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் அறிவித்தது.

**பலமுறை குண்டுகள் அங்கு வெடித்ததன் விளைவாக தாக்குதல் நிகழ்ந்த இடம் முழுதும் சேதமடைந்த துண்டுகள் சிதறிக்கிடந்தன, இது இத்தாக்குதலின் முக்கியமான தாக்கமாக உள்ளது. ஒவ்வொரு குண்டுவெடிப்பும் தாக்கத்தை ஏற்படுத்தியதற்கான சுவடுகள் அங்கு பதிந்துள்ளன.**



# ஈஸ்டர் தாக்குதல்:

## மூன்று ஆண்டுகள்! நீதியற்ற தேசத்தில் நாதியற்றவர்கள்!!

■ முருகபூபதி

" ஏலி ஏலி லாமா சபக்தானி " என் தேவனே என் தேவனே... ஏன் என்னை கைவிட்டீர்...? " யேசு சிலுவையில் அறையப்பட்ட போது உதிர்த்த வார்த்தைகள்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரில் மாதம் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவம் நடப்பதற்கு முன்பே, புலனாய்வுப்பிரிவுக்கு தகவல் கிடைத்திருந்தும், எதனையும் செய்யாமல் கையாலாகத்தனமாக இருந்தவர்களையும் தாக்குதல்களின் சூத்திரதாரிகளையும் விசாரிப்பதற்காக அன்றைய நாடாளுமன்றத்தினால் ஒரு விசாரணை தெரிவுக்குழுவும் நியமிக்கப்பட்டது.

அதிலும் இழுபறிகள் நிகழ்ந்தன.

தேசிய புலனாய்வு பிரிவின் பொறுப்பதிகாரி சிசிர மெண்டிஸ் அந்த விசாரணைக்குழுவின் முன்னால் தோன்றி சாட்சியமளித்தார். அதனை அவதானித்தார் சம்பவங்கள் நடந்தவேளையில் நாட்டிலிருக்காத தேசத்தின் அதிபர் மைத்திரியார். உடனே என்ன செய்தார்?

" நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்தவர்கள், பாதுகாப்பு துறையிலிருந்து வெளியேறியவர்கள்" என்று ஒரு பெரிய குண்டைப் போட்டார். அது தேவாலயங்களில் பாவிக்கப்பட்ட குண்டுகளைவிட மிகவும் வலிமையானது.

அந்த பொன்னான வாக்கைக் கேட்டதும் சிசிர மெண்டிஸ் தனது ராஜினாமா கடிதத்தை பாதுகாப்பு செயலாளர் ஷாந்த கோட்டேகொடவிடம் கையளித்துவிட்டு, தனக்கு சுகமில்லை எனச்சொல்லி ஓய்வுக்குச்சென்றார்.

" நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் புலனாய்வு அதிகாரிகள் வரவழைக்கப்பட்டு, விசாரணைக்கு உட்படுத்துவதை தான் ஒரு போதும் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை" என்றும் மற்றும் ஒரு அதிரடிக்குண்டைப்போட்டார் மைத்திரியார்.

இவ்வாறெல்லாம் அவர் செய்யப்போகிறார்





என்பதைத் தெரிந்துகொண்டே தெரிவுக்குழு பல வாரங்களாக விசாரணை செய்துகொண்டிருந்தது. ஊடகங்களும் அந்த விசாரணை வாக்குமூலங்களுக்காக பக்கங்களை நிரப்பிக்கொண்டிருந்தன. நாமும் படித்துத் தொலைத்( ந்)து கொண்டிருந்தோம்.

அங்கு சாட்சியமளித்த முஸ்லிம் அமைப்புகளின் பிரதிநிதிகள் பேசிய சுத்தமான சிங்கள மொழியை கேட்டு வியந்துபோன - எதிர்காலத்தின் பாதுகாப்பு அமைச்சர் பதவிக் கனவில் மிதந்த ஃபீல்ட் மார்ஷல் சரத்பொன்சேகா, " தம்மால் கூட அவ்வாறு அழகாக சிங்களம் பேசமுடியவில்லையே" என்று தனது குறைபாட்டை வெளிப்படுத்தினார்.

தேசிய பாதுகாப்பு சபையை உரிய முறையில் (முன்னாள் ) ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூட்டவில்லை என பாதுகாப்பு முன்னாள் செயலாளர் ஹேமசிறி பெர்னாண்டோ நாடாளுமன்ற தெரிவுக்குழு முன்னிலையில் சாட்சியமளித்திருந்தார்.

" தன்னை பதவி விலகுமாறும், அவ்வாறு பதவி விலகினால் தனக்கு இராஜதந்திர பதவியொன்றை வழங்குவதாகவும் " ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தனக்கு அழுத்தங்களை பிரயோகித்திருந்ததாக பொலிஸ் மாஅதிபர் பூஜித்த ஜயசுந்தர சாட்சியமளித்திருந்தார்.

இறுதியில் என்ன நடந்தது...? அந்த விசாரணைக்குழுவின் அறிக்கையை மைத்திரியார் கிடப்பில் போட்டார்.

" போதைவஸ்து கடத்தல்காரர்களை எப்படியும் தூக்கிலே தொங்கவிடுவேன் " என்று தனது பதவிக் காலத்தின் இறுதிப் பகுதியில் தொடர்ச்சியாகச் சொல்லிக்கொண்டிருந்த அவர், இறுதியில் செய்தது என்ன..?

ஒரு வெளிநாட்டுப் பெண்ணை துடிக்கத் துடிக்க கொன்றுவிட்டு மரணதண்டனைக் கைதியாக இருந்த ஒருவருக்கு பொது மன்னிப்பு அளித்தது தான்!

2019 இறுதியில் அதிபர் தேர்தல் நெருங்கியபோது, எதிரணி (ராஜபக்ஷக்கள்) தனது அரசின் மீது பாதுகாப்பு தொடர்பாக முன்வைத்த விமர்சனங்களினால்



கலவரமுற்றிருந்த பதவியிலிருந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கு, அல்பக்கதாதியின் உருவத்தில் ஒரு துரும்பு கிடைத்தது! ஐ.எஸ்.ஐ எஸ். அமைப்பின் தலைவர் அல் பக்தாதி கொல்லப்பட்டார்.

அதனை தனது அரசு கண்டித்ததாம்..! ஆனால், நாட்டின் தேசிய பாதுகாப்பை பொறுப்பேற்கப் போவ தாக தேர்தல் பிரசார மேடைகளில் கூறிக் கொண்டிருக்கும் ராஜபக்ஷக்கள் அது தொடர்பாக கருத்துக்களை கூறுவதற்கு தயங்குவது ஏன்? என கேள்வி எழுப்பியதுடன், இவர்களுக் கும் அந்தப் பயங்கரவாத அமைப்புடன் ஏதேனும் தொடர்புகள் இருக்கிறதா? என்ற கேள்வி எழுவதாகவும் சொன்னார்.

இறுதியில் 2019 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடுப்பகுதியில் அதிபர் தேர்தல் முடிந்தவுடன் காட்சிகள் மாறின.

ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் அவசரமாக இலங்கை வந்த பாரதப்பிரதமர் கொச்சிக்கடை அந்தோனியார் தேவாலயம் சென்று அஞ்சலி செலுத்தினார்.

அதிபர் தேர்தல் முடிந்த மறுகணமே தனது வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ். ஜெய்சங்கரை அவசரமாக இலங்கைக்கு அனுப்பி, தனது எஜமான் உங்களுடன் பேசவிரும்புகிறார். அவசியம் வாருங்கள் என்று புதிய அதிபருக்கு அழைப்புவிடுத்தார்.

புதியவரும் பதவி ஏற்றபின்னர் முதலாவது விஜயமாக பாரதம் சென்றார். குறிப்பிட்ட ஜெய்சங்கர் தற்போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்.

பேராயர் மல்கம் ரஞ்சித் அவர்களும் 2019 இல் தெரிவான புதிய அதிபரை சந்தித்து நடந்த சம்பவங்களுக்கு சரியான உரிய விசாரணைகளை நடத்து மாறு கோரினார். எதுவும் நடக்க வில்லை. இறுதியில் அவர் சர்வதேச சமூகத்தையும் வத்திக்கானில் போப் பாண்டவரையும் நாடினார்!

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்ப வம் நடந்து மூன்று ஆண்டுகளாகி விட்டன.

" ஏலி ஏலி லாமா சபக்தானி " என் தேவனே என்தேவனே... ஏன் என்னை கைவிட்டீர்"




# கடன் சூழ்ந்த இலங்கை!

## -இலங்கை நெருக்கடி குறித்து ஒரு இந்தியப் பார்வை-

ராம-ராவண யுத்தம் உச்சத்தைத் தொட்டு நிற்கிறது. ராமர் விடும் அஸ்திரங்கள் ஒவ்வொன்றாகத் தொடர்ந்து ராவணனைத் தாக்குகின்றன. ராவணனுடைய அஸ்திரங்கள் ஒவ்வொன்றாகத் தீர்ந்து போக அவனுடைய கிரீடமும், ராமர் விட்ட அம்பால் பூமியில் வீழ செய்வதறியாது திகைத்து நிற்கிறான் ராவணன். என்னதான் தவறிழைத்திருந்தாலும் சுத்த வீரன் அல்லவா ராவணன்? எனவே, ஓடாது நிற்கிறான். அதே சமயம் ராமரும் அவதாரம்அல்லவா? அப்போது ராமர் நினைத்திருந்தால், நிராயுதபாணியாக நின்ற ராவணனைக் கொன்றோ சிறை எடுத்தோ யுத்தத்தை முடித்திருக்கலாம். ஆனால், ராமர் அவ்வாறு செய்யவிலலை.

மாறாக, “ராவணா! நீ களைத்திருக்கிறாய். உனக்கு ஓய்வு தேவை. ஆகவே, இப்போது உன்னுடன் யுத்தம் செய்தல் ஆகாது. ஆகவே, நீ போய் ஒய்வெடுத்துக் கொள். இன்று போய் போருக்கு நாளை வா” என்றார் ராமர். ராவணன் அவமானத்தால் துடிக்கிறான். ஐயகோ ராமன் இப்படிக் கூறியதற்கு பதிலாக தன்னைக் கொன்றே இருக்கலாமே என்று மனம் நொந்த நிலையில் அரண்மனை திரும்புகிறான் ராவணன். அப்போது ராவணனின் மனநிலை எப்படிக் கலக்கமடைந்திருந்தது என்பதைத்தான் ஒரு புலவர் “கடன் கொண்டார் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்” என்று குறிப்பிடுகிறார்.

அது என்ன “கடன்கொண்டார் நெஞ்சம்?” அதற்கு தமிழகத்தின் அன்றைய காலகட்டத்தைப் பார்க்க வேண்டும். அப்போதெல்லாம் சோழ நாட்டில் ஒரு வழக்கம் இருந்தது. ஒருவர் வாங்கிய கடனைக் கட்ட முடியாதபோது, அவருக்குக் கடன் கொடுத்தவர் பொது இடத்தில் ஒரு வட்டம் வரைந்து அந்த கட்டத்திற்குள் கடன் வாங்கியவரை நிற்க வைத்துவிட்டு சென்றுவிடுவார். கடனைத் திரும்பத் தரும் வரை அவர் அக்கட்டத்தை விட்டு வெளிவர இயலாது. அப்படி ஆளாகும் நிலை, ஒருவருக்கு ஏற்பட்டால், அவர் மடிவதே மேல் என்று நினைப்பாரல்லவா? அப்படிப்பட்ட நிலை ராவணனுக்கு ஏற்பட்டதைத்தான் அப்புலவர் “கடன்கொண்டார் நெஞ்சம் போல் கலங்கினான் இலங்கை வேந்தன்” என்று குறிப்பிட்டார்.

அன்று இலங்கை வேந்தனுக்கு ஏற்பட்ட நிலை இன்று இலங்கை அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது. இலங்கையின் பொருளாதாரம் கடும் நெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. ஒரு கிலோ அரிசி 200 ரூபாய் கொடுத்தாலும் கிடைப்பதில்லை. பெட்ரோல், டீசல் விலை 200 ரூபாயைக் கடந்து விட்டது. ஒரு முட்டை 35 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. 90 சதவீத ஹோட்டல்கள் மூடப்பட்டு விட்டன. கொழும்பு உள்ளிட்ட முக்கிய நகரங்கள் மின்வெட்டு காரணமாக, பல மணி நேரம் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. மின்வெட்டு நீடிக்கக்கூடும் என்று கணிக்கப்படுகிறது.

கிராமப்புற மக்கள் விலைவாசி சுமையையும், மின்வெட்டு பாதிப்பையும் தாங்கிக் கொள்ள முடியாமல், அகதிகளாகத் தஞ்சம் புகுவதற்கு தமிழகத்திற்கு வந்து கொண்டிருக்கிறார்கள்.

கடன் அதிகமாகி விட்டதால், அந்நியச் செலவாணி கையிருப்புத் தீர்ந்து போனதால், வெளிநாட்டுப் பொருட்களை ஏற்றி வந்த கப்பல்கள் துறைமுகத்திலேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. எதிர்க்கட்சிகளும், மக்களும் வீதிகளில் இறங்கி போராடத் தொடங்கி இருக்கிறார்கள். அதிபரின் மாளிகை முற்றுகையிடப்பட்டு போராட்டங்கள் வெடிக்கத் தொடங்கி விட்டன. நெருக்கடியை சமாளிக்க இந்தியா போன்ற நாடுகளிடம் கையேந்துவதைத்தவிர இலங்கைக்கு வேறு வழியில்லை. சர்வதேச செலாவணி நிதியத்திடம் கடன் பெறுவதற்கும் இலங்கை பகீரத பிரயத்தனம் செய்து வருகிறது.



அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவைத் தவிர, அனைத்து அமைச்சர்களும் பதவி விலகி தேசிய அரசு அமைப்பதற்கான முயற்சிகள் அங்கு நடைபெற்று வருகின்றன. அதிபர் கோட்டாபய பதவி விலக மறுத்து விட்டார். ஆகவே, இலங்கையில் உச்சகட்ட அரசியல் குழப்பம் உருவாகி விட்டது. நாடாளுமன்றத்தில் ஆளும் அரசின் பலம் குறைந்து விட்டது. இலங்கை முழுவதும் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்குக் கூட தட்டுப்பாடு நிலவுகிறது. இதையடுத்து மருத்துவ நெருக்கடி நிலையை கோட்டாபய ராஜபக்ஷ அறிவித்து விட்டார். இதனால் மருந்துப் பொருட்கள் வாங்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டு விட்டனர். அத்தியாவசிய மருந்து, மாத்திரைகளின் விலை அதிகமாகி விட்டது. நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளை முற்றுகையிட்டு மக்கள் போராடத் தொடங்கி விட்டார்கள்.



இதுவரை கோட்டாபய ராஜபக்ஷவுக்கு ஆதரவாக இருந்த 11 கூட்டணிக் கட்சிகள் தங்கள் நிலைப் பாட்டை மாற்றத் தொடங்கி இருக்கின்றன. மக்களுடைய கோபத்தின் உக்கிரத் தாக்குதலில் கோடை வெயிலை விட அனலாக தகித்துக் கொண்டிருக்கிறது இலங்கை. நாடாளுமன்றம் கூடிய நிலையில், பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கவில்லை. இலங்கை நாடாளுமன்றத்தில் கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சி நீடிக்க வேண்டும் என்றால், 113 எம்பிக்களின் ஆதரவு வேண்டும். தற்போது 138 எம்.பி.க்களின் ஆதரவு இருப்பதாக கோட்டாபய ராஜபக்ஷவின் சிறிலங்கா பொதுஜன பெரமுனா கட்சி கூறியிருக்கிறது. அக்கட்சியும், அதனை ஆதரித்த கூட்டணிக் கட்சிகளும் சேர்த்து ஏறக்குறைய 60 எம்.பி.க்கள் கோத்தபய மீது கடும் அதிருப்தியில் இருப்பதாகத் தெரிய வருகிறது. ஆகவே, கவிழும் அபாயத்தில் இருக்கிறது கோட்டாபய அரசு.

ஆக, இனி வரும் காலம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு சோதனைக் காலம்தான். அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவித்து கோட்டாபய, மகிந்த ராஜபக்ஷ போன்றவர்கள் செய்த கொடுமையால், கண்ணீர் விட்ட தமிழர்களுடைய சாபம் துரத்தத் தொடங்கி விட்டது. அந்நிய செலாவணி குறைந்திருப்பதாலும், வெளிநாட்டுக் கடன் அதிகரித்திருப்பதாலும் பொருளாதார நிலையில் அதலபாதாளத்திற்குச் சென்றுவிட்டது இலங்கை. எரிபொருள் இறக்குமதியையும், அத்தியாவசியப் பொருட்களின் இறக்குமதியையும் கையாள முடியாமல் இலங்கை திண்டாடி வருகிறது.

இலங்கை மக்கள் தொடர்ந்து போராடி வருவது வெளியில் தெரியாமல் இருக்க சமூக ஊடகங்கள் தடை செய்யப்பட்டன. அதற்கு கடும் எதிர்ப்பு எழுந்ததால் பின்னர் அத்தடை திரும்பப் பெறப்பட்டது. பங்குச்சந்தை வர்த்தகம் அநேகமாக முற்றிலும் நிறுத்தப்பட்டு விட்டது.

**(14 ஆம் பக்கம் பார்க்க...)**

# இன்றைய ஜனநாயகத் தருணம் செயலுக்கும் சிந்தனைக்குமான ஓர் அழைப்பு

## இலங்கை, மற்றும் புலம்பெயர் புத்திஜீவிகள் 250 பேர் கூட்டாக விடுத்துள்ள அழைப்பு!!

மாற்றத்துக்கான கோரிக்கைகள் தற்போது ஆட்சியிலுள்ள அரசாங்கத்தினை மாத்திரமல்லாது, அரசாட்சியின் பல வடிவங்களையும் அப்புறப்படுத்துவதுடன் தொடர்புபட்டுள்ளன. ஆர்ப்பாட்டம் செய்வோர் கடினமான பல கேள்விகளை முன்வைத்துள்ளனர். எமது பொருளாதாரக் கொள்கைகள், நீதித்துறையின் செயற்பாடுகள், சமூகங்களுக்கிடையிலான உறவுகள் மற்றும் இந்த விடயங்களுடன் தொடர்புபட்ட ஏனைய விடயங்கள் போன்றன இந்தக் கேள்விகளின் கருவாக அமைந்துள்ளன. பொருட்களின் விலைகள் குறைக்கப்பட வேண்டும் என்பதிலே மக்கள் உறுதியாக உள்ளனர். உணவு, மருந்து, பால் மா, மின்சாரம், எரிவாயு (காஸ்), எழுதுபொருட்கள் போன்ற அத்தியாவசிய பண்டங்கள் போதுமான அளவிலே தமது குடும்பங்களுக்குக் கிடைக்க வேண்டும் என அவர்கள் கோருகின்றனர். சூறையாடப்பட்ட மக்களின் பணம், மீளப்பெறப்பட்டு மக்களிடையே பகிரப்பட வேண்டும் எனப் பல சமூகங்கள் கோரி வருகின்றனர். இன மத ரீதியிலான பிரிவினையைத் தூண்டும் அரசியல் ஒழிக்கப்பட்டு, கடந்த காலத்தில் இழைக்கப்பட்ட குற்றங்களுக்கும், வன்முறைகளுக்கும் பொறுப்புக் கூறப்பட வேண்டும் எனப் பலர் கோருகின்றனர். சர்வாதிகாரத்திடம் இருந்து விடுவிக்கப்பட்ட ஒரு நாடு தமக்கு வேண்டும் என மக்கள் ஐக்கியத்துடன் குரல் எழுப்புகின்றனர். அரசியல், பொருளாதாரம், சமூகம் மற்றும் பாலினம் சார் நியாயங்களையும், நீதியினையும் கோரும் மக்களின் இந்த பல்குரற் கோஷங்கள் கேட்கப்பட வேண்டியவை் அவற்றுக்குரிய தீர்வுகள் வழங்கப்பட வேண்டும்.

பாரியளவில் கடன்பட்டிருக்கும் எமது அரசாங்கம், அத்தியாவசிய இறக்குமதிகளைப் பெற்றுத் தரத் திராணியற்றுப் போனமை நாட்டிலே ஏற்கனவே உருவாகி இருந்த பொருளாதார நெருக்கடியினை மேலும் சிக்கலாகியது. இந்தச் சூழலிலேயே போராட்டங்கள் வெளிக்கிளம்பின. இரசாயன உரங்களின் இறக்குமதியினைத் தடை செய்தல் போன்ற அரசாங்கத்தின் தான்தோன்றித்தனமான முடிவுகள் விவசாய உற்பத்தியினை மோசமாகப் பாதித்தன.

உணவு, மருந்து, எரிபொருள், மின்சாரம் ஆகியவற்றின் பற்றாக்குறைகளும், அபரிமிதமான விலை அதிகரிப்புகளும் மக்களினை சுமைக்குள்ளாக்கின. இந்த நிலைமைகள் உழைக்கும் வர்க்கத்தினர், கீழ்மட்ட வர்க்கத்தினர், பலவகைகளிலும் ஓரங்கட்டப்பட்ட சமூகங்கள் மீது பாரதூரமான தாக்கங்களை உருவாக்கின. இவர்களின் நிலைமை கொவிட்-19 நோய்த்தொற்றின் காரணமாக மேலும் அபாயத்துக்கு உள்ளாகியது.

இந்த நெருக்கடியின் தோற்றுவாய்கள் அரசியலுடன் தொடர்புபட்டவை. அடுத்தடுத்து ஆட்சிக்கு வந்த சர்வாதிகார அரசாங்கங்களின் கொள்கைகளே இன்றைய நெருக்கடிக்குக் காரணங்களாக அமைகின்றன. இவ்வாறான ஆட்சி முறையானது, சிங்கள - பௌத்த பெரும்பான்மைவாத ரீதியிலான அணிதிரட்டல்களின் ஊடாகப் பலப்படுத்தப்பட்டு வந்தது.

இந்தப் போக்கின் மிக அண்மைய வடிவங்களில் ஒன்றே கொவிட்டினால் இறந்த முஸ்லிம்களின் உடலங்கள் மீது கட்டாயத் தகனம் திணிக்கப்பட்டமை. சமூகத்தின் தேவைகளுக்கு முக்கியத்துவம் வழங்காது, அதிகாரம் மிக்க, தொழில்முறைசார், இராணுவப் பாங்கான குணாதிசயங்களைக் கொண்ட செல்வந்த ஆண்களினால் நாடு முன்னடத்தப்பட வேண்டும் என்ற கருத்தியலின் மீது இந்த ஆட்சி முறையானது கட்டியெழுப்பப்பட்டுள்ளது. இவ்வாறான கருத்தியல்கள் விளிம்புநிலை மக்கள் மீது பாகுபாடு காண்பிக்கும் அதேவேளை, பன்மைத்துவத்துக்கான சந்தர்ப்பங்களையும்

> பிரச்சினைக்குத் தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு ஒன்று இடம்பெறும் என இன்று பேசப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தினை மிகவும் உன்னதமான தீர்வாக நோக்குகின்ற நவதாரளவாத பொருளாதாரச் சிந்தனை எல்லா அரசியல் நிலைப்பாடுகளினை வைத்திருப்போர் மத்தியிலும் வேரூன்றி உள்ளது. எனினும், இந்த நெருக்கடிக்கு எம்மை இட்டுச் சென்றதே பல தசாப்தங்களாக நாம் பின்பற்றி வரும் நவ தாராளவாதக் கொள்கைகள் தான் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

மட்டுப்படுத்தியுள்ளன. இந்தக் கருத்தியல்கள் கூடியளவிலான இராணுவமயமாக்கலினையும், சமத்துவமின்மையினையும், அநீதியினையும் உருவாக்கியுள்ளன. அவை ஜனநாயகபூர்வமான கூட்டு நடவடிக்கைகளுக்கான வெளியினை மட்டுப்படுத்தி, அதற்குப் பதிலாக, மையப்படுத்தப்பட்ட அதிகாரத்தையும், மக்கள், அரசியல்வாதிகளின் தயவில் தங்கியிருக்க வேண்டியிருக்கின்ற அரசியற் கலாசாரத்தினையும் உருவாக்கியுள்ளன.

இன்றைய நெருக்கடியினைத் தீர்க்கும் வகையிலே முன்வைக்கப்படும் தீர்வுகள் நிலைமையினை மேலும் மோசமாக்காது இருப்பது மிகவும் அவசியம். பிரச்சினைக்குத் தீர்வாக சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு ஒன்று இடம்பெறும் என இன்று பேசப்படுகின்றது. சர்வதேச நாணய நிதியத்தினை மிகவும் உன்னதமான தீர்வாக நோக்குகின்ற நவதாரளவாத பொருளாதாரச் சிந்தனை எல்லா அரசியல் நிலைப்பாடுகளினை வைத்திருப்போர் மத்தியிலும் வேரூன்றி உள்ளது.

எனினும், இந்த நெருக்கடிக்கு எம்மை இட்டுச் சென்றதே பல தசாப்தங்களாக நாம் பின்பற்றி வரும் நவ தாராளவாதக் கொள்கைகள் தான் என்பது சுட்டிக்காட்டப்பட வேண்டும். நவதாராளவாதக் கொள்கைகள், சமூகம் மீதான அக்கறைகளை விடுத்து, தனிநபர் சொத்துடைமைகளையும், உரிமைகளையும், சுதந்திர சந்தைகளையுமே ஊக்குவிக்கின்றன. உலகளாவிய ரீதியில் போக்குவரத்து, சுகாதாரம், கல்வி ஆகிய துறைகள் மோசடிகளுக்கும், தனிப்பட்ட இலாபமீட்டல்களுக்குமான களங்களாக மாறிவருவதோடு, அரசாங்கங்கள் இவ்வாறான நவதாராளவாதப் போக்குகளை ஆதரிக்கும் வகையில் மாற்றப்பட்டுள்ளன. இவ்வாறான சேவைகளினை அரசு மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பு இல்லாது செய்யப்பட்டுள்ளது, அதேபோல, இந்தச் சேவைகள் பொதுமக்களுக்கு உரியவை அல்ல என்ற நிலைப்பாடும் வளர்த்தெடுக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அரசின் வகிபங்கானது நலிவடைந்துள்ளதுடன், சந்தைகளின் மாறுபாடுகளின் தாக்கத்தின் காரணமாக மக்கள் பாதிப்படைய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. சமூக நலனுக்கான நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுவதை நாம் கண்ணுற்றுள்ளோம். கட்டுப்பாடுகளின் நீக்கமும், தனியார்மயமாக்கலும் இன்று சாதாரணமாகிவிட்டன. தன்னிறைவுக்கு இட்டுச் செல்லும் உற்பத்தியினை வளர்த்தெடுப்பதனை விடுத்து, வெளிநாட்டு வேலையாட்களின் சுரண்டப்பட்ட ஊதியத்திலும், சர்வதேசக் கடனிலும் தங்கியிருக்க வேண்டிய நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள்ளோம். சர்வதேச நாணய நிதியத்தின் தலையீடு இடம்பெறும் பட்சத்தில், மேற்கூறியவற்றை நாம் மனதில் கொள்ளுதல் அவசியம்.

பொருளாதார நெருக்கடிக்கான குறுகியகாலத் தீர்வாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணப் பொருட்கள் வழங்கப்பட வேண்டும். மீள்பகிர்ந்தளிப்பு மற்றும் கூடிய சமத்துவத்தினை நோக்கிச் செல்லும் வகையில், சொத்துக்கள் மற்றும் வாகனங்கள் மீதான செல்வ வரிகள் உள்ளங்கடலான அதிகரித்துச் செல்லும் நேரடி வரியினை நாம் கோர வேண்டும்.

இராணுவத் துக்கான நிதி ஒதுக்கீடு குறிப்பிடத்தக்க அளவிலே குறைக்கப்பட வேண்டும் என்பதனையும், சுகாதாரம், கல்வி, மின்சாரம், நீர் விநியோகம், போக்குவரத்து போன்ற முக்கியமான பொதுச் சேவைகளுக்கு அரசு நிதி ஒதுக்கீடுகளை மேற்கொண்டு அவற்றினை வலிமைப்படுத்த வேண்டும் என நாம் வலியுறுத்த வேண்டும். காணியற்றோர் வீடுகளை அமைப்பதற்கும், விவசாயத்தினை மேற்கொள்ளுவதற்கும், வேறு பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும் அவர்களுக்கு உதவும் வகையில் காணி நிலங்கள் வழங்கப்பட வேண்டும்.

இன்றைய இந்த ஜனநாயகமான தருணத்தினை நாம் விரிவுபடுத்தி, திட உருவமாக்கி, நிலைத்திருக்கக் கூடிய ஓர் அரசியல் செயற்பாடாக மாற்றியமைக்க வேண்டும். நீண்டகாலத்திலே கட்டமைப்பு மாற்றங்கள் உருவாகும் வகையில் நாம் எமது கோரிக்கைகளை முன்னிறுத்த வேண்டும். பொதுப் பாதுகாப்புச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் போன்ற கொடூரமான சட்டங்கள் வாபஸ் பெறப்பட வேண்டும். இராணுவத்திற்கான நிதியைக் குறைத்து, இராணுவத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கும் காணிகளை விடுவித்து, இராணுத்தினரைப் படைமுகாம்களுக்குள் மட்டுப்படுத்தி, இராணுவமய நீக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மையங்களிலிருந்து விளிம்புகளை நோக்கி அதிகாரப் பகிர்வு இடம்பெற வேண்டும். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை, அதிகாரத்தை ஒரு மையத்தில் குவிக்கும் வகையில் கொண்டு வரப்பட்ட 20ஆம் சீர்திருத்தம் போன்றவை ஒழிக்கப்பட வேண்டும். மாறாக, தீர்ப்பாயங்கள், சுயாதீன ஆணைக்குழுக்கள், சுயாதீன நீதித்துறை போன்ற வழிமுறைகள் மூலம் வெளிப்படைத் தன்மை மற்றும் பன்மைத்துவம் வளர்த்தெடுக்கப்படல் வேண்டும்.

இன்றைய வரலாற்று முக்கியத்துவம் மிக்க தருணத்திலே, எம்மத்தியிலே தோழமையுணர்வு மேலோங்க வேண்டும் என மக்களாக நாம் அழைப்பு விடுக்கின்றோம்! எங்கள் எல்லோருக்கும் நியாயமான, ஜனநாயகமான ஒரு எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்காக, தொழிலாளர்கள், தொழிற் சங்கங்கள், பெண்கள் குழுக்கள், ஒதுக்கப்பட்ட - உரிமைகள் மறுக்கப்பட்ட - அதிருப்திக்குள்ளான சமூகங்கள் என அனைவரையும் உள்ளடக்கிய ஒரு இயக்கத்தின் உருவாக்கத்திற்காக நாம் அழைப்பு விடுகின்றோம்.

## பிரபாஸ் படத்தில் பிரபலநடிகை!

பொலிவுட் இயக்குனர் ஓம் ரவுத் இயக்கத்தில் பிரபாஸ் நடிப்பில் பிரமாண்டமாக உருவாகி வரும் படம் “ஆதிபுருஷ்“ . இராமாயணக் கதையை மையமாக கொண்டு இந்தப் படம் உருவாகிறது.

தெலுங்கு மற்றும் ஹிந்தியில் நேரடியாக படமாக்கப்பட்டு வருகிறது . தமிழ், மலையாளம், கன்னடம் மற்ற இந்திய மொழிகளில் டப்பிங் செய்யப்படவுள்ளது. இந்நிலையில் இந்தப் படத்தில் பிரபல பாலிவுட் நடிகை சோனல் சவுகான் இணைந்துள்ளார்.



## தனுஷின் முடிவு மாற்றம்!

பெரிய இயக்குநர்களின் படங்களில் மட்டுமே நடிப்பேன் எனத் தெளிவாக முடிவெடுத்துவிட்டார் தனுஷ். ‘மாறன்’ படத்தின் தோல்வி தனுஷை வெகுவாக பாதித்துவிட்டது. அதனால் உடனடியாக வெற்றிமாறன் படத்தில் நடிக்க விரும்பினார் தனுஷ்.

சூரியாவை வைத்து ‘வாடிவாசல்’ படத்தைத் தொடங்கவே வெற்றிமாறனுக்கு நேரம் சரியாக இருக்கிறது. அதனால், ‘சிறுத்தை’ சிவா, ஹெச்.வினோத், நெல்சன், லோகேஷ் கனகராஜ் என முன்னிலை இயக்குநர்களிடம் கதை கேட்டு வருகிறார் தனுஷ்.





## 4 படங்களில் வடிவேல்

நகைச்சுவை நடிகர் வடிவேலுக்கு விதிக்கப்பட்ட மறைமுக தடை காரணமாக கடந்த சில வருடங்கள் நடிக்காமல் இருந்தார். கடந்த வருடம் தடையும் விலக்கி கொள்ளப்பட்டது. இதனால், மீண்டும் வடிவேல் நடிக்க தொடங்கி இருக்கிறார்.

தற்போது இயக்குநர் சுராஜ் இயக்கத்தில் நாய் சேகர் ரிட்டன்ஸ் படத்தில் கதாநாயகனாக நடித்து வருகிறார். படப்பிடிப்பு இறுதி கட்டத்தில் உள்ளது.

தொடர்ந்து, மாரி செல்வராஜ் இயக்கத்தில் மாமன்னன் படத்தில் உதயநிதி ஸ்டாலினுடனும், நெல்சன் இயக்கத்தில் ரஜினி காந்துடனும் வடிவேல் நடிக்கவுள்ளார். மேலும் இயக்குநர் கௌதம் மேனன், வடிவேலுவை வைத்து முழு நீள நகைச்சுவை படம் ஒன்றை இயக்கவுள்ளார்.

## கனவு நனவானது!



விஜயுடன் ஜோடி சேர வேண்டும் என்பதை வாழ்நாள் இலட்சியமாக வைத்திருந்தார் ராஷ்மிகா மந்தனா. இந்நிலையில், தில் ராஜூ தயாரிப்பில் உருவாகும் விஜயின் 66ஆவது படத்தில் ராஷ்மிகா நாயகியாக நடிக்கவுள்ளார்.

ஸ்டில் ஷூட்டுக்காக, தனக்கு அருகில் நின்ற விஜய்க்கு ராஷ்மிகா திருஷ்டி முறிக்க இணையத்தில் அதுதான் பிரபலமாகியுள்ளது. இந்நிலையில், விஜயின் அடுத்த படத்திலும் தான்தான் நாயகி என்று கூறி வருகிறராம் ராஷ்மிகா.

## ஆலியாவை கைபிடித்த ரன்வீர்!

இந்தியாவின் பொலிவூட் நட்சத்திரங்களான ரன்வீர் கபூர் - ஆலியா பட் இருவரும் கடந்த வியாழக்கிழமை திருமணபந்தத்தில் இணைந்தனர். இந்தத் திருமணம் இந்திய திரையுலகின் மிகப்பெரிய திருமணங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

இவர்களின் திருமண கொண்டாட்டத்தில் இந்திய திரையுலகின் நட்சத்திரங்கள் பலர் பங்கேற்றனர். திருமண பந்தத்தில் இணைந்த பிறகு இந்த இணை செய்தியாளர் சந்திப்பிலும் பங்கேற்றது. அத்துடன், தமது திருமண படங்களை சமூகவலைத்தளங்களிலும் பதிவிட்டுள்ளது.









**திரைப்படம் - கே.ஜி.எவ். 2**
**இயக்கம் - பிரசாந்த் நீல்**
**இசை - ரவி பர்சுர்**
**நடிப்பு - யஷ், ஸ்ரீநிதி ஷெட்டி**

**2018** ஆம் ஆண்டு கன்னடத்தில் வெளியான கே.ஜி. எவ். படத்தின் இரண்டாவது பாகமே கே.ஜி.எவ். 2. மும்பையில் இருந்து அடிமையாக தங்கக் கோட்டைக்கு வந்து கைப்பற்ற கொலை செய்வதுடன் முதல் பாகம் முடிவடைந்திருக்கும். ராக்கி சாம்ராச்சியத்தின் வளர்ச்சி - வீழ்ச்சியை சொல்கிறது இரண்டாம் பாகம்.

இயக்குநர் பிரசாந்த் நீல், கதாநாயகன் யஷ் கூட்டணி இந்தப் படம் மூலம் இந்திய திரையுலகுக்கு புதிய அணுகு முறையை திறந்துள்ளார்கள். அதிரடிப் படம் என்றால் இப்படித்தான் இருக்க வேண்டும் என்று முன்னுக்கு நிற்கிறது இந்தப் படம்.

கே. ஜி. எவ். சாம்ராச்சியத்தில் இனி தான்தான் ராஜா என்று இதுவரை அங்கு தங்களை தாதா என சொல்லி வந்தவர்களை அழைத்துச் சொல்கிறார் யஷ். சில வருடங்களில் அவரின் சாம்ராச்சியம் உச்சத்தை அடைகிறது. அதே சமயம் சி. பி. ஐ., கே. ஜி. எவ்வில் நடப்பதை கண்காணித்துக் கொண்டிருக்கிறது. ஒரு கட்டத்தில் பிரதமர் ரவீணா டாண்டனிடமே சி. பி. ஐ. அதிகாரி நேரடியாகப் பேசி ராக்கி மீது நடவடிக்கை எடுக்கும் அனுமதியைப் பெறுகிறார். இதனிடையே, தன்னுடைய கே.ஜி.எவ். கோட்டையை இழந்த சஞ்சய் தத்தும் அதை மீண்டும் கைப்பற்ற நினைக்கிறார். இப்படியான சூழலில் ராக்கி என்ன செய்கிறார் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

இப்போதைய தமிழ் ரசிகர்கள் ரஜினிகாந்தின் நாயகத் தன்மையைத்தான் உச்சமாகக் கண்டு ரசித்திருக்கிறார்கள். அதையும் மிஞ்சும் அளவிற்கு இந்தப் படத்தில் ராக்கி என்ற யஷ்ஷின் நாயக தன்மை அமைந்துள்ளது. குறிப்பாக டுபாய் சென்று அங்குள்ள தலைவனை சந்தித்து பேசும் காட்சி, தனது பழைய பங்காளியை கொல்லும் காட்சி, பிரதமர் அலுவலகத்திற்கே சென்று தன்னைப் பற்றியே தன்மீதே முறைப்பாடு செய்யும் காட்சி என நிறைய காட்சிகளைச் சொல்லலாம்.

படத்தின் கதாநாயகி ஸ்ரீநிதி ஷெட்டி. தன் காதலி தன்னுடனேயே இருக்க வேண்டுமென அவரை வலுக்கட்டாயமாகக் கே. ஜி. எவ்வுக்கு தூக்கி வந்து விடுகிறார் யஷ். முதலில் யஷ்மீது வெறுப்படைந்தாலும் போகப்போக யஷ்ஷை காதலிக்கிறார். நாயகனுக்கு முக்கியத்துவம் உள்ள படமாக இருந்தாலும் நாயகி வரும் காட்சிகளில் அவருக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்கள்.

சஞ்சய் தத், ரவீனா டாண்டன், படத்தில் மிரட்டும் இரண்டு முக்கியமானவர்கள். அகிரா என்ற மிரட்டல் வில்லனாக சஞ்சய் தத். அவரின் தோற்றமும், உடல் மொழியும் ஹொலிவூட் வில்லனைப் பார்ப்பது போல உள்ளது. பிரதம மந்திரியாக ரவீனா டாண்டன். பெண் என்றால் அழகு மட்டும்தான் என்று யார் சொன்னது, பெண்களின் கம்பீரமே தனி என தனது நடிப்பால் நிரூபிக்கிறார் ரவீனா. சிறிய கதாபாத்திரங்களாக இருந்தாலும் அச்யுத் குமார், ஈஸ்வரி ராவ், சரண் கவனம் பெறுகிறார்கள்.

இசை, ஒளிப்பதிவு, படத்தொகுப்பு, கலை இயக்கம், சண்டைப் பயிற்சி, ஒலிப்பதிவு, ஆடை வடிவமைப்பு என பல தொழில்நுட்ப கலைஞர்களும் இது தங்களுக்கான படம் என்பதை உணர்ந்து அவர்களது சிறந்த ஈடுபாட்டைக் கொடுத்திருக்கிறார்கள்.

இடைவேளை வரை கொஞ்சம் பரபரப்பு இல்லாமல் மெதுவாக நகருகிறது. ஆனால், இடைவேளைக்கு முன்பாக ஆரம்பிக்கும் பரபரப்பு, உச்சக்கட்டம் வரை அப்படியே நீடிக்கிறது. கத்திக்குத்து, துப்பாக்கிச்சூடு என பல காட்சிகளில் இரத்தம் தெறிக்கிறது. படம் முடிந்துவிட்டது என நினைத்தால் கே. ஜி. எவ். 3ஆம் பாகத்துக்கும் பிள்ளையார் சுழி போட்டுள்ளார்கள்.

ஈழநாடு





# தந்தையின் பாணியில் தனயன்!

12 வயதுக்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்ட போட்டியில் கோல் பதிவு செய்ததை தனது தந்தையின் பாணியில் கொண்டாடி மகிழ்ந்துள்ளார் ரொனால்டோவின் மகன்.

உதைபந்தாட்ட உலகில் அதிக கோல்களை பதிவு செய்த வீரராக அறியப்படுபவர் ரொனால்டோ. போர்த்துக்கல் நாட்டவரான இவர், கழகப் போட்டிகளில் மன்செஸ்டர் யுனைற்றெட் அணிக்காக விளையாடி வருகிறார். 37 வயதான அவருக்கு நான்கு குழந்தைகள்.

இவர்களில் மூத்த பிள்ளை 12 வயதுக்கு உட்பட்டோருக்கான மன்செஸ்டர் யுனைற்றெட் அணியில் விளையாடி வருகிறார். அண்மையில் அவர் இரண்டு கோல்களை அந்த அணிக்காக பதிவு செய்திருந்தார்.

இதில் ஸ்பெயின் நாட்டு உதைபந்தாட்ட அணிக்கு எதிராக பதிவு செய்த கோலும் அடங்கும். அந்த கோலை அவர் அடித்ததும் தனது தந்தையின் பாணியில் அதனை கொண்டாடி தீர்த்துள்ளார். இதனை ஸியூ ஸ்டைல் என ரொனால்டோவை பின்தொடர்பவர்கள் சொல்வதுண்டு. கோல் பதிவு செய்யும் நேரங்களில் ரொனால்டோ இந்த பாணியை பின்பற்றி கொண்டாட்டத்தில் ஈடுபடுவது வழக்கம். அதையே இப்போது அவரது மகனும் செய்துள்ளார்.

இது சமூக வலைதளத்தில் பலரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இந்த போட்டியில் அவர் 68ஆவது நிமிடத்தில் இந்த கோலை பதிவு செய்துள்ளார். கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு தந்து வழியில் தனது மகனும் உதைபந்தாட்ட வீரனாக உருவாக்க வேண்டும் என தான் விரும்புவதாக ரொனால்டோ சொல்லியிருந்தார். இப்போது அது நிஜமாகியுள்ளது.

# மாயவித்தைகளின் சொந்தகாரன்

## மாயம் காட்டும் தீக்ஷன

நடப்பு ஐ. பி. எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடும் இளம் சுழல்பந்து வீச்சாளர் மஹேஷ் தீக்ஷன, தனது சுழல் பந்துகள் மூலம் மாயாஜால வித்தைகளை நிகழ்த்திக் கொண்டு வருகிறார்.



உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் அற்புதமான திறனை வெளிப்படுத்தி உலக கிரிக்கெட்டுக்கு அறிமுகமானவர் தீக்ஷன. கடந்த ஆண்டு நடந்த ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் சிறந்த பந்துவீச்சு சராசரியை கொண்டிருந்த முதல் 15 வீரர்களில் இவரும் ஒருவர்.

தற்கால கிரிக்கெட் துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இருக்கிறது என்று ஒரு தரப்பினர் சொல்வதுண்டு. "இருந்தால் இருந்துவிட்டு போகட்டும். நான் என் வேலையை சரியாக செய்வேன்" எனச் சொல்வது போல், இதே நவீன கிரிக்கெட்டுக்கு ஏற்ற வகையில் தன்னை தயார்படுத்திக் கொண்டார் தீக்ஷன. இது தான் அவரை ஐ. பி. எல்லுக்கு அழைத்து வந்தது.

21 வயதே ஆன நம் நாட்டவரான தீக்ஷன கொழும்பை சேர்ந்தவர். முதலில் லங்கா பிறீமியர் லீக் தொடரில் அறிமுகமாகி 16 விக்கெட்களை கைப்பற்றி பிரகாசித்தவர். இதன் பின்னரே சர்வதேச கிரிக்கெட்டுக்கு அறிமுகமானார். இதுவரை இலங்கை அணிக்காக 4 ஒருநாள் மற்றும் 15 இருபது -20 போட்டிகளில் விளையாடியுள்ளார். இதன் மூலம் 20 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார்.

2021ம் ஆண்டு டி20 உலகக் கோப்பையில் இலங்கை அணிக்கு எதிரான ஆட்டத்தில் இங்கிலாந்து வீரர் பட்லர் சதம் பதிவு செய்திருந்தார். ஆனால், அதே ஆட்டத்தில் தீக்ஷன நான்கு ஓவர்கள் வீசி வெறும் 13 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்திருந்தார். அந்த அளவுக்கு தரமாக பந்து வீசி, எதிரே நிற்கும் துடுப்பாட்ட வீரரைக் கட்டுப்படுத்தும் வல்லமை படைத்தவர் இந்த இளம் வீரர்.

ஐ. பி. எல். ஏலத்தில் சென்னை அணி அவரை 70 இலட்சம் இந்திய ரூபாய்க்கு வாங்கியது. இதுவரை ஐபிஎல் அரங்கில் இரண்டு போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார். முதல் போட்டியில் விக்கெட் ஏதும் எடுக்கவில்லை. ஆனால், இரண்டாவது போட்டியில் அவரது பந்துவீச்சு திறனால் ஆர்சிபி-யை ஆட்டம் காண செய்தார். 4 விக்கெட்களை வீழ்த்தி அதிரடி காட்டியிருக்கிறார்.



# தன் வினை தன்னை சுடும்!

குஜராத் ரைட்டன்ஸ் அணியின் தலைவர் ஹார்திக் பாண்ட்யா, ஷமியின் பந்துவீச்சில் பிடியெடுப்பை தவறவிட்டதை சுட்டிக்காட்டி சிலர் அவரை நையாண்டிசெய்துள்ளனர்.

நடப்பு தொடரில் குஜராத் ரைட்டன்ஸ் அணியை வழிநடத்தி வருகிறார் இந்தியாவின் சகலதுறை வீரர் ஹார்திக் பாண்ட்யா. துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு என சகலத்திலும் வல்லவரான அவர் தொடரில் அசத்தி வருகிறார். அது அந்த அணியின் வெற்றிக்குப் பெரிதும் உதவி வருகிறது.

கடைசியாக அந்த அணி ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு எதிராக விளையாடியிருந்தது. இந்தப் போட்டியில் ஆட்ட நாயகன் விருதையும் அவர் வென்றிருந்தார். இருந்தாலும், இதே போட்டியில் அவர் தவறவிட்ட பிடியெடுப்பு வாய்ப்புக்காகவே சிலர் அவரை ஏளனம் செய்துள்ளனர்.

அதற்குக் காரணம், இந்தப் போட்டிக்கு முன்னதாக நடைபெற்ற போட்டியில் பாண்ட்யா விதைத்த வினைதான். ஹைதராபாத் அணிக்கு எதிரான அந்தப் போட்டியில் ஹார்திக் பந்துவீசிய போது எதிரணி துடுப்பாட்டவீரர் கொடுத்த பிடியெடுப்பு வாய்ப்பை பிடிக்க தவறியிருந்தார் ஷமி. சக அணி வீரர் என்று கூட பார்க்காமல் களத்தில், கமெரா முன்பாக கடும் கோபத்தில் திட்டியிருந்தார் பாண்ட்யா. அதனை அப்போதே சமூகவலைத்தளத்தினர் கண்டித்திருந்தனர்.

இந்நிலையில், அதற்கடுத்த போட்டியில் பாண்ட்யா தவறவிட்ட பிடியடுப்பு வாய்ப்பை சுட்டிக்காட்டி பலரும் தங்கள் கருத்துகளை சொல்லியுள்ளனர். அதே நேரத்தில் அதற்காக ஷமி, பாண்ட்யாவிடம் கோபப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஓரணியில் பகை தேசத்தவர்!

இந்தியாவின் புஜாரா மற்றும் பாகிஸ்தானின் முகமது ரிஸ்வான் ஆகியோர் இங்கிலாந்து கவுன்டி கிரிக்கெட் தொடரில் சசெக்ஸ் அணிக்காக அறிமுக வீரர்களாக களம் இறங்கியுள்ளனர். இதனை இரு நாட்டு ரசிகர்களும் சமூக வலைதளங்களில் கொண்டாடி வருகின்றனர்.

இங்கிலாந்து நாட்டில் கவுன்டி கிரிக்கெட் மிகவும் பிரபலம். இதில் உள்நாட்டு வீரர்களுடன் வெளிநாடுகளை சேர்ந்த கிரிக்கெட் வீரர்களும் விளையாடுவது வழக்கம். அந்த வகையில் இந்திய கிரிக்கெட் அணியின் மூத்த வீரர்களில் ஒருவரான புஜாரா கடந்த 2014 முதலே கவுன்டி கிரிக்கெட்டில் விளையாடி வருகிறார். வெவ்வேறு அணிக்காக விளையாடி வந்த புஜாரா, இப்போது சசெக்ஸ் அணிக்காக இந்தத் தொடரில் விளையாடுகிறார்.

இதே அணிக்காக பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் முகமது ரிஸ்வானும் நடப்பு தொடரில் விளையாடுகிறார். முதன்முறையாக கவுன்டி கிரிக்கெட்டில் அவர் விளையாடுகிறார். இந்தியா மற்றும் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகள் ஆடுகளத்தில் நேருக்கு நேர் பலப்பரீட்சை செய்யும் போதெல்லாம் ஆட்டம் அனல் பறக்கும்.

இந்த முறை இரு நாட்டு வீரர்களும் ஒரே அணிக்காக கவுன்டி கிரிக்கெட் களத்தில் விளையாடுவது ரசிகர்களின் கவனத்தையும், வரவேற்பையும் பெற்றுள்ளது. அவர்கள் இருவரும் சசெக்ஸ் அணியின் சீருடையில் இணைந்து ஒன்றாக நிற்கும் புகைப்படம் சமூக வலைதளங்களில் வலம் வந்து கொண்டுள்ளது.

இப்போது சசெக்ஸ் அணி, 'கவுன்டி சம்பியன்ஷிப் டிவிஷன் 2' தொடரில் 'டெர்பிஷயர்' அணிக்கு எதிராக விளையாடி வருகிறது. புஜாராவும், ரிஸ்வானும் விளையாடும் பதினொருவர் அணியில் இடம் பெற்றுள்ளனர்.





# வியுக்தியார் பதில்கள்

**க. சிவநாதன், திருமலை வீதி, மட்டக்களப்பு**

**கேள்வி:**
வெளிநாடுகளுக்கு இலங்கை செலுத்த வேண்டிய அனைத்து கடன் தொகைகளையும் தற்காலிமாக செலுத்தாதிருக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் புதிய ஆளுநர் பேராசிரியர் நந்தலால் வீரசிங்க அறிவித்திருக்கிறாரே. இனி இலங்கைக்கு யாரும் கடன்கொடுக்க மாட்டார்களே. இனி எப்படி சமாளிக்கப்போகிறார்கள் என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:**
அட நீங்கள் வேற, கடன்களை திருப்பி கொடுத் திருந்தால் வேற யாரும் கடன் கொடுப்பார்களா என்ன? இப்பதான் சீனாவும் இந்தியாவும் ஆளைஆள் போட்டிபோட்டுக்கொண்டு கடன் கொடுக்க தயாராக இருக்கும்போது, வேறு நாடுகளின் கடன் தேவையில்லை என்றாகிவிட்டதே. பின்னர், பழைய கடன்களை கொடுக்காமல் விட்டால்தானே கொஞ்சம் என்றாலும் நமது டொலர் வருமானத்தை சேமிக்க முடியும் என்று புதிய ஆளுநர் கணக்குப்போட்டிருப்பார் போலும்.

**யோகநாதன் சுஜிதன், கோவில்குளம், வவுனியா.**

**கேள்வி:**
ராஜபக்சவின் குடும்ப ஆட்சியை துரத்தவேண்டும் என்று தெற்கில் நடக்கும் போராட்டங்களில் வடக்கு கிழக்கு தமிழ் மக்கள் அதிக ஆர்வம் காட்டவில்லையே ஏன் என்று நினைக்கிறீர்கள்?

**பதில்:**
ராஜபக்ச ஆட்சியை விரட்டவேண்டும் என்று இன்று நேற்றல்ல, ராஜபக்ச இரண்டாவது தடவை ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோதே செய்து காட்டியவர்கள் நமது தமிழ் மக்கள். பல்லாயிரக் கணக்காக தமிழர்களை கொன்ற இராணுவத்தின் தளபதியாக இருந்த சரத் பொன்சேகாவை கூட ஆதரிப்போம் ஆனால் ராஜபக்சவை ஏற்கமாட்டோம் என்றவர்கள் அவர்கள்.
ஆனால் சிங்கள மக்கள் அப்படியல்ல. அவரை பதினைந்து தேர்தலில் வீட்டுக்கு அனுப்பிய பின்னரும் தாம் தவறுசெய்துவிட்டதாக கருதியவர்கள். அதனால் தான் அவரை மீண்டும் ஆட்சிக்கு கொண்டுவந்தார்கள். அப்படி அவர்களை கொண்டுவரும்போதே எல்லோருக்கும் தெரியும் அவர்கள் பதவிக்கு வந்தால் குடும்பத்திலுள்ள எல்லோரும் பதவிக்கு வருவார்கள் என்று. அதாவது குடும்ப ஆட்சிதான் வரும் என்று தெரிந்து கொண்டே வாக்களித்தவர்கள். இப்போது அவர்களை வேண்டாம் என்கிறார்கள். எனவே அவர்கள் தான் அதற்காக போராடவேண்டும் என்று தமிழ் மக்கள் நினைக்கின்றார்கள் போலும். அதற்காக அவர்கள் இந்த ஆட்சி தொடரவேண்டும் என்று நினைப்பதாக நினைத்து விடாதீர்கள்.

**கனக. திருவரங்கன், அரசடி வீதி, நல்லூர்.**

**கேள்வி:**
ஆட்சியை கவிழ்க்குமாறு நாட்டு மக்களுக்கு அழைப்பு விடுக்கும் முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, தானும் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டும் என்று தெரிவித்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார், விமல் வீரவன்சவும் நம்பிக்கை யில்லாப் பிரேரணையில் கையெழுத்திடவேண்டும் என்று கேட்டிருக்கிறாரே. நியாயமான இந்த கேள் விக்கு விமல் பதிலளிப்பார் என்று நினைக்கிறீர்களா?

**பதில்:**
ஆட்சியைக் கவிழ்க்க வேண்டும் என்று சொல்லும் விமல் வீரவன்ச, அடுத்து என்ன செய்வது என்றும் யோசனை சொல்கிறாரே. ஆனால் அவரது யோச னையை சஜித் பிரேமதாசாவைச் சந்தித்து அதற்கு ஆதரவு கோரியபோது அவர் மறுத்துவிட்டபின்னர், சஜித்தின் பிரேரணையை எப்படி ஆதரிப்பது? நம்ம கஜேந்திரன், தன்னைப்போல எந்த நிபந்தனையும் இல்லாமல் எல்லோரும் ஆதரிக்க வேண்டும் என்று நினைத்தால் அவர் என்ன செய்வது. இந்த அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு, ராஜபக்சக்களை வீட்டுக்கு அனுப்பியது நாங்கள் தான் என்று கஜேந்திரகுமார் வேண்டுமென்றால் தமிழ்மக்களிடம் வந்து வாக்கு கேக்கலாம். ஆனால் அதனை மாத்திரம் சொல்லிக்கொண்டு விமல் அரசியல் செய்யமுடியாதே.

**எஸ். நிதர்சன்,நெல்லியடி.**

**கேள்வி:**
தமிழரசுக்கட்சியின் பொங்கல் விழா வடமராட்சியில் தமிழரசு அலுவலகத்தில் நடைபெற்றதாகவும், அதன்போது கலந்து கொண்டவர்கள் அனைவருக்கும் சுமந்திரன் எம்.பி. கைவிஷேசம் வழங்கியதாகவும் ஈழநாடுவில் செய்தி பார்த்தேன். பொங்கல் பண்டிகை தை மாதத்தில் வருவது. சித்தரையில் தமிழ்ப் புத்தாண்டு தான் பிறந்தது. என்ன ஒரே குழப்பமாக இருக்கின்றதே.

**பதில்:**
புத்தாண்டுக் கொண்டாட்டத்தில் தான் பொங்கியிருப்பதாகத்தான் தெரிகின்றது. வழக்கம்போல நமது ஊடகர்கள்தான் தவறுசெய்திருக்கிறார்கள் போல. நல்லவேளை, சிவசேன தலைவர் மறவன் புலவு சச்சிதானந்தன் கவனிக்கவில்லைப் போலும். அவர் கவனித்திருந்தால், கிறிஸ்தவர்கள் எமது மத அனுஸ்டானங்களையே மாற்றுகிறார்கள் என்று அறிக்கை விடுத்திருப்பார். இப்போ எனது கவலை எல்லாம், பொங்கலா புத்தாண்டா என்பதல்ல, அவர் போனவர்கள் எல்லோருக்கும் கைவிஷேசம் கொடுப்பார் என்று தெரிந்திருந்தால், நானும் போயிருக்கலாமே என்ற கவலை தான் எனக்கு.

**த. டிலக்சன், டுசில்டோப், ஜெர்மனி.**

**கேள்வி:**
இலங்கையில் அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகவும் அதனை இறக்குமதி செய்ய நாட்டில் டொலர் இல்லை என்றும் கூறுகிறார்கள். ஆனால் தினமும் கஞ்சாவுடனும் போதைப் பொருளுடனும் பலர் கைதாகின்றனரே. இவற்றை நாட்டுக்குள் கொண்டுவருவதென்றாலும் டொலர் தானே தேவை. அதற்கு எப்படிக் கிடைக்கின்றது?

**பதில்:**
நீங்கள் எல்லோரும் உங்கள் உங்கள் உறவுகளுக்காக பணம் அனுப்பும்போது இந்த ஊண்டியலில் அனுப்பினால் பத்து ரூபா கூடுதலாக வருகின்றது என்று ஊண்டியலில் அனுப்புகிறீர்களே. அந்த உண்டியல் காறர்தான் இந்த போதைப் பொருள்காரருக்கு நீங்கள் கொடுக்கும் யூரோக்களை களவாக அனுப்பி அவருக்கு அதிக விலைக்கு விற்றுவிடுகிறார்.
நீங்கள் பணத்தை அனுப்பும்போது வெஸ்ரேர்ண் யூனியனாலோ அல்லது றியோ மூலமோ அனுப்பினால் அவர்களுக்கு டொலர் கிடைக்காது. நாட்டுக்கு டொலர் கிடைத்துவிடும். அதைவிட, இப்போது கேரள கஞ்சாவை கடத்தி வருவதிலும் பார்க்க, மருந்துப்பொருட்களையும், மருத்துவ உபகரணங்களையும் கடத்தி வந்தால் அதைவிட அதிக லாம் எடுக்கலாம் என்கிறார் ஒரு மருத்துவமனை நிர்வாகி.

**உங்கள் கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி**

**வியுக்தியார் பதில்கள்**
**ஈநழநாடு, 707 ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
viyukthiyar@gmail.com

# கடன் சூழ்ந்த...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கை அதிபர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிராக அமெரிக்கா, லண்டன், ஆஸ்திரேலியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளில் வாழும் இலங்கை மக்களும் போர்க்கொடி தூக்கியுள்ளனர். அவர் பதவி விலக வேண்டும் என்று போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். முக்கிய பல்கலைக்கழகங்களிலும் மாணவர்கள், கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இலங்கைக்கு மூன்று வழிகளில் வருவாய் வந்து கொண்டிருந்தது. ஒன்று தேயிலை, இரண்டாவது ஆடை உற்பத்தி, மூன்றாவது சுற்றுலா. இதை மூன்று “டி” என்கிறார்கள். அங்கு பொருளாதாரத்தில் இந்த மூன்று துறைகள்தான் பெரும் பங்களிப்பைத் தருகின்றன. இந்த வருவாயை உடைத்தது 2020-ஆம் ஆண்டில் உலகையே உலுக்கிய கொரோனா. 2020 மார்ச் மாதம் முதல் இலங்கையும், அண்டை நாடுகளுடனான சர்வதேச விமான சேவையை நிறுத்தியது. அதனால் பொருளாதாரம் முடங்கியது. பொருளாதாரத்தின் தூண்களாக இருந்த தேயிலை, ஆடை உற்பத்தி, சுற்றுலா ஆகிய அனைத்தும் முற்றிலுமாக பாதிக்கப்பட்டன. இந்த மூன்றைத் தவிர வேறு எந்த வருமானமும் இல்லாத இலங்கை, படிப்படியாக பொருளாதாரப் பின்னடைவை சந்திக்கத் தொடங்கியது.

பிற நாடுகளில் நாணய மதிப்பில் ஒரு நாடு வைத்திருக்கும் பணத்தின் அளவே அந்நிய செலாவணி கையிருப்பு எனப்படுகிறது. வங்கி பத்திரங்கள், கடன் பத்திரங்கள், வைப்புநிதி போன்ற பல வழிகளில் அந்நிய செலாவணி சேமிக்கப்படுகிறது. பொதுவாக ஒரு நாட்டின் மத்திய வங்கி இவற்றைப் பேணும். ஒரு குறிப்பிட்ட அளவில் அந்நிய செலாவணியைக் கையிருப்பில் வைத்திருப்பது பாதுகாப்பானது. தங்களது நாட்டின் நாணய மதிப்பு குறைந்தாலோ வேறு வகையிலான நெருக்கடி ஏற்படும் போதோ இவையெல்லாம் பெரிதும் துணையாக நிற்கும். பெரும்பாலும் அமெரிக்க டாலர்களிலேயே அந்நிய செலாவணி வைக்கப்படுகிறது. உலகத்திலேயே சீனாதான் அதிக அந்நிய செலாவணியைக் கையிருப்பில் வைத்திருக்கும் நாடாக இருக்கிறது.

உலக வங்கியின் மதிப்பீட்டின்படி அந்த நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 3.35 டிரில்லியன் டாலர். இந்த மதிப்பு இலங்கையைப் பொறுத்தவரை 1.6 பில்லியன் டாலராகக் குறைந்து விட்டது. இலங்கைக்கான வரவு குறையத் தொடங்கியதால், இலங்கை மத்திய வங்கியின் கையிருப்பில் இருந்த அந்நிய செலாவணி வீழ்ச்சி அடையத் தொடங்கி விட்டது. இதுவே பொருளாதார நெருக்கடிக்கு மிக முக்கிய காரணமாகும். இதனால் இலங்கை நாணயம் மதிப்பு இழக்கத் தொடங்கி விட்டது. ஒரு டாலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு 200 என்ற அளவில் இருந்து 275 ரூபாய்க்கு அதிகமாக சரிந்திருக்கிறது. இம்மதிப்பு சரிந்ததால் நாட்டின் பொருட்கள், சேவைகளுக்கான விலையும் கட்டணங்களும் அதிகரித்து விட்டன.

அந்நாட்டில், அத்தியவசியப் பொருட்கள் அனைத்தும் இறக்குமதியை நம்பி இருப்பதால், அவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டு விட்டது. உதாரணத்திற்கு, கோழித்தீவனம் கூட அமெரிக்காவில் இருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. பால்மா, சர்க்கரை, முட்டை, பெட்ரோல், டீசல், எரிவாயு இவையும் இறக்குமதியால்தான் கிடைக்கின்றன. நாட்டின் முக்கியமான மின்உற்பத்தி நிலையங்கள் டீசலில் இயங்கக் கூடியவை. எனவே, டீசல் தட்டுப்பாட்டால் அங்கெல்லாம் உற்பத்தி குறைந்து விட்டது. இதனால் மின்வெட்டு நேரம் கூடி விட்டது.

இலங்கைக்கு சுமார் 51 பில்லியன் டாலர் அளவுக்கு வெளிநாட்டுக் கடன் இருக்கலாம் என்று மதிப்பிடப்படுகிறது. இதில் சுமார் 7 பில்லியன் டாலரை இந்த ஆண்டே செலுத்தியாக வேண்டும். ஆனால், அதைத் திருப்பித் தருகிற அளவுக்கு இலங்கையில் பணம் கையிருப்பில் இல்லை. 2.3 பில்லியன் அமெரிக்க டாலரே கையிருப்பில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஆகவே, இலங்கையின் நாணயம் மிகப்பெரிய வீழ்ச்சியை சந்தித்தது. முற்றிலுமாக அதன் மதிப்பை இழந்து ஒரு புதிய நாணயத்தை உருவாக்குகிற அளவுக்குச் சூழ்நிலை சென்று விடுமோ என்று அச்சம் ஏற்பட்டுள்ளது.


அன்று இலங்கையில் அப்பாவித் தமிழர்கள் கொன்று குவிக்கப்பட்டபோது, அவர்கள் அல்லல் பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் கடல்போல் பெருகியது. இன்று இலங்கை கடனால் சூழப்பட்டு கண்ணீர் சிந்தி நிற்கிறது.

■ (கட்டுரையாளர்: தமிழக முன்னாள் அமைச்சர்)

ஈழநாடு



# துலக்கம்



- கன்பரா யோகன் -

மா மாலை வெயில் திண்ணையில் விழுந்திருந்தது. சின்னப்பா திண்ணையில் ஏற்றி வைத்திருந்த சைக்கிளை படியால் இறக்கி முற்றத்தில் நிற்பாட்டி விட்டு பெடலுக்கு மேலே ஏ வடிவில் சந்திக்கும் உலோகத் தண்டுகளுக்கிடையில் அமுக்கி வைத்திருந்த அழுக்குத் துணியை எடுத்து துடைக்கத் தொடங்கினான். வாயில் சிகரட் புகைந்து கொண்டிருந்தது.

அது திண்ணையில் ஏற்றி வைக்குமளவுக்கு அப்படி ஒரு புது சைக்கிள் இல்லை. ஆனால் முற்றத்தில் நின்றால் அயலிலுள்ள நாய்கள் வந்து சில்லில் மூத்திரம் பெய்து விட்டுப் போகின்றன. அதனால் றிம்மில் பொருத்தியுள்ள கம்பிகள் கறல் பிடித்துப் போகின்றன.

தகர பேணிக்குள்ளிருந்த கொஞ்சத் தேங்காயெண்ணெய்க்குள் போத்தலிலிருந்த மண்ணெணெயில் கொஞ்சம் கலந்தான். மண்ணெணெயின் நாற்றம் மூக்கிலடித்தது. வெள்ளைத்துணியைப் பேணிக்குள் ஒற்றி மட்காட் வளைவுகளைத் துடைக்கத் தொடங்கியபோது பொக்கற்றுக்குள் இருந்த கைத்தொலைபேசி அழைப்பு நெஞ்சில் கிறு கிறு என்று கீச்சம் காட்டியது.

இடக்கையால் அதை எடுக்க தொலை பேசியில் கோமதி

“சின்னா ஒருக்கா ஆஸ்பத்திரிக்குப் போய் வாடா” அவள் இப்படிக் கெஞ்சுவதற்கு ஒரு ராகம் இழுத்தாள்.

“ஏன் உன்ரை புருஷன் எங்கை?”

“கொழும்புக்கு அவர் வான் கொண்டு போய் ஒரு கிழமையா இன்னும் வரேல்லை. அங்கயிருந்து வேற ஒரு ஹயர் வந்ததால கதிர்காம பக்கம் போக வேண்டி வந்திட்டுதாம்”.

“சரி விடு. ஏன் இப்ப ஆஸ்பத்திரிக்கு?

“குட்டித்தம்பிக்கு தொய்வு வந்து முந்தநாள் நான் ஆட்டோவில் ஆஸ்பத்திரிக்கு கொண்டு போக அங்க மறிச்சிட்டாங்கள். இண்டைக்குத் தான் துண்டு வெட்டி விடுவாங்களாம்.”

சின்னப்பா மௌனமாக இருந்தான், அதை புரிந்து கொண்டவள் மேலே தொடர்ந்தாள்

“அதுக்கிடையிலை சாந்திக்கு காய்ச்சல் வந்திட்டுது. அவளை வீட்டை விட்டிட்டு நான் எப்பிடி ஆஸ்பத்திரிக்குப் போவன்?”

சாந்தி கோமதியின் மூத்த பெண்.

“ப்ளீஸ் சின்னா”

இப்படிக் கெஞ்சும் போது கோமதியின் முகத்தை கற்பனையில் கண்டால் பிறகு சின்னப்பா மறுக்க மாட்டான் என்பது அவளுக்குத் தெரியும். அதிலும் மகேஷ் வீட்டிலிருக்கும் போது அங்கு வரமாட்டான் என்பதும் கோமதிக்குத் தெரியும்.

“சரி போறன், எந்த வாட்டு?”

கேட்டுக் கொண்டே தொலை பேசியை தோளை உயர்த்தி காதில் இடுக்கிக் கொண்டு அழுக்குத் துணியை பழையபடி பெடலுக்கு மேலே சொருகி விட்டவன் சைக்கிளை திருப்பிக் கொண்டு படலைக்கு போனான்.

கோமதிக்கு அவனிலும் இரண்டு வயது அதிகம். கோமதியின் திருமணத்தின் பின் சின்னப்பா வேலைக்கு மத்திய கிழக்குக்கு வேலைக்குப் போனான். அந்தப் பணத்தில்தான் மகேஷ் வான் வாங்குவதற்கு கொடுத்திருந்தான். பிறகு கொஞ்சக் காலத்திலேயே மத்திய கிழக்கிலிருந்து திரும்பி வந்து உள்ளூரில் மூன்று நாலு தொழில்கள் செய்து பார்த்து விட்டான். எதிலும் நிலைக்கவில்லை. சற்று முற்கோபம் இருப்பதால், எதிலும் ஒரு தகராறு வந்து விடும். இப்போது சாப்பாட்டுக் கடையொன்றில் காஷியராக வேலை.

ஆஸ்பத்திரிக்கு வெளியே வேப்ப மர நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு வாட்டுக்குப் போய் துண்டு வெட்டிக் கூட்டிக் கொண்டு வந்தவன் பின் கரியரில் குட்டித்தம்பியின் ஆஸ்பத்திரி உடுப்பு பையை சொருகியபடி “ஏறு ” என்றான்.

பெடலுக்கு மேலே இருந்த அச்சில் காலை வைத்து ஏறி பாரில் இரு கால்களையும் ஒருபுறம் தொங்கப் போட்டபடி இருந்தான் குட்டித்தம்பி. அவனுக்கு எட்டு வயதிருக்கும்.

சைக்கிள் வேகம் எடுக்கத் தொடங்கியபின் “உனக்கு இப்ப எல்லாம் சுகம் தானே?” என்றான் சின்னப்பா.

“ம்” என்று விட்டுப் பேசாதிருந்தான் குட்டித்தம்பி.

“வாயத் திறந்து சொல்லேன்”

கோமதியின் புருஷனும் மகேஷும் ஒரு உம்மாண்டி. இவனும் அவன் சாங்கம்தான்.

“ஓம் இப்ப சுகம்” தயங்கியபடி பதில் வந்தது.

கோமதியின் கணவன் மகேஷுடனான உறவில் விரிசல் வந்தது சின்னப்பாவின் திருமணம் என்னும் அரைகுறை நாடகம் நடந்த பிறகுதான். கோமதி தான் மகேஷின் தங்கைக்கு சின்னப்பாவை கட்டிக் கொடுக்க ஏற்பாடுகள் எல்லாம் செய்து கொண்டிருந்த வேளை திருமணத்துக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் தங்கை வேறொருவனை விரும்பியதையறிந்து மகேஷ் திருமணத்தை நிறுத்தினான். இதன் பிறகு அவர்கள் வாழ்வினின்றும் முடிந்த வரை ஒதுங்கினான் சின்னப்பா.

மாலை நேரமாதலால் போக்குவரத்து அதிகமாகி, வாகனங்கள் அவ்வப்போது தெருப் புழுதியை கிளப்பிச் சென்றன.

“மூக்கை பொத்திக்கொள். புழுதிக்கு திருப்பி தொய்வு வந்தாலும் வந்திடும்”

பேசாமல் மூக்கை ஒருகையால் பொத்திக் கொண்டான் குட்டித்தம்பி.

சின்னப்பாவின் சைக்கிள் இன்னும் வேகமெடுத்தது.

மருந்துக்கு கடை வளைவைத் தாண்டி அருகிலிருந்த மதகடிக்கு வந்ததும் சைக்கிள் தானாக பிரேக் பிடிப்பதைப் போல தெரிந்தது.

பிரேக் றிம்மில் முட்டுகிறது என்று நினைத்துக் கொண்டே வலித்து பெடலை மிதிக்கத் தொடங்கினான்.

அடுத்த அரை நிமிடத்தில் கட கட என்று முன் சில்லில் ஒரு சத்தமும் வந்தது.

இப்போது சைக்கிள் முற்றாக சடன் பிரேக் பிடித்தது போல நிற்க, குதித்து இறங்கி முன் சில்லை பார்த்தான் சின்னப்பா.

குட்டித்தம்பியின் வலக்கால் முழங்காலுக்கு கீழே சைக்கிள் றிம் கம்பிகளுக்கும், போர்க்கிற்குமிடையில் சிக்கியிருந்தது.

வந்த கோபத்தில் குட்டித்தம்பியின் முதுகில் ஒரு அறை விட்டான்.

“ என்னடா வாயிலை என்ன முட்டையே? கால் சில்லுக்கை சிக்கினால் ஒருக்கா கத்தினாலென்ன, மொக்கா”

சில்லுக்குள்ளே கால் போய் அரை நிமிட மாகியும் ஒரு கத்தலோ, குளறலோ இன்றி வாயைத்திறக்காமல் இருந்திருக்கிறான்.

றிம்மின் கம்பிகள் பல உடைந்திருந்தன.

குட்டித்தம்பியின் கால் தசையின் தோலுரிந்து வெள்ளைத்தோல் தெரிந்தது. பிறகு முத்து முத்தாக இரத்தப் பொட்டு கள் தோன்றி தோல் சிவப்பாக மாறியது.

குட்டித்தம்பியின் காலை மெல்ல வெளியே இழுத்தெடுத்த சின்னப்பா, சைக்கிளை அங்கேயே பக்கத்துக்கு கடையில் விட்டு விட்டு குட்டித்தம்பியை ஆட்டோ ஒன்றில் மீண்டும் அந்த ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனான்.

இரண்டு நாட்கள் கடந்தன. மதியம் சைக்கிளை எடுத்துக் கொண்டு ஆலடி மகாவித்தியாலயம் நோக்கிப் போனான் சின்னப்பா.

தெருவோரமாக நின்ற வாகை மர நிழலில் சைக்கிளை நிறுத்திவிட்டு சிகரட் ஒன்றை எடுத்து புகைக்க ஆரம்பித்தான். வாகையின் கீழ் விழுந்திருந்த மஞ்சட் பூக்கள் மரத்தை சுற்றியிருந்த நிலத்தை மூடியிருந்தன.

பிறகு கம்பி வேலிக்கு அப்பாலிருந்த மகாவித்தியாலயப் பள்ளி சிறுவர் விளையாட்டு மைதானத்தைப் சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். மதிய இடை வேளை மணியடித்ததும் சிற்றோடைகள் வேகமாய் பாய்ந்து வந்து குட்டைக்குள் விழுவதைப் போல எல்லாக் கட்டிடங் களிலிருந்தும் வரிசையாக வந்த பள்ளிச் சிறுவர்கள் மைதானத்துக்குள் வந்தனர்.

மெல்ல மெல்ல நொண்டியபடி முழங்காலுக்கு கீழே அன்றைக்கு போட்ட வெள்ளை பாண்டேஜ் உடன் குட்டித்தம்பி கடைசியாக வந்தான். மைதானத்துக்கு அருகிலிருந்த சுவர் விளிம்போன்றில் இருந்து மற்றவர்கள் விளையாடுவதை குட்டித்தம்பி பார்த்துக் கொண்டிருந்தான். சின்னப்பாவுக்கு குட்டித்தம்பி மேல் இரக்கம் வந்தது. அன்றைக்கு முதுகில் அடித்தது வேறு நினைவுக்கு வந்தது.

பத்து நாட்கள் கழிந்து மீண்டும் அந்த வாகை மரத்தடியில் நின்றான் சின்னப்பா. வழமைப்படி மணியடித்ததும் பிள்ளைகள் வெளியே ஓடி வந்தனர். இப்போது குட்டித்தம்பி காலில் பிளாஸ்டர்தான் போட்டிருந்தான். மற்றைய சிறுவர்களுடன் விளையாட்டிலும் சேர்ந்து கொண்டான்.

ஒருவேளை கோமதியின் கணவன் வீட்டுக்கு வந்திருப்பான். ஆஸ்பத்திரிக்கு கூட்டிச் சென்று பேண்டேஜை மாற்றி பிளாஸ்டர் போட வைத்திருப்பான்.

கீழே நிலத்தில் அன்றைக்கு வாகை பரப்பியிருந்த மஞ்சல் பூக்கள் எதையும் காணவில்லை. அவை முதல் நாளிரவு பெய்த மழையால் அடித்து செல்லப்பட்டிருந்தன.

சின்னப்பாவின் சைக்கிள் முன் சில்லுக்கு போட்டிருந்த புதிய கம்பிகள் வெயிலில் பளபளத்தன. இப்போது அவன் மனதிலும் பாரம் குறைந்து அது துலக்கமாக இருந்தது. ■








மட்டக்களப்பு வாழைச்சேனை பாசிக்குடா தனியார் சுற்றுலா விடுதி வளாகத்தில் தமிழ்,சிங்களப் புத்தாண்டு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் பங்குபற்றுதலுடன் கொண்டாடப்பட்டது.

தமிழ், சிங்கள மக்களின் கலாசார பாரம்பரிய உணவு பரிமாற்றம், விளையாட்டு போட்டி உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை உள்ளடக்கிய வகையில் இந்த புத்தாண்டு சிறப்பு கொண்டாட்டம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.

யானைக்கு கண் வைத்தல், தலையணை சமர்,முட்டி உடைத்தல், பணீஸ் உண்ணுதல்,கயிறு இழுத்தல்,சாக்கு ஓட்டம், பலூன் பரிமாற்றம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் தமிழ்,சிங்கள,முஸ்லிம் உள்ளிட்ட வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் பலரும் பங்குபற்றியதுடன் இப் போட்டி நிகழ்வுகளில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.






யாழ்.குருநகர் பிரதேசத்தில் உள்ள புனித யாகப்பர் ஆலயத்தில் பெரிய வெள்ளி ஆராதனைகள் (15) வெள்ளிக்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

இவ்வாராதனையில் ஆண்டவரை சிலுவையில் அறைந்து இறைமகன் இயேசு சிலுவையில் மரிக்கும் காட்சியைத் தொடர்ந்து அவரின் உடலை சிலுவையில் இருந்து இறக்கி மக்கள் அஞ்சலிக்காக ஆலயத்துக்குள் எடுத்துச்செல்லும் காட்சியும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிகமான மக்கள் மிகவும் பக்தியோடும் இறை பற்றோடும் கலந்து கொண்டு இறைவன் இயேசுவின் ஆசீரையும் பெற்றனர்.






சிறந்த விளையாட்டு வீரரும் எழுத்தாளருமான கந்தையா சிங்கம் எழுதிய “நடந்து வந்த பாதையிலே ” என்னும் நூல் வெளியீடானது கடந்த ஞாயிற்றுக்கிழமை பிரித்தா னியா, ஈலிங் சிறி கனக துர்க்கையம்மன் ஆலய மண்டபத்தில் எழுத்தாளர் இரா. உதயணன் தலைமையில் மிகச் சிறப்பாக நடந்தேறியது. திரு இரா உதயணன் அவர்கள் தனது உரை யில், நூலாசிரியர் இன்னும் பல நூல்கள் படைக்கவேண்டும் என்றும், நாவல், சிறுகதை எழுத்து வதற்குரிய தகுதி இருப்பதை சுட்டிக் காட்டினார்.

உலகத் தமிழர் சதுரங்கப் பேரவை, உலகத் தமிழர் புகைப்படப் பேரவை, மற்றும் உலகத் தமிழர் பூப்பந்தாட்டப் பேரவை இணைந்து இவ் விழாவினை சிறப்புற ஒழுங்கமைத்திருந்தது.

# புலமைச் சிகரம் — தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்


கல்வி tv CHANNEL

1) C    2) E    3) F

24. மூன்று கால் மேசை ஒன்றைச் சுற்றி நாற்காலிகள் மூன்று உள்ளன. அங்கு காணப்படும் கால்களின் எண்ணிக்கை யாது?
1) 16    2) 15    3) 13

25. சத்தி, நிஷான், விஜய், அருண் ஆகிய நால்வரில் விஜயிலும் உயரம் குறைந்தோர் இருவர் மட்டுமே உள்ளனர். நிஷானிலும் உயரம் குறைந்தோர் ஒருவர் மட்டும் உள்ளார். சத்தி மாத்திரம் நிஷானிலும் உயரம் குறைந்தவர் ஆவார். நால்வரில் உயரம் கூடியவர் யார்?
1) விஜய்    2) நிஷான்    3) அருண்


26. ஒரு வரிசையில் கமலா முன்னாலிருந்து 7 ஆவதாகவும் விமலா பின்னாலிருந்து 4 ஆவதாகவும் உள்ளனர். அவர்கள் இருவருக்குமிடையில் இரண்டு பேர் உள்ளனர். அவ்வரிசையில் மொத்தம் எத்தனை பேர் உள்ளனர்?
1) 13    2) 14    3) 15

27.  உருவில் உள்ள வடிவத்தைப் புள்ளிக்கோட்டின் வழியே வெட்டும்போது கிடைக்கும் முகத்தின் வடிவம்
1) சதுரம்    2) செவ்வகம்    3) அரியம்

28. மகனை விட அப்பா உயரம் கூடியவர் என்பது
1) எப்பொழுதும் உண்மையானது
2) சில சமயம் உண்மையானது
3) எப்பொழுதும் பொய்யானது

29.  இச் சிறிய முக்கோணத்தின் சுற்றளவு 9cm எனின்  இம்முக்கோணியின் சுற்றளவு யாது?
1) 12cm    2) 18cm    3) 36cm

30. படகு ஒன்றில் 30 பேர் பயணிக்கலாம் எனின் 100 பேர் பயணிப்பதற்கு எத்தனை படகுகள் தேவை?
1) 3    2) 2    3) 4


31. 


வெறுமையான கட்டத்துக்குப் பொருத்தமான எண் யாது?
1) 14    2) 10    3) 12

32. அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்குக.


| பூக்கள் | பழங்கள் | D |
|---|---|---|
| A | மாம்பழம் | கத்தரி |
| மல்லிகை | அன்னாசி | வெண்டி |
| செவ்வந்தி | C | தக்காளி |

அட்டவணையில் ACD ஆகியவற்றுக்குப் பொருத்தமான விடைகள் முறையே
1) நித்திய கல்யாணி, பலாப்பழம், காய்கறிகள்
2) முருங்கை, காய்கறிகள், வெண்டி
3) கீரை, பருப்பு, சோயா

33. 



நித்திய கல்யாணிப் பூவைக் குறிக்கும் எழுத்து
1) அ    2) ஆ    3) இ

❖ **34, 35 ஆம் வினாக்களுக்கு தரப்பட்டுள்ள உருவைக் கொண்டு விடையளிக்குக.**

34. 


பிள்ளை காலையில் தான் நிற்கும் இடத்திலிருந்து பாடசாலை நோக்கிச் செல்லும்போது எத்தனை தடவை தெற்கு பக்கமாகச் செல்ல வேண்டும்?
1) 2 தடவைகள்    2) 3 தடவைகள்    3) 4 தடவைகள்

35. இப் பிள்ளை காலையில் பாடசாலைக்குச் செல்லும்போது இவரது நிழல் எத்தனை தடவை முன்னால் விழுந்தது?
1) தடவைகள்    2) 5 தடவைகள்    3) 4 தடவைகள்

36.  இவ்வுருவில் $\frac{3}{8}$ நிறம் தீட்ட வேண்டும் எனின் மேலும் எத்தனை துண்டங்களுக்கு நிறம் தீட்ட வேண்டும்?
1) 2    2) 3    3) 4

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 24. 2 | 28. 2 | 32. 1 | 36. 1 |
| 25. 3 | 29. 2 | 33. 1 | |
| 26. 1 | 30. 3 | 34. 2 | |
| 27. 2 | 31. 1 | 35. 1 | |

கல்வி tv CHANNEL-1

**17.04.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**17.04.2022**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## காலிமுகத்திடல் போராட்டத்துக்கு ஆதரவாக ஊடகவியலாளர்கள் 20ஆம் திகதி பேரணி!

கொழும்பு, ஏப். 17

'கோ ஹோம் கோட்டா' போராட்டத்தில் ஊடகவியலாளர்களின் பங்களிப்பு தொடர்பான இணையவழி காணொளி சந்திப்பு நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் நடை பெற்றது. இலங்கை வாழ் மூவின ஊடக நண்பர்களும் இதில் பங்குபற்றினர்.

இதன்போது எதிர்வரும் 20ஆம் திகதி முற்பகல் 11 மணியளவில் லேக் கவுஸில் இருந்து ஊடகர்களின் ஆதரவுப் பேரணி ஆரம்பமாகி காலிமுகத்திடல் போராட்டக்களத்தைச் சென்றடைவது எனத் தீர்மானிக்கப் பட்டுள்ளது.

சுயாதீனமாக அனைத்து ஊடகவியலாளர்களையும் இந்த ஆதரவுப் பேரணியில் இணைந்துகொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

### விண்ணக வாழ்வில் ஆண்டுகள் முப்பத்தொன்று

மலர்வு 29 - 06 - 1931



உதிர்வு 17 - 04 - 1991

**அமரர்**

**செபமாலைமுத்து பீற்றர் திசநாயகம்**

அன்பிற்கும் பண்பிற்கும்
இலக்கணமாய் எங்கள்
வாழ்வில் தடம் பதித்து
வழிகாட்டியாய் வாழ்ந்தவரே
மனுமகன் மரித்த நாளில்
மண்ணுலகை நீத்தீரே,
நாம் வாழும் வரை
உங்கள் நினைவுகள்
எம்முடன் வாழும்

**அன்பு மகள், மருமகன்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்**

# பிரேரணைகள் மூலம் அரசை யாரும் கவிழ்க்கவே முடியாது

## ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ திட்டவட்டம்

கொழும்பு, ஏப். 17

பிரேரணைகள் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசைக் கவிழ்க்கவே முடியாது என நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையிலான அரசுக்கும், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை ஆகியவற்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே ஆளுங்



கட்சியின் பிரதம கொறடாவான அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மைப் பலம் இல்லாத சஜித் அணியினர் அரசுக்கும் ஜனாதிபதிக் கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை மற்றும் குற்றப் பிரேரணை ஆகியவற்றைக் கொண்டுவரத் தீர்மானித்துள்ளமை சிறுபிள்ளைத்தனமானது.

எமது அரசுக்கு எதிரான பிரேரணைகள் தோற்கடிக்கப்படும் என்றும் தெரிந்தும்கூட பிரதான எதிரணியினர் ஏன் அதனைக் கொண்டுவர முயல்கின்றனர் என்று புரிய வில்லை.

என்னதான் நடந்தாலும் பிரேரணைகள் மூலம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசைக் கவிழ்க்கவே முடியாது. எமது அரசைக் கவிழ்க்க முயல்வோர் முதலில் தமது நிலையை உணரவேண்டும் - என்றார். (அ)

## பொருளாதார நெருக்கடியினால் அடுத்த வாரம் பங்குச்சந்தை பூட்டு

கொழும்பு, ஏப். 17

நாட்டின் தற்போதைய நிலவரத்தை கருத்தில் கொண்டு நாளை திங்கட்கிழமை முதல் ஐந்து நாட்களுக்கு கொழும்பு பங்குச்சந்தை மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

2022ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18 ஆம் திகதி முதல் ஐந்து வணிக நாட்களுக்கு நாட்டின் தற்போதைய நிலமை காரணமாக பங்குச் சந்தையை தற்காலிகமாக மூடுவதற்கு இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. (அ)

## மரண அறிவித்தல்

தோற்றம் 04 - 01 - 1974



மறைவு 13 - 04 - 2022

**கமலராஜ் தர்மராசா**

யாழ். நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், சுவிஸ் Aarau ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கமலராஜ் தர்மராசா கடந்த 13-04-2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்ற முத்தையா - தங்கம்மா தம்பதிகள், கனகரத்தினம் - ராசம்மா தம்பதிகளின் அன்புப் பேரனும்,தர்மராசா கமலாம்பிகை தம்பதிகளின் அன்பு மகனும், கணேசபிள்ளை பத்மாவதி தம்பதிகளின் அன்பு மருமகனும்,பிரேமினா அவர்களின் அன்புக் கணவரும்,அதியா, அதீஷ் ஆகியோரின் பாசமிகு தந்தையும்,கஜனி, காந்தராஜ், தமிழினி ஆகியோரின் அன்புச் சகோதரரும்,ராஜேந்திரன், சிவதீசன், டில்சன், கஜமுகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

பார்வைக்கு :
Friday, 15 Apr 2022 4:00 PM - 8:00 PM
Saturday, 16 Apr 2022 4:00 PM - 8:00 PM
Sunday, 17 Apr 2022 4:00 PM - 8:00 PM
Monday, 18 Apr 2022 4:00 PM - 8:00 PM
Friedhof Lenzburg Friedhof Lenzburg, Wylgasse 5600 Lenzburg, Switzerland.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**தர்மராஜா - தந்தை**
**Mobile : +94779769587**
**கஜனி - சகோதரி**
**Mobile : +16478092186**
**காந்தராஜ் - சகோதரன்**
**Mobile : +393209445100**
**தமிழினி - சகோதரி**
**Mobile : +491726860950**
**ஜெனுசன் - மைத்துனர்**
**Mobile : +41792417488**
**டில்சன் - மைத்துனர்**
**Mobile : +393248877821**
**கஜமுகன் - மைத்துனர்**
**Mobile : +33763626091**

தகவல்:
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



**திருமதி**

**செல்லம்மா குலராஜசிங்கம்**

**தோற்றம்** 21-04-1936 **மறைவு** 16-04-2022

யாழ். கரவெட்டி துன்னாலை மத்தி கோவிற்கடவையைப் பிறப்பிடமாகவும், துன்னாலை மத்தி, கனடா Markham ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட செல்லம்மா குலராஜசிங்கம் நேற்று 16-04-2022 சனிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், ஐயம்பிள்ளை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மக ளும், இராமு சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும்,காலஞ் சென்ற குலராஜசிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், குகநேசன்(பொறியியலாளர்- கனடா), சிவனேசன்(கனடா), இதயகலா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,கிருபாலினி(கனடா), மங்களேஸ் வரி(கனடா), விஜயகுமார்( ஓய்வுநிலை ஆசிரியர், யா/ஹாட்லி கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமியாரும்,கிசோர்- தட்சாயினி (கனடா), சஹானா(கனடா), அபிராமி(கனடா), விசாகன்(வைத்தியர்-யாழ் போதனா வைத்தியசாலை), வசீகரி(வைத்தியர் - யாழ் போதனா வைத்தியசாலை), திலீபன்(பொறியியலாளர் - கொழும்பு), யாழினி(ஆசிரியர்- முல்லைத்தீவு), நிதீஸ்பன் (வைத்தியர் - கொழும்பு), திலக்ஷி (வைத்தியர்- கொழும்பு), மகாராஜ் (முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்- சாவகச்சேரி), கிரிராஜினி(அபிவிருத்தி உத்தியோகத்தர்- கரவெட்டி) ஆகியோரின் பாசமிகு பேத்தியும்,ஆருக்ஷிகா, ஆத்விகன் ஆகியோரது பூட்டியும், காலஞ்சென்றவர்களான நவரத்தினம், அருளானந்த மூர்த்தி மற்றும் பூபதி, விக்னேஸ்வரமூர்த்தி, சோமஸ்கந்தமூர்த்தி ஆசையம்மாவும், காலஞ்சென்ற இராசையா அவர்களின் அன்புச் சகோதரியும், சத்திய நாதன் அவர்களின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 17-04-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு.ப 08:00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் வேறொண்டை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

செல்வவதி நிலையம்,
துன்னாலை மத்தி,கரவெட்டி

தகவல்:
**குடும்பத்தினர்**

தொடர்புகளுக்கு :
**குகநேசன் - மகன் - Mobile : +14162710837**
**சிவனேசன் - மகன் - Mobile : +14167218469**
**விஜயகுமார் இதயகலா - மகள், மருமகன் Mobile : +94765384270**

## ஆட்சியை...

வவுனியாவில் அமைந்துள்ள அவரது அலுவல கத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரி விக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரி விக்கையில்-

ஜனாதிபதியாகும் தகுதி கோட்டாபயவுக்கு இல்லை என்று எமது மக்கள் வாக்குகள் மூலம் அன்றே ஆருடம் சொல்லியிருந்தார்கள். கோட்டா பயவும், மஹிந்தவும் ஆயு தப்போராட்டத்தை மௌனிக்க செய்ததாக வெற்றிவிழா கொண்டா டினார்கள். ஆனால் சர்வதேசத்தின் உதவியு டன்தான் எமது போராட் டத்தை மௌனிக்கச் செய்தார்களே தவிர இவர்களது திறமையால் மௌனிக்க வில்லை என்பதை இன்று விளங்கிக்கொள்ள முடியும்.

இன்று சிங்கள மக்கள் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர். இதன் மூலம் எமது போராட்டம் நியாயமானது என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் போராட்டக்காரர்களால் வெளிப்படையாக கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன. இதனை நாம் பயன்படுத்திக்கொள்ளவேண்டும். ஈழத்தை கொடுத்திருந்தால் அது பணத்தை தந்திருக்கும் என்று முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் சொல்கிறார்.

அன்று இரத்தினபுரியில் இயற்கை அனர்த்தம் ஏற்பட்டபோது விடுதலைப்புலிகள் சிங்கள மக்களுக்கு உதவிகளை வழங்கியிருந்தனர். அந்த வரலாறை நாம் மறக்க முடியாது. எனவே அனைத்து இனங்களும் ஒற்றுமையாக வாழவேண்டும் என்ற சிந்தனை ஓட்டத்தை நாங்கள் இன்று செய்தாக வேண்டும்.

இந்த சந்தர்ப்பத்தில் சிங்கள மக்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். தமிழ்த் தரப்புக்கு ஆட்சியை ஒரு வருடம் வழங்குங்கள். ஒரு வருடத்தில் இந்த நாட்டை நிமிர்த்திக் காட்டுகின்றோம். தமிழ், சிங்கள மக்களுக்கும் சம அந்தஸ்து வழங்கும் படியாக எமது செயற்பாடு இருக்கும். அதை நாங்கள் எமது போராட்ட காலங்களில் நிரூபித்துக் காட்டியிருக்கின்றோம்.

அத்துடன் இந்த ஜனாதிபதி முறையால் தமிழ் மக்களே அதிகம் பாதிக்கப்பட்டிருந்தனர். தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்டிருந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தன்னுடைய அதிகாரத்தை தமிழ் மக்களுக்காக ஒரு முறையும் பயன்படுத்தவில்லை. குறிப்பாக ஆனந்த சுதாகரனை விடுதலை செய்யக்கூட அது பயன்படவில்லை. இதுதான் இலங்கையின் நியதி.

எனவே ஜனாதிபதி முறைமையை நீக்கவேண்டும் என்ற கோரிக்கையை நாம் முன்வைக்கவேண்டும். அதற்கான சரியான பேரம் பேசலுக்கான சந்தர்ப்பம் இன்று ஏற்பட்டுள்ளது. எனவே பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகிக்கும் தமிழ்க் கட்சிகள் ஒன்றாக இணைந்து இதற்கான முடிவுகளை எடுக்க வேண்டும்.

அரசியல் மாற்றம் தொடர்பாக பேசுபவர்களுடன் நாம் நிபந்தனையை முன்வைக்கவேண்டும். உடனே சென்று கையெழுத்துப்போடும் நிலை இருக்கக் கூடாது - என்றார். (அ)

## நாட்டை விட்டு...

விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் மறுத்துள்ளது.

இவ்வாறான செய்தி பல ஊடகங்களில் பரபரப்பாக வெளியிடப்பட்ட நிலையில் இது தொடர்பில் நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

செஸ்னா என் 750 ஜி.எவ். ரக தனியார் விமானம் ரியாத்தில் உள்ள கிங் காலிட் சர்வதேச விமான நிலையத்திலிருந்து 28 மார்ச் 2022 அன்று இரத்மலானை சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தது. விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனக் குழுவினரால் இந்த விமானம் முழுமையாகக் கையாளப்பட்டது.

இந்த விமானம் இரத்மலானை சர்வதேச விமான நிலையத்திலிருந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸின் ஜெபல் அலி அல் மக்தூம் சர்வதேச விமான நிலையத்துக்கு நேற்று 02 பேருடன் புறப்பட்டுச் சென்றது.

இந்த விமானத்துக்கு எரிபொருள் நிரப்புவதற்காக 3750 அமெரிக்க டொலர்கள் மற்றும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்துக்கு வருவாயாக 2,260 அமெரிக்க டொலர் கிடைத்தது. ஏனைய வருவாய்கள் உள்ளடங்கலாக இந்த விமான கையாள்கை மூலம் 10,000 அமெரிக்க டொலர்கள் இலங்கைக்கு கிடைத்திருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இரத்மலானை சர்வதேச விமான நிலைய எதிர்காலத்தில் அதிக தனியார், வர்த்தக மற்றும் வாடகை விமானங்களைக் கையாள்வதன் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்குத் தேவையான அந்நியச் செலாவணியைக் ஈட்ட முடியும்.

நாட்டுக்கு மிகவும் தேவையான அந்நிய செலாவணியை பெற்றுக்கொள்ளவும் இதன்மூலம் நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் உறுதி பூண்டுள்ளது.

இந்த இக்கட்டான நேரத்தில் பொருளாதாரத்திற்கு உறுதுணையாக இருக்கும் சர்வதேச விமான பயணங்கள் குறித்த தவறான தகவல்களை பரப்புவதை தவிர்க்குமாறு பொதுமக்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்-என்றுள்ளது.

இதேவேளை, முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தனியார் ஜெட் விமானம் ஒன்றில் நேற்றுக் காலை நாட்டை விட்டு வெளியேறினார் என இணைய ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

அமெரிக்காவில் பதிவு செய்யப்பட்ட விமானம் ஒன்றில் இரத்மலானை விமான நிலையம் ஊடாக அவர் வெளியேறினார் என அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (அ)

## எரிபொருள்...

பெற்றோலியக் கூட்டுத்தாபனம் கேட்டுக் கொள்கிறது.

எதிர்வரும் நாள்களில் எரிபொருள் விநியோகம் மேலும் சீரமைக்கப்படும் என கூட்டுத்தாபனம் அறி வித்துள்ளது.

41,000 மெற்றிக் தொன் டீசல் மற்றும் 37,500 மெற்றிக் தொன் பெற்றோல் ஏற்றிய இரண்டு கப்பல்கள் இலங்கை கடற்பரப்புக்குள் வந் துள்ளன.

நாளை திங்கட்கிழமைக்குள் எரிபொருள் விநியோகம் சீராகப்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, விவசாய நடவடிக்கைகளுக்காக வரம்பற்ற எரிபொருள்கள் விடுவிக்கப்படுவதாக பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தெரிவித்துள்ளது.

மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள், கார்கள், வான்கள், ஜீப்கள் மற்றும் ஏனைய வாகனங்களுக்கான எரிபொருள் விநியோகத்தை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்று முன்தினம் முதல் மட்டுப்படுத்தியுள்ளது. (அ)

## ராஜபக்ஷ...

என்பதும் தெரியவில்லை எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனுஷ நாணயக்கார, முஜிபுர் ரஹ்மான், ஹரின் பெர்னாண்டோ, ஹெக்டர் ஹப்புஹாமி, காவிந்த ஜெயவர்தன ஆகியோர் இதனை கூறியுள்ளனர். (அ)

## காலிமுகத்திடல்...

மான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தங்களால் தமிழ் மொழியை சரளமாகப் பேச முடியாமைக்கு வெட்கப்படுவதாகக் கவலை தெரிவித்துள்ள சிங்களக் கலைஞர்கள், இலங்கை தேசத்தின் 90 வீதமான தமிழர்களுக்குச் சிங்கள மொழியை சரள மாகப் பேச முடியும் என்பதுபெருமைக்குரியது என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

இது தொடர்பில் சிங்களக் கலைஞர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பேரன்புமிக்க தமிழ்ச் சகோதரர்களே! இது உங்களுடைய தேசம். நாம் பிறந்த இந்தத் தேசத்தை நமது எதிர்காலச் சந்ததிக்காகப் பாதுகாப்போம். ஆகவே, கசப்புணர்வுகள் கடந்து அவற்றை மறந்து காலிமுகத்திடலுக்கு வாருங்கள் எம்மோடு இணையுங்கள்.

அன்பான தமிழ்ச் சகோதரர்களே! உங்களை அன்போடு அழைக்கின்றோம். வந்து எம்மோடு இணைந்து கொள்ளுங்கள். நாட்டின் நிர்வாகக் கட்டமைப்பு சீராக அமையும் என்று நம்பி. இருந்தோம் ஆனாலும் அந்த நம்பிக்கை வீணாகி விட்டது.

ஆகவேதான் கலைஞர்களும் இந்தப் போராட்டத்தில் இணைந்து இருக்கின்றோம். இன்றைய இந்த ஆட்சியானது நமக்குத் தேவையில்லை. நாட்டை சிறந்த முறையில் நிர்வகித்துக்கொண்டு நடத்துபவர்களே எமக்குத் தேவை. அதற்காக நாம் அனைவரும் இணைந்து போராடுவோம் - என்றனர். (அ)

## நாணய...

யத்துக்கான இலங்கைப் பிரதிநிதிகள் குழு இன்று காலை நாட்டிலிருந்து புறப்படவுள்ளது.

அமெரிக்காவின் வொஷிங்டனில் சர்வதேச நாணய நிதியத்துடனான ஆரம்ப கட்டப் பேச்சு வார்த்தைகள் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## பதவிக்காலம்...

வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்-

ஜனாதிபதி பதவிகாலம் முடியும் வரை பதவியில் இருப்பேன்.எதிர்க்கட்சியினரை புதிய ஆட்சி அமைக்க அழைத்தேன். அவர்கள் முன்வரவில்லை. அதனால் புதிய அமைச்சரவை நியமிக்கப்படும் -என்றார்.

இந்தக் கூட்டத்தில்,

இன்று மாலையளவில் புதிய அமைச்சரவை பதவியேற்கும் என்றும்-

நாமல் , பஸில் , சமல் , சஷீந்திர ஆகியோர் அமைச்சுப் பதவிகளை ஏற்பதில்லை என்றும் முடிவாகியுள்ளது.

அத்துடன் ஆட்சியை கொண்டு செல்ல உதவ அமைச்சுப் பதவிகளை பொறுப்பேற்காமலிருக்க தயார் என்று முன்னாள் அமைச்சர்கள் சிலர் ஜனாதிபதியிடம் உறுதியாகக் கூறினர் என தெரியவந்தது. (அ)

## அமைச்சர் பதவி...

அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

இந்த நெருக்கடிக்கு தீர்வு காண இளைஞர்கள் அடங்கிய அமைச்சரவையொன்று நியமிக்கப்பட வேண்டுமெனவும், அவர்களுக்கு இடமளிக்கும் வகையில் அமைச்சரவையின் பொறுப்பை ஏற்கப் போவதில்லை எனவும் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறுகிய காலத்துக்கு சுமார் 15 பேர் கொண்ட அமைச்சரவையை நியமிக்கலாமெனவும், நெருக்கடிக்கு தீர்வு கிடைத்தவுடன் மற்றுமொரு அமைச்சரவையை நியமிக்கலாம் எனவும் அவர் யோசனை தெரிவித்துள்ளார். (அ)

# லிற்றோ கேஸ் விலையை அதிகரிக்குமாறு கோரிக்கை

கொழும்பு, ஏப். 17

லிற்றோ (12.5 கிலோ) சமையல் எரிவாயுவின் விலையை ஆயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்குமாறு லிற்றோ நிறுவனம், நிதி அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. லிற்றோ சமையல் எரிவாயு தற்போது 2 ஆயிரத்து 675 ரூபாவுக்கு விற்பனையாகின்றது.

டொலர் இல்லாத காரணத்தால் எரிவாயு இறக்குமதியை கட்டுப்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என லிற்றோ எரிவாயு நிறுவனம் நிதி அமைச்சுக்கு அறிவித்துள்ளது. (அ)

## வடமராட்சி...

வைத்திய அதிகாரி தெரிவித்தார்.

திடீர் உடல்நல பாதிப்பு அடைந்த நிலையில் 18 வயதுடைய குறித்த மாணவி நேற்று முன்தினம் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டுசெல்லப்பட்டிருந்தார். அவரை பரிசோதித்த வைத்தியர்கள் அவர் உயிரிழந்துவிட்டதாக தெரிவித்தனர்.

அவருடைய சடலம் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு நேற்று மருத்துவ அறிக்கை வெளியாகியுள்ளது. அதில் அவர் இரு மாதக் கர்ப்பமாக இருந்துள்ளமை தெரியவந்துள்ளது.

இதனை அடுத்து பொலிஸார் மரணம் தொடர்பில் தீவிர விசாரணை மேற்கொண்டுள்ளனர். (அ)

## யாழ்.நகரில்...

இந்தப் போராட்டமானது காலிமுகத்திடலில் அரச தலைவரையும், அரசாங்கத்தையும் பதவி விலகுமாறு கோரி கடந்த ஏழு நாட்களுக்கு மேலாக முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டத்துக்கு ஆதரவாக முன்னெடுக்கப்படவுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (அ)

## சகல தமிழ்க்...

தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா தெரிவித்தார்.

அனைத்து தமிழ் கட்சிகளின் கலந்துரையாடல் யாழ்ப்பாணம் இளங் கலைஞர் மண்டபத்தில் நேற்று மாலை இடம் பெற்றது.

தற்போது நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி தொடர்பிலேயே 10 தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து நேற்று மாலை கலந்துரையாடலில் ஈடுபட்டன.

இந்தக் கலந்துரையாடலில் சிவில் சமூக அமைப்புகள், காணாமலாக்கப்பட்டோர் அமைப்புகள், தமிழ் அரசியல் கட்சிகள் என்பன பங்குபற்றியிருந்தன.

அத்துடன் அரசியல் ஆய்வாளர்கள், புத்திஜீவிகள் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

இந்த கலந்துரையாடலின் பின்னர் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து பொதுவான குழு ஒன்றை அமைத்து அதனூடாகச் செயற்பாடுகளை முன்னெடுக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி சிறிகாந்தா தெரிவித்தார். (அ)

## இலங்கைத்...

முதல்வரின் வழிகாட்டுதலின் பேரில் அவ்வாறு வரும் இலங்கைத் தமிழர்கள் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இலங்கைத்தமிழர்களுக்குத் தூத்துக்குடி துறைமுகத்தில் இருந்து உணவு தானியங்கள், காய்கறிகள், மருந்துகள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை அனுப்புவதற்கு விரைவில் உரிய வசதியை செய்து தருமாறும், யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள மீனவர்களை முன்கூட்டியே விடுதலை செய்வதற்குத் தேவையான சட்டபூர்வ உதவிகளை மேற்கொள்ளுமாறும் கோருகிறேன் - என்றுள்ளது. (அ)

ஈழநாடு
Eelanadu

அடுத்த கட்ட நகர்வு என்ன?

# சஜித்தின் தலைமையில் இன்று விசேட கூட்டம்!

கொழும்பு, ஏப். 17

ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷவுக்கு எதிரான குற்றப் பிரேரணை மற்றும் அரசுக்கு எதிரான நம்பிக் கையில்லாப் பிரேரணை ஆகியன தொடர்பில் இறுதி முடிவெடுப்பதற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் விசேட கூட்டமொன்று இன்று நடைபெறவுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் கட்டாயம் பங்கேற்குமாறு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதத்துக்கான இரண்டாவது வார பாராளுமன்ற அமர்வு எதிர்வரும் 19 ஆம் திகதி ஆரம்பமாகின்றது.

குற்றப் பிரேரணை மற்றும் நம்பிக்கையில்லாப் பிரேரணை அந்த வாரத்தில் சபாநாயகரிடம் கையளிப்பதற்கு ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டிருந்தது.

எனினும், சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு பேச்சு முன்னெடுக்கவுள்ள நிலையில் இவ்விரு பிரேரணைகளையும் முன்வைத்தால் அது இலங்கையின் பொருளாதாரத்துக்கு பெரும் தாக்கமாக அமைந்து விடும், அவசர உதவி கிடைப்பதில் சிக்கலை ஏற்படுத்த விடும் என்பதால் பிரேரணைகளை முன்வைப்பதை தற்காலிகமாக பிற்போடுமாறு ஐக்கிய மக்கள் சக்திக்கு, பொருளாதார நிபுணர்களால் ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனவே, ஒரு வாரம்வரை இதனை ஒத்திவைப்பதற்கு முடியுமா அல்லது இது விடயத்தில் கையாள வேண்டிய அணுகுமுறைகள் பற்றி ஆராயவே அவசர கூட்டத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# இந்த அரசை விரட்டுவோம்



## சஜித் அணி சபதம்

கொழும்பு, ஏப். 17

“ராஜபக்ஷ அரசை விரட்டுவதற்காக எந்தவொரு தரப்புடனும் இணைந்து செயற்படுவதற்கு தயார்.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

மொனறாகலையில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

ஜனாதிபதிக்கு எதிராக குற்றப் பிரேரணையும், அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையும் நிச்சயம் முன்வைக்கப்படும். அதன் பின்னர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ராஜபக்ஷ ஆட்சியை விரட்டுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

ராஜபக்ஷக்கள் நாட்டைவிட்டு, வெளியேறுவதை தடுக்க மக்கள் நீதிமன்றத்தை நாடுவார்கள். கப்ரால் வெளியேறுவதை தடுப்பதற்கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டுள்ளது - என்றார். (அ)

# தமிழ் தரப்புக்களால் நடத்தப்படும் கூட்டங்களில் பங்கேற்கமாட்டோம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் அறிவிப்பு

வவுனியா, ஏப். 17

தமிழ் தரப்புக்களால் நடத்தப்படும் இரண்டு கூட்டங்களுக்கு எமக்கு அழைப்பு விடுக்கப்பட்ட போதிலும் அதில் பங்கேற்கமாட்டோம் என காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று வவுனியா ஊடக அமையத் தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்-

சிங்களத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்வது தந்தை செல்வா, ஜி.ஜி.பொன் னம்பலம், எம்.திருசெல்வம் ஆகியோ ருக்கு செய்யும் துரோகமாகும்.

இரண்டு தமிழ் தரப்புகளால் இரண்டு கூட்டங்களில் பங்கேற்க எங்களுக்கு அழைப்பு வந்தது. இந்த நிகழ்ச்சிகளில் பங்கேற்க மாட்டோம் என முடிவு செய்துள்ளோம்.

இந்த இரண்டு தரப்பும் தமிழர்களின் அரசியல் ஆசையை தீர்க்க அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளை அழைத்து உதவி கோர முடிவு செய்தால், நாங்கள் எதிர்கால கூட்டத்தில் பங்கேற்போம். என்றனர்.

# இந்தியாவில் ஒதுங்கிய முல்லைத்தீவுப் படகு

முல்லைத்தீவு, ஏப். 17

முல்லைத்தீவில் இருந்து கடல் தொழிலிற்குச் சென்ற இரு கடற்தொழிலாளர்களுடன் படகு ஒன்று இயந்திரக் கோளாறு காரணமாக இந்தியாவில் கரை ஒதுங்கியுள்ளது.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த இரு கடற்தொழிலாளர்கள் பயணித்த படகு நேற்று தூத்துக்குடியில் கரை ஒதுங்கியுள்ளது.

இதன்போது முல்லைத்தீவு மாவட்டத்தையும், மன்னார் மாவட்டத்தையும் சேர்ந்த இரு கடற்தொழிலாளர்கள் இந்தியாவில் கரை சேர்ந்தனர் எனக் கூறப்பட்டது.

இது தொடர்பில் இந்தியப் பொலிஸார் மேலதிக விசாரணைகளில் ஈடுபட்டுள்ளனர்.

# சட்டவிரோதமான உத்தரவுகளை அமுல்படுத்த முன் சிந்தியுங்கள்!

## இராணுவத் தளபதியிடம் சரத் பொன்சேகா கோரிக்கை

கொழும்பு, ஏப். 17

சட்டவிரோதமான உத்தரவுகளை அமுல்படுத்துவதற்கு முன்னர் பல தடவைகள் சிந்திக்குமாறு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கோரிக்கை விடுத் துள்ளார்.

பாதுகாப்புச் செயலாளர் ஜெனரல் கமால் குணரத்ன மற்றும் படைகளின் பிரதானியும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா ஆகியோரிடம் அவர் இந்த கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

தமது உத்தரவு மற்றும் கட்டளை களின் கீழ் பயங்கரவாதத்தை தோற்கடிப் பதற்கான மனிதாபிமான நடவடிக்கை யில் படையினரை வழிநடத்திய பாதுகாப்புச் செயலாளரும் இராணுவத்தள பதியும் நாட்டில் தற்போது முன்னெடுக் கப்படும் அமைதியான மக்கள் எழுச்சிப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு, ஊழல் ஆட்சியாளர்களால் பிறப்பிக்கப்படும் சட்டவிரோதமான உத்தரவுகள் தொடர் பில் பல தடவைகள் சிந்தித்து செயற்படு வார்கள் என எதிர்பார்ப்பதாக சரத் பொன்சேகா கூறினார்.

ஊழல் மற்றும் வினைத்திறனற்ற ஆட்சியின் காரணமாக நாட்டில் ஏற்பட் டுள்ள வாழ்வதற்கான நெருக்கடியினால் எழுந்துள்ள சாதாரண சிவில் சமூகத்தின் மீதான அழுத்தம், அமைதியான மற்றும் வன்முறையற்ற மக்கள் போராட்டமாக மாறியுள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தமது அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக, பாதிக்கப்பட்டுள்ள அப்பாவிப் பொதுமக்களை ஒடுக்குவதற்கு ராஜபக்ஷ அரசாங்கம் மேற் கொள்ளும் எந்த வொரு முயற்சியும், மிகவும் வெறுக்கத்தக்க, உலகில் அதிருப்தியை ஏற்படுத்தும் நடவடிக் கைகள் சரத் பொன்சேகா குறிப்பிட்டார்.

தமக்கு கீழ் மனிதாபிமான நடவடிக்கையில் ஈடுபட்ட போர் வீரர்கள், சர்வ தேசத்தின் மத்தியில் அபகீர்த்திக்கும் அதிருப்திக்கும் உள்ளாவதை எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தாம் எதிர்பார்க்கவில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.

எனவே, ஊழல் ஆட்சியாளர்களால் பிறப்பிக்கப்படும் மக்களுக்கு எதிரான சட்டவிரோத கட்டளைகளை நடை முறைப்படுத்துவதற்கு முன்பதாக நூறாயிரம் தடவைகள் சிந்திக்குமாறு சரத் பொன்சேகா, பாதுகாப்பு செயலாளர் மற்றும் இராணுவத்தளபதியை வலியுறுத்தியுள்ளார். (அ)

# புல்மோட்டை பிரதேசத்தில் மின்னல் தாக்கி 2பேர் மரணம்

திருமலை, ஏப். 17

திருகோணமலை- புல்மோட்டை பகுதியில் மின்னல் தாக்கி இருவர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

புல்மோட்டை - கரையாவெளி ஆற்றிற்கு இறால் பிடிப்பதற்காகச் சென்றபோதே மின்னல் தாக்கி உயிரிழந்துள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இதில் புல்மோட்டை நாலாம் வட்டாரத்தைச் சேர்ந்த 70 வயது முதியவரும், புல்மோட்டை ஹமாஸ் நகரைச் சேர்ந்த 35 வயது குடும்பஸ்தருமே இச்சம்பவத்தில் உயிரிழந்துள்ளதாகத் தெரியவருகின்றது. (அ)

# ஜனாதிபதி தலைமையில் உயர்மட்ட கலந்துரையாடல்

கொழும்பு, ஏப். 17

நாட்டின் தற்போதைய நிலை குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் உயர்மட்டக் கலந்துரையாடல் ஒன்று நேற்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

முதற்கட்ட கலந்துரையாடலில் நிதி அமைச்சர் அலி சப்ரி, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க, ஜனாதிபதியின் செயலாளர் காமினி செனரத், ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க மற்றும் நிதி அமைச்சின் செயலாளர் கே.எம்.எம். சிறிவர்தன ஆகியோர் கலந்துகொண்டனர்.

மற்றொரு கலந்துரையாடல் ஜனாதிபதி தலைமையில் நிதி, வலுசக்தி மற்றும் சுகாதார அமைச்சுக்களின் அதிகாரிகளுடன் இடம்பெற்றது. (அ)

# மோ. சைக்கிள் ரயிலுடன் மோதி தந்தையும் மகனும் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 17

பலபிட்டிய - வெலிவிட்ட பகுதியில் இடம்பெற்ற ரயில் விபத்தில் தந்தை மற்றும் மகன் ஆகியோர் உயிரிழந்தனர். அந்தப் பகுதியில் உள்ள ரயில் கடவையில் ரயில் ஒன்றுடன், மோட்டார் சைக்கிள் ஒன்று மோதுண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த தந்தை மற்றும் மகன் ஆகியோரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர். (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 17.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : BEAT BOX
11.30 மணி : தடை அதை உடை-தற்காப்புக்கலை

**பகல்**

12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி



1.30 மணி : வீக் என்ட் மூவி-காதல் சடுகுடு
04.30 மணி : உதவும் கரங்கள்
5.00 மணி : COFFE WITH பிரமுகர் - அறிவிப்பாளர் பரணி




6.00 மணி : கலக்கல் ஸ்ரார்- திறமையாளர்களுக்கான களம்

**இரவு**

7.00 மணி : SPOTLIGHT
08.00 மணி : இரவுச் செய்திகள்
09.00 மணி :டான் பட்டிமன்றம்



10.00 மணி:-நேர்கொண்ட பார்வை - குமர குருபரன்




## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு